32
26
தெளிவான
காலநிலை
காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24

26 MAY 2014

விலை: யாழ். - 30/= வன்னி - 20/= கொழும்பு - 30/= | சுடர்: 29 | கதிர்: 181 | வள்ளுவர் ஆண்டு: 2045 | வைகாசி 12, திங்கள் 26.05.2014

## மலேசியாவில் கைதானோர் முக்கிய புலித் தலைவர்களாம்

கோலாலம்பூர், மே 26
மலேசியப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ள மூவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் என்று மலேசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மலேசியாவில் களாங் வலியில் நேற்றுப் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்ட சோதனைகளின்போது, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்று





மலேசியப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்படும் புலிச் சந்தேக நபர்கள்

21ஆம் பக்கம் பார்க்க

# தமிழின அழிப்பு ஆவணம் விரைவில் ஐ.நா. சபைக்கு

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே. 26
தமிழ் இன அழிப்பு நடைபெற்றமைக்கான ஆவணங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் திரட்டப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.
சுன்னாகம் பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
இந்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுப்பப்பட்டிருந்தன. குறிப்பாக இன அழிப்புத் தொடர்பில் பலர் பல்வேறு விடயங்களைப்



21ஆம் பக்கம் பார்க்க

## ரஜினி, விஜய் வீடுகள் முற்றுகை

யாழ்ப்பாணம், மே. 26
போர்க்குற்றவாளி மஹிந்த கலந்துகொள்ளும், நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதைத் தவிர்க்குமாறு கோரி இந்திய நடிகர்களான ரஜினிகாந்த், விஜய் ஆகியோரது வீடுகளை நேற்றுத் தமிழக மாணவர் அமைப்பினர் முற்றுகையிட்டனர்.
இலங்கை ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு மாணவர்கள் இந்த முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர்.
பொதுத் தேர்தலின் போது நரேந்திரமோடி ரஜினிகாந்தின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று ஆசி பெற்றிருந்தார். இந்த நிலை

21ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்த வருகையை எதிர்த்து தமிழகம் முழுவதும் திரண்டது

### நேற்றும் எதிர்ப்புப் போராட்டங்கள்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மே 17 இயக்கத்தினர்.

சென்னை,மே 26
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தமிழகம் முழுவதிலும் நேற்றும் பெரும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நரேந்திர மோடி ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் உணர்வாளர் ஒருவர் மண்ணெண்ணெய் ஊற்றித் தற்கொலைக்கும் முயன்றுள்ளார்.
'கொலைகார ராஜபக்ஷவுக்கு செங்கம்பளம் விரிக்காதே' என்ற கோஷங்கள் முழங்க தமிழகம் எங்கும் பரவலாகப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
பெரம்பலூர் புதிய பஸ் நிலையம் அருகே நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷவை, மோடி

21ஆம் பக்கம் பார்க்க

இந்திய ஊடகத்தின் பார்வையில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பயணம்



பக். 13

## புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் சொத்துகளும் அரசால் முடக்கம்

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

கொழும்பு, மே. 26
தடை செய்யப்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், தனிநபர்களின் சொத்துக்களை முடக்கும் வர்த்தமானி அறிவித்தலையும் இலங்கை அரசு வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ளார்.
கடந்த மார்ச் மாதம் வர்த்தமானி மூலம் 16 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் 424 தனிநபர்களுக்கு இலங்கை அரசு தடை விதித்தது. இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளை இவர்கள் மீளுருவாக்கம் செய்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே இந்தத் தடையை இலங்கை அரசு விதித்தது. இருப்பினும் இலங்கை அரசின் இந்தத் தடையைப் பெரும்பாலான நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறானதொரு நிலையில்,

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சர்வதேச தலையீடு தேவையற்றது

### பா.ஜ.கவின் முதுகெலும்பான ஆர்.எஸ்.எஸ் கருத்து

கொழும்பு, மே 26
இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை அவர்களின் முக்கியமான விருப்பங்களின் பேரில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத் தீர்க்கப்படவேண்டும் என்பதில் இந்தியா மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறது. நாம்



இலங்கையில் பிரிவினையை எதிர்க்கிறோம். இதில் வெளிநாடுகள் தலையிடுவதையும் எதிர்க்கிறோம் என்று புதிதாக இன்று பதவியேற்கும் பா.ஜ.க கூட்டணியின் முதுகெலும்பான ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் முக்கியஸ்தர் சேஷாத்திரி

21ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் மனங்களை வெல்லாமல் பதவிக்காக அடிபடுகிறோம் நாம்

### கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 26
தேர்தலின்போது மக்கள் மனங்களை வென்றெடுத்த நாம் தற்போது மக்கள் மனங்களை வெல்லத் தவறுகின்றோம் என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, கட்சி உறுப்பினர்கள் பலர் கட்சியின் கூட்டுப் பொறுப்பைத் தவிர்த்துத் தனித்தனியே செயற்படுவதுடன் வேறு சிலரின் பின்னணியுடன் இயக்கப்படுகின்றனர். சிலர் பதவிக்காக அடிபடுகின்றனர் என்று குற்றம் சாட்டினார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் சுன்னாகம் பிரதேச சபையில் இடம்பெற்றபோதே

21ஆம் பக்கம் பார்க்க

## இல்லாத மீனவரை விடுவிக்க உத்தரவு

கொழும்பு, மே 26
இலங்கைச் சிறைகளில் தமிழக மீனவர்கள் எவரும் இல்லாத நிலையில், சிறைகளில் உள்ள இந்திய மீனவர்களை

21ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் பிரச்சினைத் தீர்வுக்கு மோடி - மஹிந்த பேசவேண்டும்

### தமிழகக் கடலோர விசைப்படகுச் சங்கம் தெரிவிப்பு

இராமநாதபுரம்.மே 26
இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட வேண்டுமானால் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழகக் கடலோர விசைப்படகு நலன்புரிச் சங்கத் தலைவர் போஸ் தெரிவித்துள்ளார்.
மோடியின் பதவியேற்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வது

21ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யாழ்.ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று மாவட்ட செயலகத்தில்

யாழ்ப்பாணம், மே. 26

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத் தலைமையின் கீழ் இன்றைய கூட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இணைத் தலைமையின் கீழ் முதல்முதலாக நடைபெற்றது. இதன் போது கூட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் யாவும் முழுமையாக ஆரர்யப்பட்டிருக்கவில்லை.

இதனால் கடந்த கூட்டத்திலேயே, மே மாதம் 26 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் எஞ்சிய விடயங்களையும் ஆராய்வதாகத் தெரிவித்திருந்தனர். அதற்கமைய இன்றும், நாளையும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

> “ தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள், மாகாண சபை உறுப் பினர்கள் மற்றும் உள்ளூ ராட்சி மன்றத் தலைவர்கள் பங்கெடுக்கவுள்ளனர்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் பங்கெடுக்கவுள்ளனர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இன்றைய கூட்டத்தில் முழுமையாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-5)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கவனவீர்ப்புப் போராட்டம் புதனன்று

யாழ்ப்பாணம், மே. 26

காணி சுவீகரிப்புக்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் கிளிநொச்சியில் இன்று நடத்தப்படவிருந்த கவனவீர்ப்புப் போராட்டம் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் ஆகியோர் இணைந்து கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகக் கவனவீர்ப்புப் போராட்டம் 26 ஆம் திகதி நடத்துவதற்கான அழைப்பு கடந்த 21 ஆம் திகதி எமது கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரனினால் விடுக்கப்பட்டது. இதன் பின்னர் அவருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உயிர் அச்சுறுத்தல் கொடுக்கும் வகையில் மிரட்டல்கள் விடுக்கப்பட்டன.

இதனையடுத்து மே 22 ஆம் திகதி கட்சியின் தலைவராகிய என்னாலும், செயலாளர் செல்வராஜா கஜேந்திரனாலும் 26 ஆம் திகதி போராட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இதன் பின்னரும் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருக்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் சுவீகரிக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள், மக்களை இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்கக்கூடாதென்று மிரட்டியிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் மே 23 ஆம் திகதி எமது கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்துக்கு போராட்டத்துக்கான அனுமதி பெற்றுக் கொள்வதற்குச் சென்றிருந்தார். அங்கு எமது கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரனும் பொலிஸ் நிலையத்தில் நின்றிருந்தார். கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வரச் சொன்னமையால் தாம் அங்கு வந்ததாக அவர் எமது செயலாளரிடம் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் பொலிஸ் அத்தியட்சகரிடம் போராட்டத்துக்கான அனுமதி கோரப்பட்ட போது, எமக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அன்றைய தினம் (26 ஆம் திகதி) கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ வருகை தரவுள்ளதாகவும் அதனால் பாதுகாப்புப் பிரச்சினையைக் காரணம் காட்டி அனுமதி வழங்க முடியாதெனவும் கூறப்பட்டது.

இதன் பின்னர் கட்சியின் செயலாளரும், அமைப்பாளரும் பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டிருந்தனர். இதன் பின்னர் கட்சியின் அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் எங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தினார். தன்னைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் என்று அறிமுகப்படுத்தியவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

அதன் பின்னர் அவரைக் கொழும்புக்கு நாலாம் மாடிக்குக் கொண்டு சென்றுள்ளனர். எமது போராட்டத்தை தடுக்கும் நோக்குடனேயே இதனைச் செய்துள்ளனர். இருப்பினும் நாம் இதனை எதிர்கொண்டு எமது போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

இன்று நடைபெறவிருந்த போராட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை 11 மணிக்கு மாவட்டச் செயலக முன்றலில் நடைபெறும் - என்றார். (கு-5-104)

## மத்திய கிழக்கு செல்லும் பெண்கள் கருவுற்று நாடு திரும்பல் அதிகரிப்பு

### வேலைவாய்ப்புப் பணியகம் கூறுகிறது

கொழும்பு, மே. 26

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப் பெண்ணாகச் செல்வோர் கருத்தரித்த நிலையிலும் குழந்தையுடனும் நாடு திரும்புவது அதிகரித்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் துணை பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவிக்கையில்,

கடந்த இரு வருட காலப்பகுதியில் கருவுற்ற நிலையிலும் குழந்தையுடனும் சுமார் 300 பெண்கள் வரை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டிருந்தாலும் சட்டப் பிரச்சினை காரணமாக அழைத்து வர முடியாதவர்களும் அதிகம் இருக்கின்றனர்.

இந்தப் பெண்களை பொறுத்த வரை கணவன், மனைவியாகச்சென்று கர்ப்பமுற்றவர்களும் இருந்தாலும் அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானது.

கூடுதலானோர் தமது தனிப்பட்ட நடத்தை காரணமாகவே கர்ப்பமடைந்தள்ளார்கள். சில சந்தர்ப்பங்களில் பாலியல் பலாத்தாரம் என்று அவர்கள் சொன்னாலும் சட்ட ரீதியான விசாரணைகள் மற்றும் மருத்துவ பரிசோதனை போன்ற விஞ்ஞான ரீதியான சோதனைகளின்போது, தாம் விருப்பத்துடன் நடந்துகொண்டதாக அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். இருந்தாலும் இங்கு அது பற்றிய தகவல்களை வெளியிட அவர்கள் விரும்புவதாக இல்லை. நாட்டை விட்டுப் புறப்பட முன்பு இது தொடர்பிலான அறிவுத்தல்கள் பணியகத்தினால் அவர்களுக்கு வழங்கப்பட்டாலும் சிலர் பிரச்சினையில் சிக்கிக்கொள்கின்றார்கள்.

கணவன் இன்றி கருத்தரிப்பது மத்திய கிழக்கு நாடுகளில் கடுமையான தண்டனைக்குரிய குற்றமென்பதால் தான் கூடுதல் பணம் செலவு செய்து இலங்கைக்கு அழைத்து வர வேண்டிய நிலை ஏற்படுகின்றது. நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட அவர்கள் பின்னர் பணியகத்தினால் பராமரிக்கப்பட்டு, பெண்ணுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உளவள ஆலோசனை வழங்கப்பட்டு, குழந்தை சிறுவர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குடும்பத்தில் அவர்கள் இணைக் கப்படுகின்றனர் - என்றார். (கு-10)

## அறிக்கை கோரும் ஆணைக்குழு

கொழும்பு, மே 26

இணையத்தளங்கள் முடக்கப்பட்டமை தொடர்பில், பொது ஜன ஊடக அமைச்சு மற்றும் தொலைத் தொடர்பு ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

அதன் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்துள்ளார்.

இணையத்தளங்களின் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பல் வேறு தரப்பில் இருந்து இவ்வாறான தடை குறித்து முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. இதன் அடிப்படையில் இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இந்தியா சென்ற மஹிந்தவுடன் யாழ். நகர மேயர் யோகேஸ்வரி

மோடியின் பதவியேற்புக்குச் சென்றுள்ள ஜனாதிபதியின் குழுவில் யாழ்.மாநகர முதல்வர் மற்றும் அமைச்சர் தொண்டமான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

முன்னதாக இந்தக் குழுவில் பங்கெடுக்க வருமாறு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்திருந்தபோதும் அவர் நிராகரித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ்.மாநகர முதல்வரும், அமைச்சர் தொண்டமானும் இதில் சென்றுள்ளனர்.

இந்தியாவின் 14 ஆவது பிரதமராக நரேந்திரமோடி இன்று மாலை பதவியேற்கவுள்ளார். இந்தப் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு நரேந்திர மோடி அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். இதற்கமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்தப் பதவியேற்பு விழாவில் பங்கேற்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். இதற்கு தமிழகத்திலிருந்து கடும் எதிர்ப்பலைகள் தோன்றியிருந்தன.

> “ க.வி.விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்தி ருந்தபோதும் அவர் நிராகரித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ்.மாநகர முதல்வரும், அமைச்சர் தொண்டமானும் இதில் சென்றுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் தனது பயணக் குழுவுடன் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்திருந்தார். வடக்கு முதலமைச்சர் அழைப்பை நிராகரித்திருந்தார்.

இந்த நிலையில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் ஜனாதிபதியுடைய குழுவில் இடம்பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (கு-5)

## நஞ்சுக் கிழங்கை உண்டவர் சாவு

யாழ்ப்பாணம், மே 26

தோட்டத்தில் மண் வெட்டிக் கொண்டிருந்தவர் மண்வெட்டியில் அகப்பட்ட நஞ்சுக் கிழங்கைச் சுட்டுச் சாப்பிட்டதால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டுச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

தெல்லிப்பழை வித்தகபுரத்தை சேர்ந்த சோதிநாதன் வைரவநாதன்(வயது-22) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 22 ஆம் திகதி தனது தோட்டக் காணியில் மண் வெட்டிக் கொண்டிருந்தபோது மண்ணில் இருந்து கிடைத்த கிழங்கை தோட்டத்தில் வைத்துச் சுட்டுச் சாப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக வயிற்றுப்போக்கு ஏற்பட்டதால் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திசாலைக்கு மாற்றப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் காலை சிகிச்சை பலனின்றிஉயிரிழந்தார். (கு-14-101)


**இலவச சட்ட ஆலோசனை முகாம்**

★நீங்கள் அரச அல்லது தனியார் நிறுவனத்தினால் அநீதிக்கு இலக்கானவரா?

★அரச காணிகள் பற்றிய பிரச்சினைகளில் தொடர் புடையவரா?

★லஞ்சம், ஊழல், மோசடி தொடர்பில் நீங்கள் செய்த முறைப்பாட்டுக்கு நீதி கிடைக்க வில்லையா?

★பிரபல்யமான சட்டத்தரணிகளால் நாம் உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்குகின்றோம்

★நீதித்துறை நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளுடன் இணைந்து நடத்தப்படும் சட்ட முகாம்

**மே 27/28 வவுனியா**

2 ஆம் குறுக்குத்தெரு,
வைரவர் கோயில் வீதி,
வவுனியா.

காலை -9.00- மாலை 04.00 வரை

(T/14079)(3.6.4)

024-222 7676

நேர்மையின் புகலிடம்
டிரான்ஸ் பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா

# வடக்கில் வாக்களிக்கத் தகுதியானோரை உறுதிப்படுத்துவதில் கூட்டமைப்பு தீவிரம்

## உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்களிடையேயான கலந்துரையாடலில் மாவை எம்.பி. எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மே 26

வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் வடக்கிலுள்ள வாக்களிக்க தகுதியான சகலரையும் உள்வாங்குவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு தொகுதிவாரியாகவும் மாகாண சபை உறுப்பினர்களை நியமித்து பதிவு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் சுன்னாகம் பிரதேச சபையில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**பாதிப்புக்கள்**

வடக்கில் வாக்காளர் தொகை குறைவடைந்துள்ளமையினால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் குறைவடைந்துள்ளது. அத்துடன் நிதி ஒதுக்கீடுகள், பல்கலைக்கழக அனுமதி என்று பல்வேறு விதமான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது புதிய ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே எமது மக்களை வாக்காளர்களாகப் பதிய வைக்க வேண்டியது அவர்களது வாக்குகளைப் பெற்று வந்த மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களின் பொறுப்பு. ஒவ்வொரு தொகுதிவாரியாகவும் மாகாண சபை உறுப்பினர் இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்படுவார். அவருக்கு கீழே ஒவ் வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவும்எமதுகட்சிஉறுப்பினர்கள் நியமிக் கப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**வீடு வீடாகச் செல்லுங்கள்**

எங்களது உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வீடு வீடாகச் சென்று, அவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளார்களா என்பதை உறுதிப்படுத்துங்கள். நீங்கள் ஒவ்வொருவரது வீட்டையும் தேடிச் சென்றால் அவர்களும் சந்தோஷப்படுவார்கள். அத்துடன் தொடர்ந்து வரும் தேர்தலுக்கு அது உங்களுக்கு உதவும்.

எனவே வாக்காளர் பதிவில் அக்கறையில்லாமல் இருந்தால் நாம் நிறையவற்றை இழந்து விடுவோம். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் வீடு வீடாகச் சென்று மக்களை வாக்காளராகப் பதிவு செய்யச் சொல்லுங்கள். மேலும் வெளிநாடுகளில் அங்கு பிரஜா உரிமை பெறாதவர்களையும் இங்கு வாக்காளர்களாகப் பதிவு செய்ய முடியும். இவ்வாறு செய்வதன் ஊடாகவே எமது வாக்காளர் தொகையில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியும்.

**ஒரு லட்சத்தால் அதிகரிப்பு**

இதன் போது கருத்துத் தெரிவித்த மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினரும் மனது வைத்து வாக்காளர் பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டால் அடுத்த ஆண்டு ஒரு லட்சம் பேரால் எமது வாக்காளர்களை அதிகரிக்கச் செய்யலாம் - என்றார்.

**பாதிக்கப்பட்டவர்களின் கணக்கெடுப்பு**

வாக்காளர் பதிவு நடவடிக்கை போன்று, காணிகள் சுவீகரிப்புக்குள்ளானவர்கள், போரினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களையும்திரட்ட வேண்டும். காணிகள் சுவீகரிக்கப்பட்ட விவரங்கள், இங்குள்ள காணியின் உரிமையாளர் எங்கே இருக்கின்றார் என்று அந்த மக்களின் பிரதி நிதிகளாக இருக்கின்றஎங்களுக்குதெரியாதவிடயங்கள் எல்லாம், இராணுவப் புலனாய் வாளர்களுக்கு தெரிந்திருக்கின்றது. அந்த விவரங்களைநாமும்திரட்ட வேண்டும். காணி சுவீகரிப்புக்காக வழக்கறிஞர்கள்இலவசமாகவழக்காட தயாராக இருக்கின் றனர். அதற்கு மக்களின் காணி விவரங்கள் திரட்டப்படவேண்டும். மேலும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் விவரங்கள் விசேடமாகத்திரட்டப்பட வேண்டும்என்றுநாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா குறிப்பிட்டார். (வ-5)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வு நேற்று சுன்னாகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை கட்டடத் தொகுதிக்கு வெளியே இராணுவத்தினர் சைக்கிள்களில் போவதும் வருவதுமாக இருந்தனர். வெளியே நின்ற செயலமர்வுக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்ப் பாதுகாவலரிடம் 'விடுப்பு' விசாரிப்பதையும் அவதானிக்க முடிந்தது. (ஒ-21)

# ஆஸ்துமா நோயாளருக்கு தனியான கிளினிக் ஆரம்பம்

## சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, மே 26

சாவகச்சேரி மருத்துவமனையில் ஆஸ்துமா நோயாளர்களுக்கான தனியான கிளினிக் நாளைமறுதினம்புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இனிவரும் நாள்களில் ஆஸ்துமா கிளினிக் பிரதி புதன் கிழமைகளில் பிற்பகல் ஒரு மணிக்கு மருத்துவமனை கிளினிக் அறையில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மருத்துவமனையில் பிரதி வியாழக்கிழமைகளில் நடத்தப்பட்டு வரும் நீரிழிவு நோய் கிளினிக்கில் சிகிச்சை பெற்று வந்த ஆஸ்துமா நோயாளர்கள் புதிய கிளினிக்கில் இனி சிகிச்சை பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையில் நடத்தப்படும் நீரிழிவு கிளினிக்கில் மாதம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் கலந்து கொள்வதால் நோயாளர்களின் நலன்கருதி ஆஸ்துமா நோயாளர்களுக்கு தனியான கிளினிக் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# குழப்பம் விளைவித்த மூவருக்குச் சிறை

தென்மராட்சி, மே 26

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த சாவகச்சேரி, வேலணை மேற்கு, புதுக்குடியிருப்பு ஆகியவற்றைச் சேர்ந்த மூவருக்குத் தலா ஒரு மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் வியாழக்கிழமை உத்தரவிடப்பட்டது. (வ-9)

# யாழ்ப்பாணம் வருகை தந்த சர்வமதக் குழு



*கொழும்புத்துறையில் கலந்துரையாடல் இடம்பெற்றபோது....*

கொழும்புத்துறை, மே 26

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தென்னிலங்கை சர்வமதக் குழுவினரின் பல் சமய கருத்தாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் சர்வமதக் குழுவினர், 3 குழுக்களாகப் பிரிந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று கிராமங்களில் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர். நேற்றும் கலந்துரையாடல்கள் நடைபெற்றிருந்தன. இன்றும் நடைபெறும்.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய மண்டபம், யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி, நல்லூர் துர்க்கா மணி மண்டபம் என்பவற்றில் அந்தப் பகுதியில் சார்ந்த மக்களையும் உள்ளடக்கி கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன.

வருகை தந்துள்ள அங்கத்தவர்கள் இரு தினங்களும் அந்தந்தக் கிராம மக்களின் இல்லங்களில் இரவுப்பொழுதைக் கழித்து வருவது குறிப்பிடத்தக்கது. இறுதிநாள் அனைவரும் இணைந்து சுற்றுலா நிகழ்விலும் ஈடுபடவுள்ளனர். (வ-135)

# ஆன்ம சாந்தி வழிபாடுகளுக்கு இடையூறு; நல்லிணக்கத்தை நலிவடையச் செய்யும்

## யாழ்.வருகை தந்த சர்வமதக் குழுவினருடனான சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் தெரிவிப்பு

கொழும்புத்துறை, மே

இறந்து போன மக்களின் ஆன்ம சாந்திக்கான வழிபாடுகளை நடத்தவும், ஆலயங்களில் மணி ஒலி எழுப்பி சமய அனுஷ்டானங்களை நிறைவேற்றவும் அண்மைய நாள்களில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்கு உண்டான இடையூறு குறித்து எமது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறான சம்பவங்கள் நல்லிணக்கத்தை உருவாக்குவதை விடுத்து நலிவடையவே செய்யும்.

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சர்வமத குழுவினருக்கும், யாழ்.சர்வமதப் பேரவையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

நாற்பதுக்கும் மேற்பட்ட சமயத் தலைவர்களும் . பொதுமக்களுமாக 60 பேர் கொண்ட தென்னிலங்கை சர்வமதக் குழுவினர் யாழில் மக்களைச் சந்தித்து கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட வந்துள்ளனர்.

இவர்களை வரவேற்கும் நிகழ்வில் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் பேசியபோது: "எனது இந்தக் கருத்து அரசியல் சார்ந்த பேச்சல்ல. இன்று நிலவுகின்ற சூழ்நிலைகள் இவ்வாறு இருப்பதால் தெரிவிக்க விரும்புகிறேன். பௌத்த குருமார் மற்றும் சமயத் தலைவர்களும் இதற்கான தீர்வை முன்னெடுக்க உழைக்க வேண்டுமென கேட்கிறேன்" என்றார்.

அங்கு யாழ்.நாக விகாராதிபதி ஸ்ரீவிமலதேரர் கருத்துத் தெரிவிக்கும்போது: "இவ்வா றான சர்வமதஅமைப்புகளின்வருகை காலத்தின் தேவையாகும். வழிபாட்டு நிகழ்வுகளுக்கு ஏற்பட்ட தடைகளுக்காக எமது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

மௌலவி ஆசிப், அருட்திரு டி.டிக்சன் அடிகள் ஆகியோரும் உரையாற்றினர்.(ஒ-135)

# அடிப்படை வசதிகளின்றி இயக்கச்சி பொதுச் சந்தை

இயக்கச்சி, மே 26

இயக்கச்சி பிரதேச விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்காக அமைக்கப்பட்ட பொதுச் சந்தை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருப்பதால் சந்தையில் வியாபாரம் செய்யும் 25 இற்கு மேற்பட்ட வியாபாரிகளும் சந்தைக்கு வரும் விவசாயிகளும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையைச் சுற்றி வேலி இல்லாததால் பகல்வேளையில் வரும் கட்டாக்காலி கால்நடைகள் அங்கு வைத்திருக்கும் மரக்கறிவகைகள், வெற்றிலை போன்றவற்றை தினமும் அழித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. சந்தை வளாகம் கட்டாக்காலி கால்நடைகளின் வாசஸ்தலமாக இருப்பதால் காலையில்சந்தைக்குள் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

அத்துடன் கிணறு வசதி, மலசலகூட வசதி போன்றவை இல்லாததால் சந்தைக்கு வருவோர் கைகழுவக் கூட தண்ணீர் இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (வ-9)

## நாமல் நடத்திய கூட்டத்தில் குளவிகள் கொட்டின மக்களுக்கு

வவுனியா கலாபோகஸ்வெல கிராமத்தில் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்ட கூட்டமொன்றில் குளவிகள் கொட்டியதில் 30 போர் வைத்திசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கூட்டம் இடம்பெற்றபோது கொழுத்தப்பட்ட பட்டாசுச் சத்தத்திற்கே குளவிகள் கலைந்து மக்கள் மீது கொட்டியதாக தெரியவருகின்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் மீது குளவி கொட்டியதை அடுத்து நாமல் ராஜபக்ஷவை அவரது மெய்ப்பாதுகாவலர்கள் பாதுகாத்துள்ளனர்.

இதன்போது மெய்பாதுகாவலர்கள் உட்பட பொலிஸார், இராணுவத்தினர், பொது மக்கள் மீதும் குளவி கொட்டியுள்ளது.

குளவிக் கொட்டுக்கு இலக்காகியவர்கள் உடனடியாக வவுனியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர். (ஐ)

## மீனவர் விடுதலையை இந்திய அமைப்புக்கள் வரவேற்கின்றனவாம்

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து இந்திய மீனவர் களையும் விடுதலை செய்யப்போவ தாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்ததை, இந்திய மீன வர்களின் தரப்பில், நிரபராதி மீனவர் களின் விடுதலைக்கான அமைப்பு வரவேற்றிருக்கிறது.

இது குறித்து பி.பி.ஸி. தமிழோசையிடம் பேசிய அந்த அமைப்பின் தலைவரான அருளானந்தம், இந்திய பிரதமராக பதவியேற்கவிருக்கும் நரேந்திர மோடியின் வித்தியாசமான நடவடிக்கையின் விளைவாக நடக்கும் இது வரவேற்கத்தக்கது என்று கூறினார்.

அதேவேளை, இந்தியச் சிறைகளில் இருக்கும் இலங்கை மீனவர்களை இந்திய அரசு விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கை மீனவர்களுடனான தமது பேச்சுகள் தொடர்ந்து நடக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை மீனவர்கள் எல்லை கடந்து மீன்பிடிக்கும் விவகாரத்துக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டுமானால், இந்திய மீனவர்கள் ஆழ்கடலுக்கு சென்று, மீன் பிடிப்பதற்கான மாற்று வசதிகளை இந்திய அரசு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்றும் அதற்கு ஒரு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் அருளானாந்தம் கூறியுள்ளார்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு மஹிந்த வருகையை பயன்படுத்துக

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சென்னை, மே 26

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண, அந்த நாட்டு ஜனாதிபதி ராஜபக்ஷ வருகையை பயன்படுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலர் ஜி.ராமகிருஷ்ணன் இன்று வெளியிட்ட அறிக்கையில்:-

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 5 ஆண்டுகள் கடந்த பின்பும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் எந்த நடவடிக்கையையும் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அதற்கான முயற்சிகளும் இருப்பதாய் தெரியவில்லை. இறுதிக்கட்ட மோதலின்போது நடைபெற்ற மனித உரிமைகள் மீறல்கள் குறித்து இதுவரையிலும் விசாரணைகள் எதுவும்நடைபெறவில்லை. வடக்கு மாகாண தேர்தல்கள் நடைபெற்று புதிய அரசாங்கம் பொறுப்பேற்று 8 மாதங்கள் ஆகிவிட்ட பின்பும் அந்த அரசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லாத நிலை நீடிக்கிறது. இராணுவ அதிகாரி ஒருவரே வடக்கு மாகாணத்தின் ஆளுநராக நீடிக்கிறார்.

> "வடக்கு மாகாண தேர்தல்கள் நடைபெற்று புதிய அரசாங்கம் பொறுப்பேற்று 8 மாதங்கள் ஆகிவிட்ட பின்பும் அந்த அரசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லாத நிலை நீடிக்கிறது.



ஜி.ராமகிருஷ்ணன்

இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு அதிகாரப் பரவலுக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் சிதைந்துள்ள நிலையில், தமிழர்களின் புனர்வாழ்வுக்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலை நீடிக்கிறது.

இந்தநிலையில், இந்திய அரசு தன்னுடைய ராஜீய உறவுகள் மற்றும் அழுத்தங்களின் மூலமாகவும், பேச்சுவார்த்தையின் மூலமாகவும் இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

புதிய அரசின் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு இலங்கை அதிபர் மகிந்தா ராஜபக்ஷ வருவதைப் பயன்படுத்தி கூடுதல் நிர்ப்பந்தம் கொடுத்து மத்திய அரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கும், இன்னபிறவற்றுக்கும் தீர்வு காண வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு மத்திய அரசை வலியுறுத்துகிறது"- என்றுள்ளது. (வ)

# மஹிந்தவுக்கு விடுத்த அழைப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும்

## விஜயகாந்த் வலியுறுத்து

சென்னை, மே 26

நரேந்திரமோடி பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு விடுத்த அழைப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜய காந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"பாரத நாடு பல மாநிலங்களை உள்ளடக்கி வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வருகிறது. பாரதப் பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்கும் விழாவில் இலங்கை அதிபர் ராஜபக்ஷ கலந்து கொள்ள அழைப்பு விடுத்து இருப்பதை தே.மு.தி.க. ஏற்றுக் கொள்ளவில்லை. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தே.மு. தி.க. சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சிக்கு ஆறு மாதங்கள் அவகாசம் கொடுத்திருந்து, அதன் பின்புதான் மக்கள் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டினோம். அதே போல் புதிதாக பொறுப்பேற்கும் நரேந்திர மோடி ஆட்சிக்கும் ஆறு மாதகாலம் அவகாசம், அதன் பின்புதான் எந்த விமர்சனமாக இருந்தாலும் வைக்கப்பட வேண்டும்.

நரேந்திரமோடி பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள இலங்கை அதிபர் ராஜபக்ஷவை மட்டும் அழைக்கவில்லை, ஒட்டு மொத்த இந்தியாவின் எதிர்ப்பு நாடான பாகிஸ்தான் உள்பட 8 நாடுகளும் இந்த விழாவில் பங்கேற்பதாக உறுதி அளித்துள்ளனர்.

ராஜபக்ஷவை மட்டும் இந்த விழாவுக்கு பங்கேற்க அழைத்திருந்தால் நிச்சயமாக தே.மு.தி.க. இந்த விழாவில் பங்கேற்காது. நரேந்திரமோடியை நேரில் சந்தித்தபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழகத்தில் மீனவர் பிரச்சினை உள்ளிட்ட அனைத்து தமிழக பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதாக என்னிடம் உறுதி அளித்துள்ளார். இதை மீண்டும் அவரிடம் தே.மு.தி.க. சார்பில் நான் வலியுறுத்துவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (வ)



விஜயகாந்த்

## கல்விமுறை மாற்றவேண்டும்

*- சரத் அமுனுகம*



இலங்கையின் கல்வி முறை நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான வகையில் மாற்றப்பட வேண்டும் என நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் பேராசிரியர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கலகெதர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய பெண்களை மையப்படுத்தி வேலைத் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியையான திருமதி சிவேணேஸ்வரி வில்வராஜன் அவர்களின் மகனும் எமது பாடசாலையில் தரம் - 7 இல் கல்வி கற்கும் மாணவனுமாகிய வில்வராஜன் எழிலன் அவர்களின் திடீர் மறைவினால் எமது பாடசாலை சமூகம் மிகுந்த கலையடைவதுடன் மாணவனின் பிரிவால் துயருற்றிக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாடசாலை சமுகம்
பாடசாலை ஆசிரியர்
நலன்புரி சங்கம்

யா/இணுவில் இந்துக் கல்லூரி

## மரண அறிவித்தல்

### திருமதி. சுபத்திராதேவி- யோகேந்திரா

(வேம்படி காரைநகர்)

காரைநகர் சக்கலாவோடையைப் பிறப்பிமாகவும், வேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுபத்திராதேவி யோகேந்திரா நேற்று (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், யோகேந்திராவின் (ஓய்வுபெற்ற அரசாங்க அச்சக ஊழியர்) அன்பு மனைவியும், யசோதா (ஹொலண்ட்), சுகிர்தா (கனடா), மயூர குமரன்,ஜெயக்குமார் (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காண்டீபன் (ஹொலண்ட்) சிவகுமார் (கனடா), சந்திர வித்தியா, தர்சிகா (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும்,சயானா (ஹொலண்ட்), சபினா (ஹொலண்ட்), அஸ்வின் (கனடா), அனுசன் (கனடா), தாரணி, பவித்ரன், பிரஷ்ணவி (கனடா), பிரசாந் (கனடா) ஆகியோரின் பாமிகு பேர்த்தியாரும்,காலஞ்சென்றவர்களான லீலாவதி,அரியரட்ணம் ஆகியோரின் சகோதரியும்,காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் டார்சிகா, லலிதாராணி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2014) செவ்வாய்க் கிழமை பி.ப. 2.00 மணிக்க அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேம்படி காரைநகர்**
**யோகேந்திரா (கணவர்) 021 221 1771**
**மயூரகுமாரன் (மகன்) 071 801 5328**
**காண்டீபன் (மருமகன்) 031 243 783 226**
**சிவகுமார் (மருமகன்) 001 416 208 9343**

**தகவல்:**
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னையா இராசையா



வடமராட்சி கிழக்கு ஆழியவளையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா இராசையா அவர்கள் 25-05-2014 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னையா [illegible] தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற [illegible] அவர்களின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற தவராசா, அமிர்தலிங்கம் (Former Clerk Irrigation Department-Srilanka National Salt Corporation) சுந்தரலிங்கம்(Storekeeper Srilanka Cement Corporation), மின்னல் ஒளி, சிறீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வநாயகம், செல்லபாக்கியம், தங்கவேலு, காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சீரகத்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், லட்சுமி சோதி, தவமணி, ஜெகதாம்பாள், ஆனந்தராசா, குணவேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், சியாமளா, சர்மிளா, சத்தியா, அமுதா, ரேணுகா, தர்சினி, கார்த்திகா, எழில் அரசி, துசிந்தன், ஜீவன், வாசுகி, கண்ணன், சசி, இளங்கோ, திலீபன், கஸ்தூரி, கோபிநாத், வசீகரன், சிவலக்ஷன், கேதீஸ்வரன், மதிவதினி ஆகியோரின் அன்புப் பேரனும், சஞ்சிகன், சதுர்சிகா, கனிறா, கனிஷ்கன், சிறீகாந்த், அருள்நதி, றியான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 27-05-2014 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்று பின்னர் ஆழியவளை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
அமிர்தலிங்கம்(மகன்) சுவிட்சர்லாந்து - +41444518760,
இலங்கை - +94772074689, சுந்தரலிங்கம் (மகன்) நோர்வே
- +4722213555, சிறீதரன்(மகன்) - +94771982778
இளங்கோ - +94778893914

(சி-13002)

தகவல்:
குடும்பத்தினர்.

## வெளிநாட்டுச் செலாவணியை கட்டுப்படுத்த புதிய திட்டங்கள்

கொழும்பு.மே 26
நாட்டில் இருந்து வெளிநாட்டுச் செலாவணி வெளிச் செல்வதை குறைப்பதற்காக இலங்கையின் தேசிய காசோலை விடுவிப்பு மையம் புதிய திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.
அதற்கமைய விசா மற்றும் மாஸ்டர்காட், எமெக்ஸ் காட் ஆகியவற்றுக்கு பதிலாக உள்ளூர் இலத்திரனியல் அட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.
தற்போது இலத்திரனியல் அட்டை கொடுப்பனவு முறைகளில் 95 வீதமானவை உள்ளூர் கொடுப்பனவுகளாக மேற்கொள்ளப்படுகின்றன. 5 வீதமே சர்வதேசக் கொடுப்பனவுகளாக உள்ளன.
பெரும்பாலான பரிமாற்றங்கள் வெளிநாட்டுச் செலாவணியாக மேற்கொள்ளப்படுவதால் நாட்டில் இருந்து நிதிவெளியேற்றம் இடம்பெறுகிறது. எனவே இதனையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய காசோலை விடுவிப்பு மையம் தெரிவித்துள்ளது. (ச)

# ஆளும் தரப்பு எம்.பிக்கள் எதிரணிக்குத் தாவத் தயார்

## குடும்ப ஆட்சியில் ஊழல் தலைதூக்கியுள்ளது என்கிறார் திஸ்ஸ

கொழும்பு.மே 26
அரசின் மீது அதிருப்தி கொண்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஆளும் தரப்புக்குள் இருக்கின்றார்கள். அவர்கள் வெகு விரைவில் இந்த அரசை வீழ்த்துவதற்கு எதிரணியில் இணைவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி பொதுச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.



திஸ்ஸ அத்தநாயக்க

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசு மீது அதிருப்தி கொண்ட அமைச்சர்கள் பலர் பொதுவான அடிப்படையில் எம்முடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக பேசி வருகிறார்கள். எனவே நாடாளுமன்ற அல்லது ஜனாதிபதித் தேர்தலொன்று வரும் போது அவர்கள் அரசுக்கு எதிராக எதிரணியில் இணைந்து ஒத்துழைப்பார்கள்.
அரசுக்கு எதிரான போராட்டம் அரசுக்கு உள்ளேயே தற்போது ஆரம்பித்துள்ளது. சில அமைச்சர்கள் நேரடியாக அரசை விமர்சிக்க ஆரம்பித்துள்ளார்கள். மேலும் பலர் மறைமுகமாக அரசை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க ஆரம்பித்துள்ளார்கள்.
குடும்ப ஆட்சியில் ஊழல் தலைதூக்கியுள்ளது. இதனை இல்லாதொழித்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளது. அதற்கான நகர்வுகளை நாம் இப்போது ஆரம்பித்துள்ளோம்.
இந்தியாவில் குடும்ப ஆட்சிக்கும் ஊழலுக்கும் எதிராக பரப்புரைகளை முன்னெடுத்தநரேந்திர மோடி அமோக வெற்றி பெற்றுள்ளார். அவ்வாறான ஒரு நிலைமை இலங்கையிலும் ஏற்படும்-என்றார். (ச)

## ஹெல உறுமய கட்சியுடன் சோபிததேரர் இன்று பேச்சு

கொழும்பு.மே 26
அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஜாதிக ஹெல உறுமயவின் தூதுக்குழு. சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரரை இன்று திங்கட்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது.



சோபித தேரர்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிப்பது தொடர்பாகவே இந்தச் சந்திப்பின் போது முக்கியமாக ஆராயப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது குறித்து மாதுளுவாவே சோபித தேரர் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் ஏற்கெனவே பேச்சுக்களை நடத்திவருகின்றார்.
பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. மற்றும் ஜே.பி.வி. என்பவற்றுடன் ஏற்கெனவே அவர் பேச்சுக்களை நடத்தியுள்ளார். அதன் தொடர்ச்சியாகவே அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார். (ச)



கொழும்பு மாவட்ட அபிவிருத்திக்காக 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பிரபா கணேசனிடம் கையளித்தார்.

## லஞ்சம் பெற்ற கொன்ஸ்டபிள் மாட்டினார்

கொழும்பு.மே 26
லஞ்சம் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில்பொலிஸ்கொன்ஸ்டபிள் ஒருவர் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.
வாகன விபத்துடன் தொடர்புடைய சாரதி ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காதிருப்பதற்காக குறித்த கொன்ஸ்டபிள் 3000 ரூபாவை லஞ்சமாக பெற்றுக் கொண்டுள்ளார்.
இந்த நபர் கிராதுரு கோட்டை பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் கிராதுரு கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றுபவர் என்று தெரியவந்துள்ளது. (ச)

## வீதி கட்டமைப்பு வரைபடத்தின் தயாரிப்புப் பணிகள் நிறைவு

### அடுத்த மாதம் வெளியிட தீர்மானம்

கொழும்பு.மே 26
இலங்கையின் புதிய வீதி கட்டமைப்பு வரைபடத்தின் தயாரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று இலங்கை நில அளவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
புதிய வரைபடத்தை அடுத்த மாதம் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மேலதிக நில அளவையியலாளர் பி.எம்.பி.உதயகாந்த குறிப்பிட்டார்.
நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிவேக வீதிகளும் இந்த வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.
புதிய அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட அனைத்து வீதிகளும் குறித்த வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
வாகனப் போக்குவரத்துக்கு பயன்படுத்தக் கூடிய அனைத்து வீதிகள் தொடர்பான தகவல்களும் அதில் அடங்கியுள்ளன என்று அவர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி , காலி போன்ற பிரதான நகரங்களின் அனைத்து வீதிகள் தொடர்பான தகவல்களையும் புதிய வரைபடத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மாணவர் குழுக்கள் மோதல்

நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் இரு மாணவ குழுக்களுக்கிடையில் மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த மோதலில் காயமடைந்த மாணவர் ஒருவர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் பல மாணவர்கள் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.
அங்கு நடைபெற்ற மோதலை பல்கலைக்கழக பாதுகாப்பு பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள அதேவேளை மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ச-10)

## டெங்கு ஒழிப்பில் புதிய முறைமை

கொழும்பு,மே 26
கொழும்பு நகரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் புதிய முறையை நடைமுறைப்படுத்த மாநகர சபை தீர்மானித்துள்ளது.
அதற்கமைய டெங்கு நுளம்புகள் பரவும் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு இரசாயன புகை விசுறும் நடவடிக்கையை முன்னெடுக்கப்படவுள்ளது என்று மாநகர சபையின் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதான சுகாதார வைத்தியர் ரூவன் விஜயமுனி தெரிவித்தார்.
வீட்டுத் தோட்டங்களுக்கு அருகிலும் வீட்டினுள்ளும் இரசாயனப் புகையை விசுறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
கொழும்பு நகரில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக நகரின் பல இடங்களில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

> "கொழும்பு நகரில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக நகரின் பல இடங்களில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் கொழும்பு நகரில் மாத்திரம் 1350 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.
குறித்த காலப் பகுதியில் கொழும்பு நகரில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் ஐவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


## ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது அங்கேயே தேர்தல் செயலக செயற்பாடு

### முடிவுகளை விரைவில் அறிவிக்க விசேட ஏற்பாடு

கொழும்பு.மே 26
தேர்தல் முடிவுகளை விரைவாக அறிவிக்கும் நோக்கில் எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலின்போது தேர்தல் செயலகத்தின் செயற்பாடுகள் அங்கு செயற்படுத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தல் செயலகத்தால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் அங்கிருந்து முன்னெடுக்கப்படும் அதேவேளை ஊடகங்களுக்கு உடனுக்குடன் தகவல்களை வழங்கும் வகையில் அனைத்து முடிவுகளையும் தகவல் திணைக்களத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
பதுளையை மையமாகக் கொண்டு இந்த செயற்பாட்டை மேற்கொள்ளும் போது மொனராகலை மாவட்டத்தின் வாக்குப் பெட்டிகளைக் கொண்டு வருவதற்கு சில மணித்தியாலங்கள் எடுக்கும். ஆனால் ஏனைய நடவடிக்கைகளை இலகுபடுத்திக்கொள்ள முடியும்.
கொழும்பு மாவட்டத்தில் முன்னர் 5 1/2 லட்சமாக இருந்த வாக்குகள் தற்போது 4 1/2 லட்சமாகக் குறைவடைந்துள்ளன. உறுப்பினர்கள் தொகை 21 இலிருந்து இப்போது 19 ஆகக் குறைந்துள்ளது.
இதே நிலைதான் யாழ்ப்பாணத்துக்கும் நடந்துள்ளது. அங்கு 9 ஆக இருந்த உறுப்பினர் தொகை தற்போது 6 ஆகக் குறைவடைந்துள்ளது. வாக்காளர்கள் தம்மை வாக்காளர் டாப்பில் பதிவு செய்வதில் காட்டும் அலட்சியமும் இதற்கு ஒரு காரணமாகும்.
வாக்காளர் இடாப்பில் பெயர்கள், அடையாள அட்டை இலக்கங்கள் பிழையாக அச்சிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் வருகின்றன. அத்தகைய பிழையைத் திருத்துவதற்கு உதவியாக சம்பந்தப்பட்டவர்கள் தமது சரியான பெயர், அடையாள அட்டை இலக்கத்தை எமக்கு எழுத்து மூலம் தெரிவித்தால் நாம் அந்த விடயத்தில் கவனம் செலுத்துவோம்-என்றார். (ச)


## கிழக்கில் விவசாயத்துறையை விரிவுபடுத்த அமைச்சு திட்டம்

திருகோணமலை.மே 26
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் கிழக்கு மாகாணத்தில் விவசாயத்துறையை துரிதமாக மேம்படுத்த விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் மேலதிகப் பயிர்ச் செய்கையை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன நடவடிக்கை எடுத்துள்ளார்.
கிழக்கில் நீண்டகால குறுங்கால பயிர்ச் செய்கைகளை மேம்படுத்துவது தொடர்பில் இருவாரங்களுக்குள் தேவையான திட்டங்களையும் யோசனைகளையும் முன்வைக்குமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.
இது தொடர்பில் கிழக்கு மாகாண அரசியல் தலைவர்கள். மாகாண விவசாய அதிகாரிகளை அமைச்சர் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். (ச)



அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளியால் மரங்கள் முறிந்து வீட்டின் மீது விழுந்ததில் கூரை சேதம் அடைந்துள்ளது. (ச)

## டெங்கு குறித்து ஆய்வு செய்ய ஏறாவூரில் நிபுணர்கள் குழு



ஆய்வில் ஈடுபடும் நிபுணர்கள்

ஏறாவூர்.மே 26
ஏறாவூரில் டெங்கு நுளம்புகள் குறித்து ஆய்வுசெய்ய கொழும்பிலிருந்து பூச்சியியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்று ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி எம். எச்.எம் தாரிக் தெரிவித்தார்.
கடந்த சில மாதங்களாக ஏறாவூரில் டெங்கு நோய்க்கு ஆளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அடுத்து ஏறாவூரில் கூட்டிணைந்த டெங்கு ஒழிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மும்முரமாக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.
இதன் ஓர் அங்கமாகவே ஏறாவூரில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாவதாக நம்பப்படும் கிணறுகள் மற்றும் நீர்த்தாங்கிகள்ளப் பரிசோதிக்க கொழும்பிலிருந்து விஷேட பூச்சியியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். கொழும்பிலிருந்து வருகை தந்த சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்பு கட்டுப் பாட்டுப் பிரிவைச் சேர்ந்த குழுவினர் ஏறாவூரில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகுவதாக நம்பப்படும் இடங்களைப் பரிசோதித்து வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார். கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட விஷேட பூச்சியியல் நிபுணர்கள் தங்கியிருந்து ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். அதன் பின்னர் அவர்களது அறிக்கை கிடைத்ததும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறும் என்று அவர் கூறினார்.
டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சுகாதாரத் திணைக்களம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, ஏறாவூர் நகரசபை, பிரதேச செயலகம், கல்வித் திணைக்களம் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (ச)

# எரிபொருளில் கலப்படம் தத்தளித்தனர் மீனவர்கள்

### மீன்பிடித் தொழிலும் பாதிப்பு

கல்முனை.மே 26
கல்முனைப் பிராந்தியத்திலுள்ள காரைதீவு, மாளிகைக் காடு, சாய்ந்தமருது மற்றும் கல்முனை பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்களின் இயந்திரப் படகுகள் கலப்படமுள்ள எரிபொருள் பாவனையால் சேதமடைந்துள்ளன. அதனால் மீனவர்கள் நடுக்கடலில் தத்தளித்துள்ளனர்.
நடுக்கடலில் பழுதடைந்த சில படகுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கரைக்கு இழுத்து கொண்டுவரப்பட்டுள்ளன.
இந்த எரிபொருள் கலப்பட மோசடியால் காரைதீவில் 35 படகுகளும் மாளிகைக்காட்டில் 42 படகுகளும் சாய்ந்தமருது மற்றும் கல்முனைப் பகுதிகளில் 40 படகுகளும் பாதிக்கப் பட்டுள்ளன. அதனால் மீனவர்கள் பெரும் நட்டமடைந்திருப்பதுடன் மீன்பிடியும் பாதிப் படைந்துள்ளது.
கடந்த சில நாள்களாக கடலுக்குச் சென்ற இயந்திரப் படகுகள் திரும்பி வர தாமதம் ஏற்பட்டது. நடுக்கடலில் இயந்திரம் இயங்க மறுத்ததால் அங்கேயே தத்தளித்துக் கொண்டிருந்தன. இந்த விடயம் குறித்து அறிந்ததும் ஏனைய பெரிய படகுகள் சென்று அவற்றை கட்டி இழுத்து கரைக்குக் கொண்டு வந்தன. இந்தப் படகுகளின் இயந்திரத்தை கழற்றிப் பார்த்த போதே மண்ணெண்ணெய்யில் டீசல் அல்லது வேறு எண்ணெய் கலக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது என்று காரைதீவு மீனவர் அமைப்பின் ஆலோசகர் தெரிவித்தார்.
வழமையாக மண்ணெண்ணெய் வாங்கும் எரிபொருள் நிலையத்தில் வாங்கிய எண்ணையே இவ்விதம் கலப்படம் செய்யப்பட்டிருப்பதாக நாம் கண்டறிந்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார். அரச எரிபொருள் மானியம் கடந்த பல மாதங்களாக எமக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த வேளையில் இவ்வாறு மோசடியும் இடம்பெற்றுள்ளது என்று அவர் கூறினார். எனவே சம்பந்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதுடன் பாதிக்கப்பட்ட மீனவருக்கு நட்டஈடு பெற்றுத் தர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## வாகனம் விபத்து

மட்டக்களப்பு.மே 26
மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையிலிருந்து தேற்றாத்தீவு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வாகனம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விபத்துக்குள்ளாகியுள்ளது.
இந்த வாகனத்தில் பயணித்த மூவரும் எதுவித ஆபத்துக்களுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என்று பொலிஸார் கூறினார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

**20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி **திரவியம் திருநாவுக்கரசு**



தோற்றம் 09 ★ 06 ★ 1934

மறைவு 26 ★ 05 ★ 1994

எம்மைப் பெற்றெடுத்து பாசத்துடன் வளர்த்த எங்கள் அன்பான அம்மாவே! எங்களுடன் வாழ்ந்த காலத்தில் உங்கள் அன்பான அரவணைப்பும் இனிமையான பேச்சும் அழகான புன்சிரிப்பும் என்றும் இதயத்தில் நிலைத்திருக்கும் தாயே!
உங்களது ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல வெல்வில் முருகனை வேண்டுகிறோம்.
முருகமூர்த்தி வீதி, ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!
சங்கானை.

குடும்பத்தினர்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் சிரார்த்ததின அழைப்பும்**

**அமரர் சரவணமுத்து சுப்பிரமணியம்**



மண்ணில் 08.03.1950 விண்ணில் 06.06.2013

திதி: திரயோதசி

எங்கள் அன்புத் தெய்வமே அப்பா...
ஓராண்டு சென்றாலும் நாளாக நாளாக
தீராது உங்கள் பிரிவின் வலி
நூற்றாண்டுகள் பல கடந்தாலும் உங்கள்
கருணைமுகம் காணாது அடங்காது
நாம் கதறி அழும் ஒலி வானுறையும்
தெய்வசந்நிதியில் ஆன்ம ஈடேற்றம் பெற
இறையாசி வேண்டி அஞ்சலிக்கின்றோம்.

இன்று (26.05.2014) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆத்மஜோதி வீதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

குடும்பத்தினர்
(48469)(45.6)

**மரண அறிவித்தல்**

**சின்னத்தம்பி சாந்தகுமார்** (சுக்குட்டி)



அந்திரான் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், France Sevran ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சாந்தகுமார் 13.05.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-மகிழம்மா தம்பதியரின் ஆசை மகனும், உசன் மிருசுவிலைச் சேர்ந்த ராகினியின் அன்புக் கணவரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2014) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.
இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
(48471) (7.6.3)


அந்திரான், சண்டிலிப்பாய். | பாஸ்கரன் (0033 143 840 562) | தகவல்: சகோதரர்கள்.

# புகைப்பொருள் எதிர்ப்பு தினம்

வலி.தென்மேற்கு, மே 26
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வ தேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஜி.றஜீவ், யாழ்.றோட்டறிக் கழகச் செயலாளர் சி.அனுராஜ், வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் ச.சிவகுமாரன், எதிரணித் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)

## பொறுப்பற்ற செயலால் களவு

வட்டுக்கோட்டை, மே 26
சனசமூக நிலையத்தின் நிர்வாகிகளின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் இரண்டு களவு போன சம்பவம் ஒன்று வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.
வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டம் என்னும் இடத்தில் உள்ள அம்பாள் சனசமூக நிலையம் போதிய பாதுகாப்பு அற்ற நிலையில் காணப்படுவதுடன் அங்கு தையல் இயந்திரங்கள் வைக்கப்பட்டு இருந்த அறையும் ஒருவார காலத்துக்கு முன்னர் திறந்துவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் சனசமூக நிலைய நிர்வாகம் மற்றும் பிரதேச சபையின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி அலுவலருக்குத் தெரிவித்துள்ளார்கள்.
இதனையிட்டு யாரும் உரிய கவனம் எடுக்காத நிலையில் தற்போது குறிப்பிட்ட இரண்டு தையல் இயந்திரங்களும் களவு போயுள்ளன.
இது சம்பந்தமாக சனசமூக நிலைய நிர்வாகத்தினால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-86)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்கு வீதி வாசலில் புதிய கோபுரம் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. அடுத்து வரும் பெருந்திருவிழாவுக்கு முன்னர் இராஜகோபுரம் திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-135)

## திருவையாறு பழைய நிலைக்கு

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி திருவையாறு கிராமத்தை மீண்டும் பழைய நிலைக்கு உருவாக்கித் தர வேண்டும் என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
திருவையாறு குடியேற்றத் திட்டம் படித்த வாலிபர்களுக்கென உருவாக்கப்பட்ட திட்டமாகும். இங்கு உருவாக்கப்பட்ட மேட்டு நீர்ப்பாசன செயற்பாடுகள் போர் காரணமாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.
இரணைமடுக் குளம் புனரமைக்கப்பட்டபோது திருவையாறு ஏற்று நீர்ப்பாசனம் சாத்தியமாகும் என அதிகாரிகள் தெரிவித்திருந்ததாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-18)

# பயிற்சி நெறிகளுக்கு வளவாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள்

பருத்தித்துறை, மே 26
பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தினால் நடத்தப்படவுள்ள திறன் மேம்பாட்டு பயிற்சி நெறிகளுக்கு வளவாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
கீழ்வரும் துறைகளில் பயிற்சி நெறிகள் இடம்பெறவுள்ளன.
சங்கீதம் - கிராமியம், சாஸ்திரீயம், நடனம் -கிராமியம், புதிய ஆக்கம், பரதம், கதகளி, ஓவியம்-சிற்பம்- செதுக் கற்கலை, ஆக்கத்திறன்- நாடகமும் மற்றும் அரங்கக்கலைகளும், பாரம்பரியக் கைப்பணிக்கலைகள் -பிரதேசத்துக்கான உரித்தான உற்பத்திப் பொருள்களால் மேற்கொள்ளப்படும் கைப்பணிப் பாடநெறிகள் (உதாரணம் -மண், பிரம்பு, சிரட்டை, பனை ஓலை போன்றன). சோதிடம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், உடல், உளநல அபிவிருத்திக் கலை- அரங்கக்கலை, யோகாசனம், சிங்களம், தமிழ் , ஆங்கிலம்- மொழிப்பாட நெறிகள், முன்பள்ளி மாணவர்களுக்கான திறன் அபிவிருத்தி, கணினிப் பயிற்சி, தகவல் தொடர்பாடல், தையல்-பின்னல்-சமையல்-மணமகள் அலங்கரிப்பு-அழகியல்.
விண்ணப்பதாரிகள் அனைவரும் பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவினுள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் தமது முழுப் பெயர், பிறந்த திகதி, வயது, முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கல்வித்தகைமை, துறைசார்ந்த தகைமை போன்ற சுயவிவரங்கள் அடங்கிய தமது விண்ணப்பத்தை பிரதேச செயலர், பிரதேச செயலகம், பருத்தித்துறை என்ற முகவரிக்கு எதிர்வரும் 02.06.2014 திங்கட்கிழமைக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க)

எட்டாண்டு பிரிவுத்துயரினிலே...



மண்ணில்
22.04.1971

விண்ணில்
26.05.2006

அமரர்
சின்னத்துரை புவிராசா (புவி)
(சியான் ரேடர்ஸ் உரிமையாளரும்,
3rd Dane கராத்தே ஆசிரியரும் )

உறவுகள் உம் புகழை கூறிட பிறந்தவரே!
நேற்று நடந்ததுபோல் உம்துயரம்
எட்டு ஆண்டுகள் போனது தெரியவில்லை
ஆண்டுகள் எத்தனை தான் ஆனாலும்
உங்கள் நினைவுடன் என்றும் நாம் இருப்போம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்
(சியான் ரேடர்ஸ்)

(48473) (45.5)

## பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின்வவுனியா மாவட்ட அலுவலகத்தினால் 10 பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தப் பயிற்சி நெறிகள் பகுதி நேரம், முழுநேரம் என்ற அடிப்படையில் இடம்பெற வுள்ளன.
இதில் பாடசாலையை விட்டு விலகியவர்கள்தொழில் வாய்ப்புக்கள் இன்றி காணப்படும் இளைஞர்கள், யுவதிகள் இணைந்து பயிற்சிகளைப் பெற முடியும்.
இந்தப் பயிற்சி நெறிகள் பூர்த்தி செய்வதன் ஊடாக தேசிய மட்டத்திலான சான்றிதழைப்பெற்றுக்கொள்வதுடன் தொழில் வாய்ப்பினையும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விவரங்களை இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## 'பப்பாசி சாறு' தயாரிப்பு நிலையம்

வவுனியா, மே 26
பப்பாசிச் சாற்றை சந்தைப்படுத்தும் முயற்சிக்கு வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களம் ஊக்கம் அளித்திருப்பதாக விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு தெரிவித்தார்.
இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்:
வவுனியா மாவட்டத்தில் புளியங்குளம் பகுதியில் பெருமளவான பப்பாசிச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அங்கு ஒரு "பப்பாசிச்சாறு" தயாரிக்கும் நிலையத்தையும் நிறுவியுள்ளோம்.
இந்த முயற்சிக்கு ஐ.எல்.ஓ நிறுவனம் உதவி அளித்துள்ளது.
பப்பாசிச் செய்கையால் ஒரு ஏக்கருக்கு இரண்டு லட்சம் ரூபா வருமானத்தை மாதாந்தம் ஈட்ட முடியும் என்றார். (க-402)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் பொன்னுச்சாமி
நாகராசா



தோற்றம்
22.03.1931

மறைவு
26.04.2014

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து துயரத்தில் பங்குகொண்ட மற்றும் அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இன்று (26.05.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(48350)(7.6.3)

## வாகன விபத்தில் இருவர் சாவு

கொழும்பு.மே 26


மொரட்டுவ, கொரலவெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து காரும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின்போது 20 வயது இளைஞனும் 16 வயது சிறுமியும் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)



தேசிய சுதந்திர முன்னணியின் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட யோசனைகளை அமைச்சர் விமல் வீரவன்ச ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் வைத்துக் கையளித்தார். (ச)

# தாதிய மாணவருக்கு கொடுப்பனவு இல்லை

## தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு.மே 26

மகப்பேற்று சிகிச்சை மற்றும் உளவியல் சுகாதாரப் பயிற்சிகளைப் பெறும் தாதிய மாணவர்களுக்கு மூன்று மாதங்களுக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை என்று அரச தாதியர் உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன் காரணமாக குறித்த மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

இதேவேளை தாதிய மாணவர்களின் இந்தப் பிரச்சினை குறித்து இதுவரை எவ்வித மான முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கவில்லை என்று சுகாதார அமைச்சின் வைத்திய சேவைக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுனில் டி அல்விஸ் தெரிவித்தார்.

குறித்த தாதிய மாணவர்கள் தொடர்பில் அவர்கள் பயிற்சி பெறும் தாதியக் கல்லூரிகள், சிரேஷ்ட அதிகாரிகள் ஊடாக உரிய தகவல்கள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்ட பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

கொடுப்பனவு கிடைக்காத தாதிய மாணவர்களின் விவரங்களும் சுகாதார அமைச்சுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

தாதிய மாணவர்களுக்கு இவ்வாறான பிரச்சினை நிலவும் பட்சத்தில் அதுதொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீது தாக்குதல்

கொழும்பு.மே 26

காலி, வந்துரம்ப பிரதேசத்தில் தமது கடமையில் ஈடுபட்டிருந்த பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரொஹன தெரிவித்தார்.

இவ்வாறு கடமையில் இருக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு உபுல் ரொஹன கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

## கரடி தாக்கியதில் இருவர் காயம்



மட்டக்களப்பு.மே 26

மட்டக்களப்பு, வாகரை காட்டில் தேன் எடுக்கச் சென்ற இருவர் கரடியின் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு, வாகரை கட்டுமுறிவு காட்டில் இடம்பெற்றுள்ளது.

தேன் எடுக்கும் தொழிலுக்கு அடர்ந்த காட்டுக்குள் சென்ற வேளை கரடி இந்த நபர்களை கண்டதும் கோபம் கொண்டு தாக்கியுள்ளது.

அதனையடுத்து அவர்கள் தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக மரத்தில் ஏறி உயிர் தப்பியுள்ளனர். அதனால் அவர்களின் கால்கள் மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டுள்ளது என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஈடுபட்டு வருகின்றனர். (ச-10)

## தரம் - 1 மாணவர்கள் அனுமதிக்கு வாக்காளர் பட்டியல் கட்டாயமன்று

### கல்வி அமைச்சிடம் தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள்

கொழும்பு.மே 26

முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்ப்பதற்கு கோரப்படும் ஆவணங்களில் வாக்காளர் பட்டியல் கோருவதை கட்டாயப்படுத்த வேண்டாம் என்று கல்வியமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இவ்வாறு வாக்காளர் பட்டியலைக் கோருவதால் பெருமளவிலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் கல்வியமைச்சுடன் கலந்துரையாடப்படும் என்று அவர் கூறினார்.

> இந்த முறை வெளிநாடுகளில் உள்ளோருக்கும் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

வாடகை வீடுகளில் உள்ளோர் தமது பிள்ளையை பாடசாலைக்கு சேர்க்கும்போது பிரதான ஆவணமான வாக்காளர் பட்டியலை பாடசாலைக்குச் சமர்ப்பிப்பது எந்தளவு சாத்தியமாகும் என்பதை கல்வியமைச்சு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

இதேவேளை இந்த முறை வெளிநாடுகளில் உள்ளோருக்கும் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. அவ்வாறிருந்தும் 66 வீத வாக்குப் பதிவே இடம்பெற்றுள்ளது. தேர்தல் தொடர்பில் அக்கறையுடன் செயற்படும் நாடுகள் சில அங்குள்ள தூதரகங்களுக்கு வாக்குப்பெட்டிகளை அனுப்புமாறு எம்மைக் கேட்டுக் கொண்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சட்டம் நிலைநாட்டச் சபை

### ஆராய்கிறது அரசு

சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட ஆலோசனை சபை ஒன்றை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஒழுக்கம் நிறைந்த மற்றும் சட்டத்தைக் கடைப்பிடிக்கும் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்காக கொள்கை மற்றும் திட்டங்களை வகுக்க தேவையான அனுபவங்களைக் கொண்டவர்கள் இந்த சபைக்கு நியமிக்கப்பட உள்ளனர்.

சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ச)

## 65 வீதமான மாணவர் போஷாக்குள்ளவர்கள்

### கல்விச் சேவைகள் அமைச்சர் தகவல்

கொழும்பு.மே 26

பாடசாலை செல்லும் மாணவர்களில் 65 வீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் போதிய போஷாக்குள்ளவர்கள் என்று கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு மற்றும் பால் வழங்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் போஷாக்கின்மை வீதத்தை மேலும் குறைக்க முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

40 லட்சம் பாடசாலை மாணவர்களில் 10 லட்சம் மாணவர்களுக்குத்தான் மதிய போசன உணவு வழங்கப்படுவதாக முன்வைக்கப் பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. போசனைக் குறைவு உள்ள மாணவர்களுக்கு மாத்திரமே மதிய போசனம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களில் 65 வீதமான மாணவர்கள் போதியளவு போசனையுடைய மாணவர்கள். இந்தத் திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் குறை போசாக்கை மேலும் நிவர்த்திசெய்ய முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ச)

## கண்களில் ஏற்படுகின்ற விபத்தை தவிர்க்கலாம்

### தேசிய கண் வைத்தியசாலை தகவல்

கொழும்பு.மே 26

கண்களில் ஏற்படும் விபத்துக்களை பெரும்பாலும் தவிர்த்துக்கொள்ளமுடியும் என்று தேசிய கண் வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

திடீர் விபத்துக்களால் நாளாந்தம் 180 இற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்கு வருகின்றனர் என்று கண் சத்திரசிகிச்சை நிபுணர் முதித்த குலதுங்க தெரிவித்தார்.

அவர்களில் 70 வீதமானவர்கள் பல்வேறுபட்ட வழிகளில் இவ்வாறான இடர்களுக்கு முகம்கொடுப்பதுடன், முறையான பாதுகாப்பு வழியை பின்பற்றாமையே கண்களில் விபத்துக்கள் ஏற்பட காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார். பாதுகாப்பான முறைமையைப் பின்பற்றும் போது இவ்வாறான இடர்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

கண்களுக்கு இவ்வாறான விபத்துக்கள் ஏற்படும் போது உடனடியாக உரிய வைத்தியர் ஒருவரை நாட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# உ.கிழங்கை பயிரிடுவதற்கு முன் குரக்கன் நடுகை நன்மை தரும்

## பூஞ்சணன் நோயைக் கட்டுப்படுத்த வழி கூறுகிறார் பணிப்பாளர்


கோப்புப்படம்

அச்சுவேலி, மே 26
"உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு முன்னர் தோட்டத்தில் குரக்கன் பயிரை நடுகை செய்யவும். உருளைக்கிழங்குப் பயிரில் பெருமளவில் ஏற்படும் பூஞ்சணன் நோயை குரக்கன் கட்டுப்படுத்தும். குரக்கன் பயிர் தொற்றுநீக்கி பயிராகும். உருளைக்கிழங்குச் செய்கைக்கு முந்திய குரக்கன் பயிர்ச்செய்கை பெருமளவில் நன்மைதரும்" என்று யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் இ.சிறிபாலசுந்தரம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கு முந்திய குரக்கன் பயிர்ச்செய்கை தொடர்பாக விவசாயப் பணிப்பாளர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் தோட்ட நிலங்களில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கு முந்திய குரக்கன் பயிர்ச்செய்கை உருளைக்கிழங்கு பயிருக்கு ஊட்டமாக அமையும். உருளைக்கிழங்கு பயிரில் ஏற்படும் பூஞ்சணன் நோய் உருளைக்கிழங்குப் பயிரை பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாக்கும். பூஞ்சணனைக் கட்டுப்படுத்துவதற்கு பெருமளவில் பங்கஸ்நாசினியை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் பெருமளவில் செலவு ஏற்படுவதோடு உருளைக்கிழங்கு விளைச்சலிலும் தாக்கம் ஏற்படும்.

உருளைக்கிழங்குச் செய்கை பண்ணுவதற்கு முன்னர் ஜூன் மாதம் குரக்கன் செய்கையை தோட்டத்தில் மேற்கொள்வதன் மூலம் உருளைக்கிழங்கில் ஏற்படும் பங்கஸ் நோய்க்கான தொற்று நீக்கு ஏற்படுவதோடு உடல்நலத்துக்கும் நன்மை பயக்கும். குரக்கன் தானியத்தையும் பெற்று எமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ள முடியும். அத்துடன் கணிசமான அளவு வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

குரக்கன் பயிர்ச்செய்கைக்கு குறைந்த காலத்தில் நல்ல விளைச்சலைத்தரும் சிறு குரக்கன் இனங்களை பயன்படுத்தலாம். ஜூன் மாதத்தில் குரக்கன் நாற்றுக்களை நடுகை செய்வதன் மூலம் குரக்கனை அறுவடை செய்து கொண்டு தோட்ட நிலங்களை காலபோக உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தலாம் என்று தெரிவித்தார். (வ-11)


வழந்துப் பொருள்கள் எடுத்து வரும் பக்தர்கள்.

# கல்லாரை ஆலய பொங்கலுக்கான வழந்துப் பானை, பொருள்கள்

## சனியிரவு எடுத்துச் செல்லப்பட்டன

வலி. வடக்கு, மே 26
மல்லாகம் தேவாலய வீதியில் அமைந்துள்ள சாடியடியிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாகம் கல்லாரை என்ற இடத்தில் உள்ள பெரியதம்பிரான் ஆலயத்துக்கு வேண்டிய பொங்கலுக்கான வழுந்துப் பானை மற்றும் படையல் பொருள்கள் ஆகியன சனிக்கிழமை இரவு 7 மணியளவில் தேவாலய வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி, நீதிமன்ற வீதி, கல்லாரை வீதி வழியாக பெரிய தம்பிரான் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த நிகழ்வில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் சந்திக்குச் சந்தி பூசை வழிபாடுகளும், இடம் பெற்றன. நேற்று ஞாயிற்றுக் கிழமை பொங்கல் வழிபாடுகள் அதிகாலைமுதல் நடைபெற்று நண்பகல் தீ மிதிப்பும் நடை பெற்றது. (வ-86)

# மண்டைதீவு மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்குக

## அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்து


யாழ்ப்பாணம், மே 26
மண்டைதீவில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மருத்துவமனைக்கு மீள் நியமன உதவி மருத்துவர் நியமிப்பதை நிறுத்தி நிரந்தர மருத்துவரை நியமிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவமனை கட்டட வேலைகள் பூர்த்தியடைந்த போதிலும் மருத்துவர் நியமனம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களால் மருத்துவமனையைத் திறப்பதில் தாமத மேற்பட்டு வருகிறது. இந்த நிலையில் மருத்துவமனையைத் திறப்பதற்கு முன்னர் ஓய்வு பெற்ற உதவி மருத்துவரை நியமிக்க சுகாதாரத் திணைக்களத்தினரால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை அறிந்த மண்டைதீவு மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குறித்த மருத்துவமனைக்கு (எம்.பி.பி.எஸ்) மருத்துவரை நிரந்தரப் பொறுப்பதிகாரியாக நியமிக்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மீளக்குடியமர்ந்த பின்னர் மருத்துவமனை இல்லாததால் அங்கு வாழும் குடும்பங்கள் தமது மருத்துவத் தேவைக்காக யாழ்ப்பாணம் செல்கின்றனர். பல மில்லியன் ரூபா செலவில் மருத்துவமனை அமைக்கப்பட்ட பின்னரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அங்கு வசிக்கும் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் செல்வதற்கு சுகாதாரத் திணைக்களத்தினர் முயற்சிகளை மேற்கொள்வதாக குற்றஞ்சாட்டி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் உள்ள மருத்துவமனையில் கடமையாற்றும் யாழ். குருநகரைச் சேர்ந்த மருத்துவர் மண்டைதீவு மருத்துவமனையில் கடமையாற்றச் சம்மதம் தெரிவித்தும் அவரை நியமிக்க சுகாதாரத் திணைக்களம் பின்னடிப்பது குறித்துக் கவலை தெரிவித்தனர். (வ)


வடக்கில் ரயில் பாதைப் புனரமைப்புக்காக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட கற்கள் ஆங்காங்கே வீதி ஓரத்தில் மலை போல் குவிக்கப்பட்டுள்ளன. தென்னை மரங்களுக்கு பசளைகள் போடப்பட்டதுபோல் காட்சியளிப்பதைக் காணலாம். (வ-20)

# பிராந்திய அலுவலகங்களுக்கு புதன்கிழமை மட்டும் வரலாம்

## சுகாதாரத் திணைக்கள ஊழியருக்கு விடுக்கப்படும் புதிய அறிவுறுத்தல்

தென்மராட்சி, மே 26
வட மாகாண சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது தேவைக்காக மாகாண சுகாதார அமைச்சு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரத் திணைக்களத் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு பிரதி புதன் கிழமைகளில் மட்டும் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களில் பணி புரிவோர் நிறுவனத் தலைவரின் அனுமதி பெறாமல் வார நாள்களில் குறிப்பிட்ட அலுவலகங்களுக்கு வருகை தருவது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் மாகாண சுகாதார அமைச்சு, சுகாதாரத் திணைக்கள தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு தமது தேவைக்காக வருவதானால் தாம் பணியாற்றும் நிறுவனத் தலைவரின் அனுமதி பெற்று புதன்கிழமைகளில் மட்டும் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# மக்களின் தேவைகள் குறித்து விவரம் திரட்டும் பணி ஆரம்பம்

## சாவகச்சேரி எல்லைக்குள் நேற்று முதல்

தென்மராட்சி, மே 26
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதி மக்களின் தேவைகள் பற்றிய விவரம் திரட்டும் பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றன.

ஆசிய மன்றத்தால் பயிற்றுவிக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் 48 உத்தியோகத்தர்கள் இந்தக் களப் பரிசோதனை மூலம் விவரங்களைப் பெற்று வருகின்றனர்.

நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் இந்த உத்தியோகத்தர்கள் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று நகர சபையால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான திருப்தி பற்றியும் மக்களுக்குச் செய்ய வேண்டிய தேவைகள் தொடர்பான விவரங்களையும் வினாக்கொத்து மூலம் பெற்று வருகின்றனர்.

> நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் இந்த உத்தியோகத்தர்கள் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று நகர சபையால் வழங்கப்படும்.

வடமாகாண உள்ளூராட்சி திணைக்களம் ஆசிய மன்ற அனுசரணையுடன் இந்த விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

"இலத்திரனியல் முறையில் குடிமக்கள் அறிக்கை அட்டை தயாரித்தல்" என்னும் படிவம் மூலம் மக்களிடம் வீதி அபிவிருத்தி சூழல் பாதுகாப்பு, மின்சாரம், சுகாதாரம், குடிதண்ணீர் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து வினாக்கொத்து மூலம் தகவல்களைப் பெற்று வருகின்றனர்.

இந்தத் திட்டம் தொடர்பான வடமாகாணத்தில் முதன் முறையாக சாவகச்சேரி நகர சபையில் மேற்கொள்ளப்படுவதாகவும் ஏனைய உள்ளூராட்சி சபைகளிலும் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களால் விவரங்கள் பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரசபையில் நடைபெற்றபோது வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்களுடன் கிராம அலுவலர்கள், சன சமூக அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், திட்டத்தின் உள்ளூர் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-9)


# புகைத்தல் தினத்தை முன்னிட்டு செயலமர்வு

தென்மராட்சி, மே 26
தென்மராட்சி பிரதேச சமுர்த்திச் சங்கத்தினர் உலக புகைத்தல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி செயலமர்வை நடத் தவுள்ளனர்.

பிரதேச சமுர்த்தி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக் களத்தினருடன் இணைந்து நடத்தப்படவுள்ள செயலமர்வில் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி மகா சங்க நிறை வேற்று உறுப்பினர்கள் சமுர்த்தி வாழ்வெழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினர், சமுர்த்தி வங்கிகளின் கட்டுப்பாட்டுச் சபையினர், தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள், அதிபர்கள் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (வ-9)

# கடலுக்கூடான ரயில் பாலம் அமைக்கும் பணிகள் துரிதகதியில்

மன்னார்,மே 26
மன்னார்த் தீவையும் பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் ரயில் பால வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.
இந்தப் பாலம் செளத்பார் கடற்பரப்பினூடாக அமைக்கப்பட்டு வருகின்றது. எனினும் குறித்த பாலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்ற போதும் அந்தப் பகுதியில் நீர் ஓட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் பாலவேலையை உரிய காலத்தில் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்று பணியாளர்கள் தெரிவித்தனர்.
இந்தப் பாதை பெரு நிலப்பரப்பான வங்காலையூடாக மன்னார்த் தீவை நோக்கி அமைக்கப்படுகின்றது. மன்னார் செளத்பார் ரயில் நிலையத்தை குறித்த ரயில் பாதை வந்தடையும் என்றும் அவர்கள் கூறினர்.
மேலும் பாலம் அமைக்கும் பணி கட்டம்,கட்டமாக இடம்பெற்று வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.
தற்போது கடலினுள் தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
நீரோட்டம் குறைவடையும் நிலையில் குறித்த பணிகள் துரித கதியில் ஆரம்பிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-56)


அமைக்கப்பட்டு வரும் ரயில் பாலம்...

## வருமானம் அனைத்தும் குடிதண்ணீருக்கு செலவு

### பூநகரி பிரதேச செயலர் தெரிவிப்பு

பூநகரி, மே 26
பூநகரிப் பிரதேச சபையின் வருமானம் அனைத்தும் குடிதண்ணீருக்காகவே செலவு செய்யப்பட்டு வருவதாக பூநகரிப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி மேரி சிவகுமார் தெரிவித்தார்.
கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற வறட்சி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். பூநகரிப் பிரதேசத்தில் நிலவும் கடும் வறட்சியால் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நன்னீர் நீர் நிலைகளில் தண்ணீர் வற்றியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
பூநகரியின் நீண்டதூர கிராமங்களுக்கும் குடிதண்ணீரை விநியோகிப்பதில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-18)

# வவுனியா கற்பகபுரத்தில் காணிகள் சிலரால் அபகரிப்பு

### நடவடிக்கை எடுக்க கோருகின்றனர் மக்கள்

வவுனியா, மே 26
வவுனியா, கற்பகபுரத்தில் காணிகள் சட்டத்துக்கு முரணான வகையில் அபகரிக்கப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
வவுனியா, கற்பகபுரம் அரச காணிகள் 2009, 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் காணிகளற்ற வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.
எனினும் போக்குவரத்து வசதி, மின்சார வசதிகள் கற்பகபுரம் வீட்டுத் திட்ட மக்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.
இந்தப் பகுதி மக்களுக்கு தொழில் வசதிகள் இன்மையால் பொருளாதார நெருக்கடியை நாளாந்தம் அவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை சில குடும்பங்கள் கற்பகபுரம் வீட்டுத்திட்டப் பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் மக்கள் சுட்டிக் காட்டினர்.
இந்த நிலையில் அவர்களது காணிகளைச் சட்டவிரோதமாகச் சிலர் விற்பனை செய்து வருகின்றனர்.
சில காணிகள் பன்றி வளர்ப்புக்கென அபகரிக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளுக்குப் பதிலாக வேறு காணிகள் வழங்கப்படவில்லை என்றும்தெரிவிக்கப்பட்டது.
எனவே இவ்வாறு சட்ட விரோதமாகக் காணி அபகரிப்பைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-402)

## நிரந்தரமாக ஆசிரியர் நியமிக்கப்படவில்லை

### மாணவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு 15 மாதங்கள் கடந்தும் நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்பட வில்லை என்று மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
அக்கராயனில் இருந்து 3 நாள்கள் புவியியல் பாடம் கற்பிக்க ஆசிரியர் ஒருவர் பாடசாலைக்கு வருகின்றார். வேரவில் இந்து மகாவித்தியாலயத்திலிருந்து இருநாள்கள் தமிழ்பாடம் கற்பிக்க வருகை தந்த ஆசிரியர் தற்போது பாடசாலைக்கு வருவதில்லை என்று மாணவர்கள் கூறினர்.
கிளிநொச்சி மேற்கில் முக்கிய பாடசாலையாக விளங்கும் இந்தப் பாடசாலை 1954 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
இந்தப் பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர் நியமிக்கப்படாததால் அவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடையும் என்று பெற்றோர்கள் கூறினர்.
இந்தப் பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்களை நியமிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-18)


கிளிநொச்சி மீன்சந்தை பெண்களுக்கு கைமாறி விட்டதா? அங்கு தாய்க்குலம் மீன் விற்பனையில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம். (ஓ-ச-21)

## நாட்டில் நிலவும் வறட்சியால் மீண்டும் கால்நடை இறப்பு

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சியில் நிலவும் கடும் வெப்பத்தால் மீண்டும் கால்நடைகள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
கோழிகள், ஆடுகள், மாடுகள் போன்றனவே நோய் ஏற்பட்டு உயிரிழக்கின்றன. போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது வாழ் வாதாரத்துக்கான தொழில் முயற்சியாகக் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இந்த நிலையில் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இருப்பதால் மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். (ச-431)

## குளங்களை புனரமைத்து எமக்குத் தர வேண்டும்

### பம்பைமடு விவசாயிகள் கோரிக்கை

வவுனியா, மே 26
வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள கல்வெளி கூழாங்குளம், வைகாளி தேக்கங்கட்டு குளம் போன்ற குளங்களை புனரமைத்துத் தரவேண்டும் என்று பம்மைமடு பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தக் குளங்கள் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.
இந்தக் கிராமத்தில் பல குளங்களின் கட்டுகள் புனரமைக்கப்படாமல் உள்ளன என்றும் எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு முன்னர் இந்தக் குளங்களை புனரமைத்துத் தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

## வவுனியா வடக்கு பகுதியில் 50 ஏக்கரில் பழச் செய்கை

வவுனியா, மே 26
வவுனியா வடக்குப் பகுதியில் 50 ஏக்கரில் பழச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதே பகுதியில் சுத்தமான பழப் பான விற்பனை நிலையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
வவுனியா வடக்கு பழச் செய்கையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நெடுங்கேணி பகுதியில் 50 ஏக்கர் காணியில் பழச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
மக்கள் சுத்தமான பழப்பானத்தை பருகும் வகையில் வவுனியா ரயில் நிலைய வீதியில் பழப்பான விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையத்தை வவுனியா மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் எஸ்.ரவீந்திரன் திறந்து வைத்துள்ளார்.
இந்தச் பழச் செய்கையில் முதற் கட்டமாக பப்பாசி மற்றும் தோடை போன்றவை செய்கை செய்யப்பட்டு வருகின்றன.
இங்கு செய்கை செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்ட முதல் தர பழங்களை ஏற்றுமதி செய்யப்பட்ட பின்னர் இரண்டாம் தர பழங்கள் சுத்தமான பழப்பானமாக மாற்றப்பட்டு வழங்கப்பட்டு வருவதாக வவுனியா வடக்கு பழச் செய்கையாளர் சங்கத்தின் தலைவர் சா.இராஜேந்திரம் தெரிவித்தார்.



முதல்தரம், இரண்டாம் தரம் என்பதில் பெரிதும் வித்தியாசம் இல்லை. பழத்தில் எவ்வித குறைபாடும் காணப்படமாட்டாது. பழத்தின் வடிவம் மட்டுமே மாறுபடும் என்றும் அவர் கூறினார்.
இந்தப் பழச் செய்கையின் போது நஞ்சுக் கலவை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. முற்று முழுதாக இயற்கைப் பசளைகொண்டு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச-402)

## கைத்தொலைபேசி பயிற்சிநெறி

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் கைத்தொலைபேசி பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பயிற்சி நெறி எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-18)



# பெண்மை பேணப்பட வேண்டும்

மேற்காட்டிய தலைப்பைச் சட்டென எடுத்து நோக்கும்போது யாரால்? எவ்வாறு? என்ற வினாக்கள் சமகாலத்தில் தானாகவே தோன்றும் ஒரு சூழ்நிலை தோற்றப்பாடு என்பன எழலாம்.

எனினும் ஊடகங்களும் விடாது தொடர்ந்து பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டேயிருக்கின்றன. சமூக முன்னேற்றத்துக்காகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தல் என்ற நோக்குடனும் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள் எத்துணை வேகமாக ஆழமாக இங்கு சென்றடைகின்றன என்பதை அவதானிப்பது அல்லது கரிசனை கொள்வது என்பது சமூகத்தவர் அத்தனை பேரின் கரங்களி லுமே உள்ளதெனலாம்.

பெண்மை பல்வேறு மட்டங்களிலும் முறையாகப் பேணப்படாததால் ஏற்படும் எதிர்விளைவுகளை நாம் அனைவரும் அன்றாடம் செவிமடுத்தும் அறிந்தும் அனுபவித்தும் வருகின்றோம். இவை வேதனைக்குரியவையாக இருப்பது குறிப்பிடக் கூடியதாகும்.

பிள்ளைப் பராயத்தை அடையும் பெண் பிள்ளைகள் பராயமடைதல், வயதாகுதல், புத்தியறிதல் என்றும் பதங்களால் குறிப்பிடப்படுவது தமிழ் சமூகத்தில் காலாகாலமாக நடைமுறையில் இருந்து வரும் சமூக சம்பிரதாயமாகும். இக்காலத்தைப் பெற்றோரும் உறவினரும் உன்னிப்பாக எதிர்பார்த்திருப்பதும் வழக்கிலிருக்கும் ஒரு நிகழ்வெனலாம். இதற்காகக் குறிப்பிட்டோரை அக்கால கட்டத்தில் உடல். உளரீதியாகப் பராமரிப்பதும் தனிமைப்படுத்திக் கவனிப்பதும் ஏற்புடையவைதான். எனினும் அதிகமான மூட நம்பிக்கைகளும் கலந்துவிடுவதால் விஞ்ஞான ரீதியான சிந்தனைகளுக்கும் உடல் ரீதியான நியதிகளுக்கும் குந்தகமாய் அமைந்து விடாது கவனம் செலுத்துவது அவசியம்.

புரதச் சத்துக்களை அதிகம் கொண்ட உணவுகளைக் கொடுப்பது, சுட்டாறிய நீரைப் பருகக்கொடுப்பது அவசியமானதாகும். இந்தக் காலகட்டத்தில் காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி, மலச்சிக்கல், சலக்கடுப்பு போன்றவற்றையும் எதிர்பார்க்கலாம். மேலும் தாய்க்குலத்தில் உள்ளவர்கள் சிறிது சிறிதாக மதியுரைகளையும் வழங்க வேண்டும். இந்தக் கால கட்டத்தில் மட்டுமல்ல முன்னோடியாக இதற்கு முற்பட்ட இரண்டு ஒரு வருடங்களிலிருந்து செயற்படுவதே பொருத்தமானதாகும்.

இந்தப் பருவ மாற்றமானது பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரை புத்தி, விவேகம், அறிவு சார்ந்த திறன்களும் உடல், உளம் சம்பந்தமான ஆரோக்கியமானநிலையும் ஏற்பட அடித்தளமிடப்படும் காலமாகும். எனவே இந்தக் கருத்துக்களை உள்வாங்கியவர்களாக பெற்றோர், உறவினர், சமூகத்தவர் செயற்படும்போது அதைப் பிள்ளைகள் ஏற்று நடக்க வேண்டும். நோய் நொடிகள் ஏற்படாது தப்பிக் கொள்ள வேண்டும்.

இந்த நிலையிலிருந்து வெளியேறிச் சமூகம், பாடசாலை எனச் செல்லும் போது சில பிரச்சினைகள் வருவது இயல்பு. இந்த வேளைகளிலும் பெண்கள் தம்மை ஆசுவாசப்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். சமூகம், பாடசாலை, பொது இடங்களில் ஒன்றுகூடும் போது தனித்துவமான மரியாதை, நட்புகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையா? பிரித்துப் பார்த்து கொள்ளக்கூடியவையா? எனச் சிந்தித்துக் கொள்வது அவசியம். மேலும் சமூகச் சூழ்நிலை காரணமாக பல்வேறு பிரச்சினை தோன்றவும் வாய்ப்புக்கள் உள்ளன. பெற்றோரை பிள்ளைகள் கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்ள வேண்டிய அதேநேரத்தில் தம்மைத் தயார்ப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

*"பெண்ணிற் பெருந்தக்க யாவுள தற்பெறும்*
*திண்மை உண்டாகப் பெறின்"*

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை இந்தக்காலகட்டத்தில் விளங்க வைத்துச் செயலாற்ற ஊக்கமளிக்கவேண்டும்.

சமூகக் கட்டமைப்பு விழுமியங்களாலும் தமது நற்சிந்தனையூடாகவும் பெற்ற அனுபவத்தை இவ்வாறு குறட்பா மூலம் சுட்டுகின்றார். தாய்க்குலம் எந்த நிலையிலும் மேற்படி கருத்தை உள்வாங்கி செயற்பட உறுதி பூணவேண்டும்.

திருமண வாழ்வினூடாகத் தாய் தந்தையர் ஆகப்போகும் தம்பதிகள் தமக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஆண்குழந்தையா? பெண்குழந்தையா? என அறிவதில் நாட்டம் கொள்வது சமகால முனைப்பாகவும் காணப்படுகின்றது. காரணம் பெண் குழந்தை என்றால் சற்று அடக்கி வாசிக்கும் தன்மை சில சமூகங்களில் தலைதூக்கி நிற்பதை நோக்கலாம்.

இதன் காரணங்கள் பலவற்றைக் கூறலாம். பெண்ணை நீண்டகாலமாகக் குறைத்து மதிப்பீடு செய்து வந்த தன்மை பொதுவாகக் காணப்பட்டது.

*"மங்கையராக பிறப்பதற்கு நல்ல மாதவம்*
*செய்திட வேண்டுமம்மா*
*மங்கையர் கைநலம் பார்த்ததல்லவோ*
*இந்தப் பாரில்*
*அறங்கள் வளருதம்மா!"*

எனப் புரட்சிப் பாடல்கள் பாடப்பட்டு விழிப்புணர்வு கள் ஏற்படுத்தப்பட்டன.

*மண்ணின் மேல் மாசறக் கற்றோனும் -*
*மாசில்சீர்*
*பெண்ணினுடை நற்புடையாள் பெற்றோனும்*
*உண்ணும் நீர்க்கூவல் குறைவின்றித்*
*தொட்டோனும்*

இம்மூவர் சாவா உடம் பெய்துவர் என்கின்றது. "திரிகடுகம்" எனும் முது தமிழ் நூல். சங்ககாலப் பெண்புலவர்களான ஔவை, உறுவை, உப்பை, காக்கை பாடினியா போன்றவர்கள் தங்கள் நூலறிவால் தம்மையும் வளர்த்து தமிழ்ச் சமூகத்தையும் உயிர்பெறச் செய்தனர். இன்று உலகளாவிய மட்டத்திலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் பெண்மை பேணப்பட்டுப் பல பெண்கள் உயர் பதவிகளிலும் கல்வியறிவியல், விஞ்ஞானம், தொழில்நுட்ப ரீதியிலும் முன்னிற்பது வெளிச்சம்.

எனவே பெண்கள் அடிப்படை வாழ்வியலிலிருந்தும் சமூக விழிப்புணர்வுகளிலும் ஆரோக்கியம்; அறிவியல் விருத்தியிலும் ஆண் பாலாருடன் போட்டியிடும் நிலையுமுள்ளது.

இனிமேல் பெண்களின் வளர்ச்சியானது குற்றவுணர்வுகள், அறியாமை இவற்றிலிருந்து விடுபட்டு முன்னேற வேண்டிய நிலையிலுள்ளது. குற்றவுணர்களிலிருந்து விடுபட்டு குடும்பப் பொறுப்புடனும் தெய்வ சிந்தனைகளுடனும் ஒன்றித்துத் தளராத நம்பிக்கையுடன் வாழ்க்கைப் பாதையில் முன்னேற வேண்டும்.

மேரி கியூறி அம்மையார், கெலன் கெல்லார் நைற்றிங்கேல் அம்மையார் போன்றவர்களின் வரலாறு தொடர்பாகவும் அன்னை திரேசாவின் வினைத்திறன் பற்றியும் நிச்சயம் நாம் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**திருமதி. எம்.ரி.எஸ்.பசுபதி,**
**இளைப்பாறிய அதிபர்.**

பெண்மை பல்வேறு மட்டங்களிலும் முறையாகப் பேணப்படாததால் ஏற்படும் எதிர்விளைவுகளை நாம் அனைரும் அன்றாடம் செவிமடுத்தும் அறிந்தும் அனுபவித்தும் வருகின்றோம்.

CMYK



# சேவகி

இந்தியப் பெண்கள் பலரும் உதாரண மனுஷியாக உச்சரிக்கிற பெயர் அன்னை தெரேசா. வாழ்நாள் முழுவதும் ஏழை எளியோருக்காகப் பாடுபட்ட மகத் தான பெண்மணி.

1910 ஒகஸ்ட் 26 அன்று அல்பேனியாவில் பிறந் தார் தெரேசா. இயற்பெயர் ஆக்னஸ் கொன்ஸா பொஜாஹ்யூ. இறை நம்பிக்கையில் திளைத்த குடும்பம் என்பதால், இளம் வயதிலேயே இறை பணியில் ஆர்வம் வந்தது. ஆக்னஸின் 8 வயதில், அப்பாவின் திடீர் மரணம். நிலைகுலைந்து போன ஆக்னஸ், அம்மாவிடம் நெருக்கத்தை அதிகப்படுத்தினார்.

மகளை மீட்டெடுப்பதற்காக இறைவனின் மகிமையைச் சொன் னார் அம்மா. ஏழை, எளியவர்களுக்குச் செய்யும் உதவியே இறை ஊழியம் என்று எடுத்துரைத்தார். ஆக்னஸ் இறைப் பணியில் ஆர்வம் கொண்டார்.

8 வயதில் லொரெட்டோ சகோதரிகள் மிஷனரியில் சேர்ந்தார். பெயரை தெரேசா என்று மாற்றிக்கொண்டார். 1931ல், மிஷனரி மூலம் டார்ஜிலிங் வந்தவர், பிறகு கொல்கத்தாவில் உள்ள பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். 1948 வரை அங்கு பணிபுரிந்தார். அப்போது கொல்கத்தாவில் வறுமையில் வாடும் குழந்தைகளையும் சேரிகளையும் கண்டு மனம் வருந்தினார். மிஷனரி அனுமதியுடன் பள்ளியை விட்டு வெளியே வந்தவர், ஏழைகளுக்குத் தொண்டு செய்யத் தொடங்கினார். 1950ல் மிஷனரிஸ் ஒப் சாரிட்டி என்ற பெயரில் சமூகப் பணியைத் தொடர்ந்தார்.

ஆதரவற்றோர், பார்வையற்றோர், நோயாளிகள், முதியோர் என்று சகலருக்கும் இல்லங்களை நிறுவினார். பள்ளிகளை உருவாக்கினார். மருத்துவமனைகளை அமைத்தார். பலரிடமும் சென்று நிதி திரட்டினார். இவரது சேவையைக் கண்டு வியந்த பலர் தொண்டு செய்வதற்காக ஆர்வத்துடன் வந்தனர். இந்தியா மட்டுமல்லாது, உலகின் பல பகுதிகளிலும் சேவையை ஆரம்பித்தார் தெரேசா. 1990ஆம் ஆண்டு 10 லட்சம் ஆர்வலர்களுடன் 40 நாடுகளில் ஆவின் சேவை இயக்கம் பரவியது. உலகம் முழுவதிலுமுள்ள மக்களும் தலைவர்களும் அன்னை தெரேசாவின் சேவையைப் போற்றினார்கள். வணங்கினார்கள்.

1979ஆம் ஆண்டு தெரேசாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. பாரத ரத்னா உட்பட உலகின் மிக முக்கிய விருதுகள் அனைத்தும் தெரேசாவுக்கு வழங்கப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார். 87 வயது வரை எளிய மக்களுக்காக உழைத்துக் கொண்டிருந்த அன்னை தெரேசா, 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 அன்று நிரந்தரமாக ஓய்வெடுத்துக் கொண்டார். இன்று நூற்றுக்கும் அதிக நாடுகளில் அன்னை தெரேசாவின் இல்லங்கள் மூலம் சேவை தொடர்கிறது.

*- சஹானா*

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீனவர்கள் பகடைக்காயா?

இந்தியாவின் 14ஆவது பிரதமராக நரேந்திர மோடி இன்று பதவியேற்பதை முன்னிட்டு நல்லெண்ண சமிஞ்சையாக இலங்கை சிறைகளிலுள்ள இந்திய மீனவர்கள் அனைவரையும் விடுவிக்கும் உத்தரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று விடுத்திருந்தார்.

கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி ஜெனிவாவில் அமெரிக்க அனுசரணையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்காமல் இந்தியா நடுவுநிலை வகித்ததையடுத்தும் இலங்கை ஜனாதிபதி இந்திய மீனவர்களை விடுவிக்கும் அறிவிப்பை விடுத்திருந்தமையை பலரும் மறந்திருக்கமாட்டார்கள்.

இந்த விடுவிப்புக்கள் எம்முன்னே மீனவர்கள் என்ன பகடைக்காயா என்ற கேள்வியை எழுப்பிநிற்கின்றது.

இலங்கையின் வடபகுதி கடல்வளங்களை இந்திய மீனவர்கள் பெருவாரியாக வந்து அள்ளிச் செல்வதால் வடபகுதியிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என ஓங்கிக் குரல்கொடுத்துவரும் இலங்கை அரசாங்கம் அதனை நிறுத்துவதற்காகவே இந்திய மீனவர்களைக் கைதுசெய்து அவர்களின் படகுகளையும் உபகரணங்களையும் கைப்பற்றுவதாக நியாப்படுத்தி வந்தது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக குரல்கொடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய மீனவர்களால் தமது மக்களுக்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பாக கண்டுகொள்வதில்லை. ஆகவே அவர்களுக்கு உண்மையாகவே தம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் நாட்டமில்லை. மாறாக தமது சொந்த நலன்களுக்காகவே தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து கூட்டமைப்பு பேசுகின்றது என அரச தரப்பினர் அவ்வப்போது குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்து வந்தனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரூடாக இந்தியத் தரப்பினரிடம் முறையிடும் போது அந்தப் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு கிடைக்கும் என்று அரசு நினைத்ததோ! அன்றேல் அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறும் கடப்பாடு, நல்லிணக்கும் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எழுப்பும் குரல்களுக்கு இந்திய மீனவர் பிரச்சினையில் சிக்கவைப்பதன் மூலம் இந்தியத் தரப்பினரிடமிருந்து எதிர்ப்பை ஏற்படுத்தி கூட்டமைப்பின் குரலை அடக்கிவிடமுடியும் என நப்பாசை கொண்டதோ! என்பது தொடர்பில் தெளிவில்லா நிலை இருப்பினும் தற்போது ஜனாதிபதி வெளியிட்டுள்ள மீனவர் விடுதலை தொடர்பான் அறிவிப்பு மேலும் சில கேள்விகளை எழுப்பிநிற்கின்றது.

நினைத்தவுடன் கைதுசெய்வதற்கும் தேவைப்படும் போது விடுதலை செய்வதற்கும் மீனவர்கள் என்ன பகடைக்காய்களா? சட்டத்தை மீறியதற்காக கைது செய்தால் சட்டத்தின் முன்னர் நிறுத்தி அதன் பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாமல்லவா? மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதாக காரணம் முன்வைத்தால் அரசியல் தேவைப்பாடுகள் இராஜதந்திர நகர்வுகளின் போக்கைப்பொறுத்து ஏன் மீனவர்களின் விடுதலைத் திகதி நிச்சயிக்கப்படவேண்டும்?

முகமனுக்காக நல்லிணக்க சமிக்ஞைகளைக் காட்டுகின்ற அரசியல் கலாசாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இதயசுத்தியுடன் முழுமனதுடனான நல்லிணக்கத்தை அடையும் நோக்கில், நல்லிணக்க சமிக்ஞைகள் காண்பிக்கப்படுமானால் அவற்றின் இறுதி நோக்கம் ஒரு போதும் நிறைவேறத் தவறமாட்டா.

**காய்ச்சல் இருப்பின் மலேரியாவை இனங் காண்பதற்கான எளிமையான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.**

# உள்ளேயும் வெளியேயும் ஏகப்பட்ட பிரச்சினைகள்

## சமாளிக்குமா ராஜபக்ஷ அரசு?

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

இந்தியத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்களில் நிலவிய சாதக பாதக உணர்ச்சி வேகங்கள் தணிந்துள்ள நிலையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான புதுடில்லி அரசின் நிலைப்பாடு இனிமேல் நிச்சயமாக மேலோங்கும் என்று கருதப்படுகின்றது. இந்த விடயத்தில் இலங்கைத் தரப்பில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசு புதிய மோடி அரசினால் வற்புறுத்தப்படலாம் என்று கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த விடயத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் கொள்கை என்ன என்பதை அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஷ்மா சுவராஜ் 2012 ஏப்ரலில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கியிருந்தார்.

அமெரிக்க காங்கிரஸ் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தில் பிரதம நீதியரசர் பதவியில் இருந்து ஷிராணி பண்டாரநாயக்க நீக்கப்பட்டமை, மாற்றுக் கருத்துக் கூறப்படுவதற்கான வசதியின்மை, நாடு முழுவதும் இராணுவ மயமாக்கப்பட்டு வருகின்றமை, ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுதல் மற்றும் அரசை விமர்சிப்பவர்கள் அச்சுறுத்தப்படுவது யாவும் குற்றவாளிகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்ற உணர்வை உருவாக்கவும் எதேச்சதிகாரம் உள் நுழையவுமான சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணக்க ஸ்தலங்கள் மீதும், தங்கள் தங்கள் சமயங்கள் அனுஷ்டிப்பவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதும் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகின்றது. நாடு முழுவதிலும் ஊடகவியலாளர்கள் மீதான கட்டுப்பாடு காணப்படுகின்றது. ஒரு சில சந்தர்ப்பங்கள் இவைக்கான சூத்திரதாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது என்று தீர்மானத்தில் மேலும் கூறப்பட் டுள்ளது.

சமய அனுட்டானங்கள் மற்றும் ஊடக சுதந்திரத்தை விரிவு படுத்துமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்ளும் அதேநேரம் நாடு முழுவதும் இராணுவ மயமாகியிருப்பதை நீக்கும்படியும் பொதுமக்கள் செயற்பாடுகளில் இராணுவத் தலையீட்டைத் தவிர்க்கும்படியும் தீர்மானம் கோருகின்றது.

அரசியல் தீர்வொன்றைக் காணும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியும் வலியுறுத்தும் தீர்மானத்தில் த.தே.கூட்டமைப்புக்கும் ஒரு செய்தி வழங்கப்பட்டுள்ளது.

அதில் கடந்த காலத்தில் அவர்கள் தமிழீழ விடு தலைப்புலிகளுடன் கொண்டிருந்த தொடர் புகளை ஒப்புக்கொண்டு நல்லிணக்கமும், பற்றுறுதியை வெளிப்படுத்தி அமைதியும், ஐக்கியமும் கொண்ட இலங்கை நாட்டை உறுதி செய்யும் நீண்டகால அரசியல் தீர்வொன்றுக்காக உழைக்கும்படியும் அவர்களை தீர்மானம் கோருகின்றது.

மனித உரிமைகள் சபையானது முறைப்படி சர்வதேச விசாரணையொன்றுக்கான அறிவித்தலை விடுக்கும்வரை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இலங்கை மீதான ஒரு விசாரணையையோ விசாரணைக்கென் அதி காரிகள் நாட்டுக்குள் வருவதையோ அனுமதிக்கப்போவதில்லையென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிசும் இங்கேயும் வெளிநாடுகளிலும் அடிக்கடி கூறி வந்துள்ள போதிலும் விசாரணைக்கான நிபந்தனைகள் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு வித மாக பதிலளிப்பது அவசியம் என்று அவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரிகின்றது. அதனால்தான் அரசு பல்வேறு நிபுணர்களுடன் ஆலோசனை கள் நடத்தி வருகின்றது. அவ்வாறான ஒரு கோரிக்கைதான் ஜனாதிபதி ராஜபக்ஷ பாகிஸ்தான் பிரதமரை சட்ட வல்லுநர்களை வழங்கி உதவும் படி கேட்டிருந்தமையாகும்.

அண்மையில் சீனாவில் ஷங்காய் நகருக்குச் சென்றிருந்த போது ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீமூனுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ பேச்சுக்கள் நடத்தியிருந்தார். அப்பொழுது மனித உரிமைகள் சபை தொடர்பான விடயமும், ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியினர் தேர்தலில் இழந்துவிட்ட வாக்குகளை மீள பெற்றுக் கொள்வதற்காக அந்தக் கட்சி வீரவன்சவைப் பயன்படுத்திக் கொள்கின்றது என்று ஜனதா விமுக்தி பெரமுனை விஜித ஹேரத் கூறியுள்ளார்.**

ஆஸியாவில் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவது தொடர்பான மாநாடு நடந்தபோது அங்கு பிரசன்னமாய் இருந்த ஜனாதிபதியும் பான்கீமூனும் புறநிலையில் இந்தச் சந்திப்பை நிகழ்த்தியிருந்தனர்.

கடந்தவாரம் ஐ.நாவில் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது இது பற்றிய கேள்வி ஐ.நா.பேச்சாளரிடம் கேட்கப்பட்டது.

புதுடில்லியில் புதிய இந்திய பிரதம மந்திரி நரேந்திரமோடியின் பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளூரிலும், சர்வதேசத்திலும் பிரச்சினைகள் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. உள்ளூரில் அரசில் உள்ள இரண்டு கட்சிகள் கவலை தரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. அரசு மீது நம்பிக்கை இல்லா பிரேரணையை நாடாளுமன்றத்தில் ஐ.தே. கட்சி கொண்டு வந்திருந்தபோது ஜாதிக்க ஹெல உறுமயவும் தேசிய சுதந்திர முன்னணியும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டன. இருந்தாலும் 225 உறுப்பினர்கள் உள்ள சபையில் 151 வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. அரசு அண்மையில் நிறைவேற்றிய மூன்று ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பான சட்டமூலத்தை இந்த இரு கட்சிகளும் எதிர்த்தமையால் அரசுக்குள் நெருக்கடி தோன்றியுள்ளது. இந்தத் திட்டமானது இறுதியில் நாட்டில் கசினோக்கள் உருவாக வழியேற்படும் என்பது அந்தக் கட்சிகளின் முறைப்பாடு.

கடந்த 'வாரம் வெள்ளிக்கிழமை இரு கட்சிகளும் தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரவன்ச இல் லத்தில் கூடி இரண்டரை மணி நேரம் ஆலோசனைகள் நடத்தியிருந்தன. கூட்டம் முடிந்த பிறகு கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட எந்த விடயத்தையும் ஊடகங்களுக்கு வெளியிடுவதில்லையென அவர்கள் தீர்மானித்திருந்தார் கள்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் வீரவன்ச தமது கட்சி எதிர்நோக்கும் பிரச்சினை களை விளக்கிக் கூறினார். ஜனாதிபதி தமக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து தங்கள் கட்சியின் 12 அம்ச கோரிக்கை பற்றி விவாதிக்க வரும்படி கோரியிருப்பதாகவும் தெரிவித்தார். விளைவு எதுவாக இருந்தாலும் தாங்கள் அதை எதிர் கொள்ள விருப்பதாக வீரவன்ச தெரிவித் தார். சம்பிக்க ரணவக்க பேசிய போது: ஒரு சீரான கொள்கையின் மீது தேசிய இயக்கம் ஒன்று தேவைப்படுகிறது. அப்படியென்றால்தான் ஒரு நீதியான சமூக அமைப்புக்காக நாம் போராட முடியும் என்றார்.

விரைவில் வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கணிசமான நேரம் விவாதிக்கப்பட்டது. அடுத்தது அபிவிருத்தி தொடர்பான செலவினங்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியினர் தேர்தலில் இழந்துவிட்ட வாக்குகளை மீள பெற்றுக் கொள்வதற்காக அந்தக் கட்சி வீரவன்சவைப் பயன்படுத்திக் கொள்கின்றது என்று ஜனதா விமுக்தி பெரமுனை விஜித ஹேரத் கூறியுள்ளார். வீரவன்ச நிதி அமைச்சின் செயலாளரைக் கண்டிக்கிறார். ஆனால் நிதி அமைச்சராகவும் பொறுப்பில் இருக்கும் ஜனாதிபதியைக் கண்டிக்கிறார் இல்லை. அரசைக் கண்டித்துக்கொண்டே அரசிடமிருந்துவரும் அனுகூலங்களை அனுபவிக்கிறார்.

அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட ஜனாதிபதி சுதந்திரம் அளித்துள்ளார் என்று ஐ.ம.சு.முன்னணியின் பொது செயலாளர் சுசில் பிரேம ஜயந்த கூறியிருக்கிறார். எதுவானாலும் அமைச்சர் வீரவன்சவின் கண்டனங்கள் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறிய செயற்பாடாகும். நிதி அமைச்சின் செயலாளரைக் கண்டித்திருப்பதானது ஜனாதிபதியை நேரடியாக தாக்கியதற்கு ஒப்பாகும். அரசின் நிதி பொருளாதாரக் கொள்கைகளை அவரே நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு செயற்படுத்துகிறார். அதனால்தான் இப்போது என்.எப்.எப். உறுப்பினர்களை தம் பக்கம் இழுப்பதில் அரச தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். ஊவா மாகாண சபையில் இரண்டு உறுப்பினர்களை கட்சிமாறச் செய்வதில் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஒருவர் அரச பக்கம் மற்றவர் ஐ.தே.பக்கம் மாறினார்கள்.

நேற்றுமுன்தினம் வீரவன்ச ஜனாதிபதியை அவர் அழைப்பின் மீது சந்தித்து தமது 12 அம்ச சீர்திருத்தத் திட்டத்தை வழங்கினார். அதன் பின் நீண்ட உரையாடல் இடம்பெற்றது. வீரவன்ச சமீப காலமாக பகிரங்கமாக தெரிவித்துவரும் கருத்துக்களுக்காக அவரை ஜனாதிபதி கடுமையாகச் சாடியதாகத் தெரிகின்றது. மக்கள் நலன் கருதி அரசியலிலோ பொருளாதாரத்திலோ தீர்மானம் எடுப்பதில் தாம் தயக்கம் காட்டப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அரசில் உள்ள பெரிய பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி வீரவன்சவின் 12 ஆம் சீர்திருத்த திட்டங்கள் பற்றி ஆராய்ந்து பதிலளிக்கும் என்றும் தெரிவித்தார்.

# இந்திய ஊடகத்தின் பார்வையில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பயணம்

இதுவரை தேசிய அரசில் அங்கம் வகிக்காதவர், வெளிவிவகாரக் கொள்கை பற்றிய சரியான புரிதல் இல்லாதவர் என்றெல்லாம் கருதப்பட்ட ஒரு மாநிலத்தின் முன்னாள் முதல்வர் இந்த அளவுக்கு ராஜதந்திரமாகத் தனது பிரதமர் பொறுப்பில் செயற்படுவார் என்பதை யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது. தீவிர இந்துத்துவக் கொள்கையாளர், பாகிஸ்தானிய எதிர்ப்பாளர் என்றெல்லாம் நரேந்திர மோடி மேலைநாட்டு ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டும்; அவர் பிரதமரானால் இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே அணு ஆயுத யுத்தம் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டும் இருந்த வேளையில், அதிர்ச்சி வைத்தியம் அளித்திருக்கிறார் பிரதமராகப் பொறுப்பேற்க இருக்கும் நரேந்திர மோடி.

தனது தேர்தல் பரப்புரையில் வளர்ச்சிப் பாதையில் இந்தியாவை இட்டுச் செல்வேன் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்த மோடி, இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக்க அண்டை நாடுகளுடனான சுமுக உறவு இன்றியமையாதது என்று புரிந்து வைத்திருக்கிறார் என்பது தெரிகிறது. ஆண்டு தோறும் ஏறத்தாழ 2 லட்சம் கோடி ரூபாயை ராணுவத்துக்காக நாம் செலவிடுகிறோம். அண்டை நாடுகளுடன் இந்தியா சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்ளுமேயானால், இந்த ஒதுக்கீட்டில் பாதித்தொகை நமது கட்டமைப்பு வசதிகளுக்குப் பயன்படும். இதை நரேந்திர மோடி உணர்ந்திருக்கிறார் என்று தெரிகிறது.

ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பை ஏற்படுத்தி விட்டன. மத்திய ஆசிய நாடுகள் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் என்கிற பெயரில் ஒருங்கிணைந்திருக்கின்றன. கிழக்காசிய நாடுகள் ஆசியான் என்கிற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இப்படி அண்டை நாடுகள் ஒன்றுபட்டால் மட்டுமே இன்றைய சர்வதேச அரங்கில் எந்தவொரு பகுதியும் வளர்ச்சிப் பாதையில் செல்ல முடியும் என்கிற நிலைமை, இந்தியாவில் இந்திரா காந்திக்குப் பிறகு துணிவும், திறமையுமுள்ள ஒரு நல்ல தலைமை அமையாமல் போனதால்தான் தெற்கு ஆசியா மட்டும் பிரிந்து கிடக்கிறது.

நரேந்திர மோடியின் நல்லெண்ணத்தை, அவரால் தொடர்ந்து விமர்சிக்கப்பட்ட பாகிஸ்தான் புரிந்துகொண்டு, பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி ஏற்பு விழாவுக்கு வர இருக்கும் நிலையில், இலங்கை அதிபர் ராஜபக்ஷ பதவி ஏற்பு விழாவுக்கு வருவதற்கு தமிழகத்திலிருந்து எதிர்ப்புக் குரல்கள் வருவது மிகவும் வருத்தத்திற்குரியது. நரேந்திர மோடிக்கு விசா வழங்க மறுத்த அமெரிக்க அரசு, அவர் பிரதமரானவுடன் ராஜாங்க ரீதியிலான அழைப்பு விடுத்திருப்பதை நமது தமிழகத் தலைவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளி என்று உலக நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் குரல் கொடுக்கலாம்.



> இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளி என்று உலக நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் குரல் கொடுக்கலாம். ஆனால் அவர் இலங்கை அதிபரல்ல என்று ஆகிவிடுமா? அவருடன் பேசமாட்டோம், அவரை அழைக்க மாட்டோம் என்று நாம் முடிவெடுத்தால், போருக்குப் பின் வாழத் துடிக்கும் லட்சக்கணக்கான தமிழர்கள் ஈழத்தில் உயிருடன் இருக்கிறார்களே, அவர்கள் கதி என்ன?


ஆனால் அவர் இலங்கை அதிபரல்ல என்று ஆகிவிடுமா? அவருடன் பேசமாட்டோம், அவரை அழைக்க மாட்டோம் என்று நாம் முடிவெடுத்தால், போருக்குப் பின் வாழத் துடிக்கும் லட்சக்கணக்கான தமிழர்கள் ஈழத்தில் உயிருடன் இருக்கிறார்களே, அவர்கள் கதி என்ன? நாளும் பொழுதும் நமது மீனவர்கள் சிறைபிடிக்கப் படுகிறார்களே, அவர்களைப் பாதுகாப்பது எங்ஙனம்? கோடிக்கணக்கில் இலங்கையின் வடக்குப் பகுதியைப் புனர் நிர்மாணம் செய்ய இந்தியா வழங்கிய பணம், இலங்கையின் தென் பகுதியை வளப்படுத்துவதாகக் கூறப்படுகிறதே, அதைக் கண்காணித்துத் தட்டிக் கேட்பது எப்படி?

அதிபர் ராஜபக்ஷவின் செயற்பாடுகள் ஏற்புடையவை அல்லதான். அதற்குத் தீர்வு இலங்கையுடன் போர் தொடுப்பதல்ல, அவரை அழைத்துப் பேசுவது, பணிய வைப்பது.

அதிபர் ராஜபக்ஷவுடன் பேசாமல் இருப்பதாலோ இலங்கையை முற்றிலுமாகப் புறக்கணிப்பதாலோ நாம் சாதிக்கப் போவது என்ன என்பதை தமிழக அரசியல் கட்சிகள் சிந்திக்க கடமைப்பட்டுள்ளன. கடைசியாக ஒரு வார்த்தை. நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, பாகிஸ்தானும் இலங்கையும் நமது அண்டை நாடுகள். அந்த நாடுகளுடன் நட்புறவு பாராட்டி நாம் இயங்கியாக வேண்டும். ஆபிரிக்காவுக்கு அப்பால், அல்லது அண்டார்டிக்காவுக்குப் பக்கத்தில் விலகிப் போ என்று சொல்ல முடியாது. ஈழத்தில் போர் நடந்தபோது மத்திய அரசில் அங்கம் வகித்து மௌனம் காத்து துரோகம் இழைத்தவர்களையே நம்மால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இன்னொரு நாட்டு அதிபரான ராஜபக்ஷவைக் கண்டிக்க நினைக்கிறோமே, என்ன வேடிக்கை இது? புதிய பிரதமர் புத்திசாலித்தனமாகக் காயை நகர்த்த எத்தனிக்கிறார். அவரது ராஜதந்திர நடவடிக்கைக்கு, நமது தமிழக அரசியல் கட்சிகள் முட்டுக்கட்டை போடாமல் இருக்கக் கடவது!

நன்றி - தினமணி





## யாழ்.மாநகர சபைக்கு ஒரு வேண்டுகோள்

மாநகர சபையால் பராமரிக்கப்பட்டுவரும் B V µ (Town) அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்களின் நிலை தொடர்பாக எப்போதாவது கண்ணோக்கியதுண்டா என இவற்றுடன் தொடர்பான அதிகாரிகளை மக்கள் கேட்டு நிற்கின்றனர்.

இந்த மலசலகூடங்களைத் தினமும் பொது மக்களும் , கடைகளில் வேலை செய்யும் ஊழியர்களும் பயன்படுத்துகின்றனர். ஆனால் அவற்றின் சுகாதாரச் சீர்கேடு காரணமாக அதனைப் பயன்படுத்துவதற்கு மக்கள் பின்நிற்கின்றனர். பலர் வேறு வழியின்றி மூக்கைப் பொத்தியவாறும் தெய்வங்களை நினைத்துக்கொண்டும் பயன்படுத்துகின்றனர். இந்த மலசலகூடங்களின் நிலைமை படுமோசமாகக் காணப்படுகின்றது. குழாய்கள் உடைந்தும் நீர் இல்லாத நிலைமையுமே பல நாள்களாகத் தொடர்கின்றது.

முன்னைய காலங்களில் போர் நிலைமையைக் கூறித் தட்டிக் கழித்த அதிகாரிகள் இப்போது எதைக் கூறிச் சமாளிக்கப் போகின்றார்கள்?

இதற்கு ஒரு நல்ல முடிவைக் கூறினால் அதனை ஏற்றுக் கொள்வார்களா மாநகர சபை அதிகாரிகள்?

அதாவது இவற்றை ஏன் கட்டணக் கழிப்பிடமாக மாற்றி பராமரிக்க ஒருவரை நியமிக்கக் கூடாது? மேலும் இவற்றை உடனுக்குடன் மக்கள் பயன்படும் வகையில் துப்புரவு செய்து பராமரிக்கவும் முடியும்.

இதனால் ஒருவருக்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும்.

இதற்கு ஓர் நொண்டிச் சாட்டாக எல்லோருக்கும் இவ்வாறு காசு கொடுக்க வசதியில்லையெனக் கூறலாம். ஒரு கூலி வேலை செய்பவர் கூடத் தினமும் எவ்வளவு பணம் செலவிடுகிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநகர சபை அதிகாரிகள் இது தொடர்பாக என்ன முடிவு எடுக்கின்றனர் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

*சமூக நன்மையை நாடும்*
*சுந்தர்.*

பாசகர் திருமுகம்

## வீதிகளுக்கு விமோசனம் கிடைக்குமா?

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் உள்ள மக்களாகிய நாம் யாழ்.மாநகர சபை முதல்வரின் கவனத்துக்கு அறியத் தருவது:

இந்தப் பகுதியில் உள்ள வீதிகள் பலவும் போக்குவரத்துச் செய்வதற்கு ஏற்றதாகக் காணப்படவில்லை. இவை குன்றும் குழியுமாக பல ஆண்டுகளாகக் காணப்படுகின்றன. ஒட்டுமடம் வீதி, ஓடை லேன் வீதி, பி.ஏ.தம்பி லேன் வீதி, பிரப்பன் குள வீதி, பிரப்பன் குள லேன் என்பன மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன.

மேலும் இங்குள்ள வீதிகளுக்கான பெயர்ப்பலகைகளும் போடப்பட வேண்டும். பலர் வீதிகள் தெரியாது சிரமப்படுகின்றனர்.

யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் உடனடியாக பி.ஏ.தம்பி வீதி, பிரப்பன் குள வீதி சந்தியில் காணப்படும் அழுகிய நாற்றமுள்ள மிருக எச்சங்கள், கழிவுகளைக் கொட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். பல தடவைகள் பத்திரிகை வாயிலாகவும், நேரடியாகவும் முதல்வருக்கு அறிவித்தும் எதுவித முன்னேற்றமும் இதுவரை இல்லை. இனியாவது மக்களின் குறை நிறைவேறுமா? முதல்வரே தயவுகூர்ந்து கவனிக்கவும்.

*வண்ணார்பண்ணை*
*மக்களின் வேண்டுகோள்*


சோனியா காந்தி

## காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவராக சோனியா தெரிவு


புதுடில்லி,மே 26
காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவராகச் சோனியா காந்தி தெரிவு செய்யப்பட்டார். காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதமர் மன்மோகன் சிங், கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சோனியா பேசியதாவது:-
பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியைத் தழுவுவது இது முதல்முறை அல்ல. இதற்கு முன்பு பல்வேறு தேர்தல்களில் நாம் தோற்றிருக்கிறோம். மீண்டெழுந்திருக்கிறோம். இந்தத் தோல்வியில் இருந்தும் மீண்டெழுவோம். சிறந்த எதிர்க்கட்சி என்பது அவையில் அதிக கேள்விகளை எழுப்பவேண்டும். பயனுள்ள விவாதங்களில் பங்கேற்க வேண்டும். நாடாளுமன்ற அவைகளில் நாம் ஓரணியாக இருந்து வலுவான எதிர்க்கட்சியாகச் செயற்பட வேண்டும். முக்கியமான விவகாரங்களில் அரசின் தவறுகளைத் தைரியமாகத் தட்டிக் கேட்க வேண்டும்-என்றார்.
கூட்டத்தில் காங்கிரஸ் நாடாளுமன்ற குழுத் தலைவர் பதவிக்கு சோனியா காந்தியின் பெயரை மூத்த தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே முன் மொழிந்தார். மோஷினா கித்வாய் உள்ளிட்ட தலைவர்கள் வழிமொழிந்தனர். இதைத் தொடர்ந்து கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக சோனியா காந்தி தேர்வு செய்யப்பட்டார். (கு)

# மோடி பதவியேற்பில் பங்கேற்கிறார் நவாஸ்

### இரு நாடுகளுக்கும் இடையில் உறவை மேம்படுத்தவும் பேச்சு

இஸ்லாமாபாத்,மே 26
இந்தியாவின் புதிய பிரதமராக டில்லியில் இன்று திங்கட்கிழமை பா.ஜ.க. தலைவர் நரேந்திர மோடி பதவியேற்கும் விழாவுக்கு வருமாறு இந்தியா விடுத்த அழைப்பை கடந்த சனிக்கிழமை ஏற்றார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப். இதன்படி, இரு நாள் பயணமாக இன்று திங்கட்கிழமை காலை நவாஸ் டில்லி வருகிறார்.


நவாஸ்


மோடி

நவாஸுடன் வரும் குழுவில் தேசியப் பாதுகாப்பு, வெளியுறவு விவகார ஆலோசகரான சர்தாஸ் அஜீஸ், நவாஸின் சிறப்பு உதவியாளர் தாரி பதேமி, வெளியுறவுச் செயலர் அய்சாஸ் சவுத்ரி உள்ளிட்டோரும் இடம் பெறுகின்றனர்.
இந்தியா விடுத்த அழைப்பு மீது பாகிஸ்தானின் நிலை என்ன என்பதில் 3 நாளாக மர்மம் நீடித்து வந்தது. பாகிஸ்தான் ராணுவத்தில் உள்ள சிலர், நவாஸ் டில்லி செல்லக்கூடாது என்பதில் பிடிவாதம் காட்டினர். இதனால், இந்தியா செல்வதா, வேண்டாமா என்பது பற்றி தனது ஆலோசகர்களுடன் நவாஸ் ஷெரீப் தொடர்ச்சியாக இரு நாளாக தீவிர ஆலோசனை நடத்தினார். இதன் முடிவில், நவாஸ் டில்லி செல்வார் என்பதை பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் உறுதி செய்தது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு பிரதமரின் சகோதரரும் பஞ்சாப் மாகாண முதல்வருமான ஷாபாஸ் ஷெரீப் இராணுவத் தளபதி ரஹீல் ஷெரீபுடன் அரை மணி நேரம் ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து, இந்தப் பிராந்தியத்தில் அமைதி நிலவிடவும் இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தவும் இந்தியாவுக்குச் செல்வதன் முக்கியத்துவம் பற்றி பிரதமரிடம் எடுத்துரைக்கப்பட்டது என நவாஸின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.
இந்தியாவில் இருந்து கிடைத்த நிகழ்ச்சி நிரல்படி, நவாஸ் ஷெரீப் நாளை பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்துவார். குடியரசுத் தலைவரையும் சந்திப்பார். திட்டமிட்டபடி சந்திப்பு முடிந்ததும் பிற்பகல், நவாஸ் பாகிஸ்தான் திரும்புவார் என வெளியுறவு அமைச்ச[illegible] இஸ்லாமாபாத்தில்வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## ரஜினியின் சுவரொட்டிகளால் சென்னையில் பெரும் பரபரப்பு

சென்னை,மே 26
சென்னையில் ரஜினி ரசிகர்கள், 2016 இல் கோட்டையில் எங்கள் கோச்சடையான் ஆட்சி உறுதி என்று ஒட்டியுள்ள சுவரொட்டியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நடிகர் ரஜினி காந்த் அரசியலுக்கு வருவாரா மாட்டாரா என்ற மிகப் பெரும்கேள்விக்கு விடைகிடைக்காமல் ரசிகர்கள் விழித்துக் கொண்டு இருக்கின்றனர்.
இந்த நிலையில், தற்போது கோச்சடையான் படம் திரைக்கு வந்ததையொட்டி, மாநகரம் முழுவதும் ரசிகர்கள் சர்ச்சைக்குரிய சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.
அந்த சுவரொட்டியில், 2016 இல் கோட்டையில் எங்கள் கோச்சடையான் ஆட்சி உறுதி என்ற சர்ச்சைக்குரிய வாசகம் இடம்பெற்றுள்ளது. இந்த சுவரொட்டிகளால் சென்னை முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (கு)

## எனது உயிருக்கு ஆபத்து

### சந்திரபாபு நாயுடு கூறுகிறார்

புதுடில்லி,மே 26
எனது உயிருக்கு ஆபத்து உள்ளது. எனக்கு ஏதாவது நடந்தால், பொலிஸ்துறை தான் முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று மாநில ஆளுநர் இ.எஸ்.எல். நரசிம்மனுக்கு தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு கடிதம் எழுதியுள்ளார்.
இது தொடர்பாக இ.எஸ்.எல். நரசிம்மனை, சந்திரபாபு நாயுடு சந்தித்துப் பேசினார். அதையடுத்து சந்திரபாபு நாயுடுவுக்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.
தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகத் தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும், சீமாந்திரா மாநில முதல்வராகப் பொறுப்பேற்க உள்ளவருமான சந்திரபாபு நாயுடு, மாநில ஆளுநர் இ.எஸ்.எல். நரசிம்மனுக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில், கொல்லம் கங்கிரெட்டி உட்பட சிலரால் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
சமீபத்தில்கங்கிரெட்டியை சிலபொலிஸாரே ஹைதராபாத்தில் இருந்து வெளிநாட்டுக்குத் தப்பித்துச் செல்ல உதவி புரிந்ததால், ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் அதற்கு பொலிஸ் அதிகாரிகளே பொறுப்பு எனவும் அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (கு)

## மோடியுடன் சந்திரபாபு சந்திப்பு

புதுடில்லி,மே 26
பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியை, தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு நேற்று சந்தித்துப் பேசினார்.
மத்திய அமைச்சரவையில் தங்கள் நாடாளுமன்ற உ[illegible]பினர்களும் இடம்பெற வே[illegible]டும் என்று தெலுங்கு தேசம் கட்சி வலியுறுத்தி வரும் நிலையில், குஜராத் பவனில் இந்தச் சந்திப்பு 30 நிமிடங்களுக்கு நடந்தது.
முன்னதாக, பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்கை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்திரபாபு நாயுடு சந்தித்துப் பேசியதும் கவனிக்கத் தக்கது. மத்திய அரசில் தாங்களும் அங்கம் வகிக்கப் போவதாக தெரிவித்துள்ள நாயுடு, எத்தனை அமைச்சர்கள் பதவி கோரப்பட்டுள்ளது என்பது போன்ற விவரங்களை வெளியிடவில்லை.
தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் மத்திய அமைச்சரவையில் தெலுங்கு தேசம் கட்சி, அகாலி தளம், லோக் ஜனசக்தி கட்சி உள்ளிட்டவை இணையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
ஆந்திரத்தில் நடந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்து களம் கண்ட தெலுங்கு தேசம் கட்சி 16 இடங்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (கு)

## மன்மோகனின் காரை பயன்படுத்துவாரா மோடி?

புதுடில்லி,மே 26
கடந்த 2003 ஆம் ஆண்டு வரை அம்பாசிடர் கார் தான் இந்தியப் பிரதமரின் அதிகாரப்பூர்வக் காராகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.
தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாகப் பிரதமருக்காக அதிக பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட பி.எம்.டபிள்யூ 7 சீரிஸ் ரகத்தைச் சேர்ந்த 6 கார்கள் வாங்கப்பட்டன. பிரதமருக்குப் பாதுகாப்பு அளிக்கும் சிறப்பு கொமாண்டோ படையினருக்காக பி.எம். டபிள்யூ எக்ஸ் 5 ரகத்தைச் சேர்ந்த 12 கார்கள் வாங்கப்பட்டன.
பிரதமர் மன்மோகன் சிங் இப்போது பயன்படுத்தி வரும் பி.எம்.டபிள்யூ 7 சீரிஸ் கார் அவருக்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டதாகும்.



இதில் குண்டுகள் துளைக்காத கதவு, கண்ணாடி, கண்ணி வெடித் தாக்குதலிலும் சேதமடையாத வலுவான அடிப்புறம், ரயர்கள், குண்டுவெடிப்பிலும் தீப்பிடிக்காத பெற்றோல் தாங்கி, ஏவுகணை, வெடி குண்டுகளைக் கண்டறியும் வெப்ப சென்சர்கள், செயற்கைக் கோள் தகவல் தொடர்பு சாதனம் என பல்வேறு அதிநவீன வசதிகள் உள்ளன.
இந்தக் காரையே புதிய பிரதமராகப் பதவியேற்க உள்ள நரேந்திர மோடி பயன்படுத்துவரா அல்லது நீண்ட காலமாக அவர் பயன்படுத்தி வரும் மஹிந்திரா ஸ்கார்பியோ காரை அதிநவீன பாதுகாப்பு வசதிகள் கொண்டதாக மாற்று வாரா என்ற கேள்வி எழுந் துள்ளது.
பொதுவாக பிரதமரின் காருக்கு முன்னும் பின்னும் மொத்தம் 9 கார்கள் அணிவகுத்துச் செல்லும். இந்த அணிவகுப்பில் செல்லும் இரண்டு பி.எம். டபிள்யூ கார்கள் பிரதமரின் பி.எம்.டபிள்யூ கார் போன்றே தோற்றமளிக்கும். இதர பி.எம். டபிள்யூ. கார்களில் பாதுகாப்பு அலுவலர்கள் செல்வார்கள். இவை தவிர வெடிகுண்டு நிபுணர்கள் குழுவின் சிறப்புக் காரும் அணிவகுப்பில் இடம் பெறும்.
நரேந்திர மோடிக்காக ஸ்கார்பியோ காரில் அதிநவீன பாதுகாப்பு வசதிகளைச் செய்து தரத் தயாராக உள்ளதாக மஹிந்திரா நிறுவனம் அறிவித்துள்ளது. (கு)

## 152 இந்திய மீனவர்கள் விடுதலை; பாகிஸ்தான் நல்லெண்ண நடவடிக்கை

இஸ்லாமாபாத்,மே 26
புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கவுள்ள நிலையில் அவரது பதவியேற்பு நாளான இன்று திங்கட்கிழமை பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 152 இந்திய மீனவர்களை நல்லெண்ண அடிப்படையில் அந்நாட்டு அரசு விடுவிக்க முடிவு செய்துள்ளது.
நரேந்திர மோடி பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு அந்நாடு பதில் நட்புறவு பாராட்டும்வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.
இது குறித்து குஜராத் மாநில மீன்வளத்துறை தலைமை ஆணையர் பி.எல்.தர்பார் கூறியதாவது:-
இந்தியாவைச் சேர்ந்த 152 மீனவர்களை (பெரும்பாலானோர் குஜராத்தை சேர்ந்தவர்கள்) பாகிஸ்தான் அரசு திங்கட்கிழமை விடுவிக்க இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சகத்திடம் இருந்து தகவல் கிடைத்தது. இதையடுத்து மீனவர்களை வரவேற்பதற்காக மாநில மீன்வளத் துறை அதிகாரி[illegible] குழுவை பாகிஸ்தான்-இந்திய எல்லை அமைந்[illegible]திக்கு அனு[illegible]ங்கிருந்து [illegible] சோம்நாத் [illegible]த்தில் உள்ள வெராவல் நக[illegible]கு அவர்கள் அனைவரும் அழைத்து வரப்படுவார்கள்-என்றார் தர்பார். (கு)


பாப்பரசர்

## மத்திய கிழக்குக்கு பாப்பரசர் பயணம்

வத்திக்கான் சிற்றி,மே 26

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளார்

மூன்று நாள்களைக் கொண்ட இந்தப் பயணத்தில் நேற்று பாப்பரசர் ஜோர்தான் சென்றடைந்தார்.

அங்கு இடம்பெறும் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டதன் பின்னர் சிரிய அகதிகளைப் பாப்பரசர் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை, இந்தப் பயணத்தின்போது பாப்பரசர் பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கும் செல்கிறார்.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்கு பாப்பரசர் இந்தப் பயணத்தின் போது முயற்சி செய்வார் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (கு)

## உக்ரைன் ஜனாதிபதித் தேர்தலுக்கு கடும் எதிர்ப்பு

கிவி.மே 26

பல மாத வன்செயல் எதிர்ப்பு நடவடிக்கைகளை அடுத்து உக்ரைனின் ஜனாதிபதி விக்டோ யனுக்கோவிச்சை பதவியில் இருந்து அகற்றிய நிலையில், புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் 18 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ள்னர்.

இந்த நிலையில், உக்ரைனின் கிழக்கு பிராந்திய ரஷ்ய சார்பான பிரிவினைவாதிகள், ஜனாதிபதி தேர்தலுக்குத் தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளதுடன், வாக்களிப்புக்கு எதிராகச் செயல்படப் போவதாகவும் அச்சுறுத்தியுள்ளனர்.

கடந்த சில நாள்களில் மட்டும் பிரிவினைவாதிகளுக்கும் அரச படைத் தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களில் 20 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தம்மை ஹிட்லருடன் ஒப்பிட்ட இளவரசர் சாள்ஸின் கருத்து ஏற்றுக் கொள்ள முடியாது என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். (கு)


பாப்பரசர் பிரான்ஸிஸ் தனது மத்திய கிழக்குப் பயணத்தின் போது நேற்றுப் பலஸ்தீனத்தை அடைந்தார். அங்கு அவருக்குப் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் செங்கம்பள வரவேற்பளித்தார். அவர் ஜெருசலேமுக்கும் சென்றார். (கு)

# சோமாலிய நாடாளுமன்று மீது ஆயுததாரிகள் நேற்று தாக்குதல்

### 18 பேர் உயிரிழப்பு; எம்.பி. உட்பட பலருக்குக் காயம்

மொஹாடிசு,மே 26

சோமாலியத் தலைநகர் மொஹாடிசுவிலுள்ள நாடாளுமன்றக் கட்டடத்தை கிளர்ச்சியாளர்கள் தாக்கியுள்ளனர்.

அல் ஷபாப் ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இந்தத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட பலர் இதில் காயமடைந்துள்ளனர். தாக்குதலின் பின்னர் சோமாலிய அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே தீவிர மோதல் இடம்பெற்றது. இதில் கிளர்ச்சியாளர்கள் பலரும் உயிரிழந்துள்ளனர்.


காயமுற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பாதுகாப்புத் தேடி ஓடுகிறார்.

1992 ஆம் ஆண்டு அரசு பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே சோமாலியாவில் புதிய அரசு பதவியேற்றிருந்தது.

பலவீனமான சோமாலிய அரசு கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போர் தொடரும் என அறிவித்திருந்த நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தை சோமாலிய அரசுப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## சிரிய ஜனாதிபதி ஆஸாத்தின் கூட்டத்தில் குண்டுத் தாக்குதல்

### 22 பேர் சாவு ; 30 பேர் வரை காயம்

டமஸ்கஸ்,மே 26

தென் சிரியாவில் அந்த நாட்டு ஜனாதிபதி பஷார் அல் ஆஸாத்துக்கு ஆதரவாக நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் மோட்டார் குண்டொன்று விழுந்து வெடித்ததில் குறைந்தது 22 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

டெரா நகரிலுள்ள கூடாரமொன்றில் ஆஸாத்தின் ஆதரவாளர்கள் கூடியபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பிரிட்டனை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் சிரிய மனித உரிமைகள் அவதான நிலையம் தெரிவித்தது. இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆஸாத் கலந்து கொள்ளவில்லை.

சிரியாவில் தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கு மேற்குலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தத் தேர்தலில் சிரிய ஜனாதிபதிக்கு எதிராக இருவர் போட்டியிடுகின்ற போதும், அவரே வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

## தென்னாபிரிக்க ஜனாதிபதியாக ஜேக்கப் ஷுமா பதவியேற்றார்

பிரிட்டோரியா,மே 26

தென்னாப்பிரிக்க ஜனாதிபதியாக ஜேக்கப் ஷுமா தொடர்ந்து இரண்டாவது முறையாகப் பதவியேற்றார்.



ஜேக்கப் ஷுமா

பிரிட்டோரியாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் அவர் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக் கொண்டார். கடந்த 5 ஆண்டுகளில் தனது ஆட்சியில் தென்னாபிரிக்கா வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் பெருமையுடன் தெரிவித்தார்.

சிம்பாப்வே அதிபர் றொபேர்ட் முஹாபே, நைஜீரிய அதிபர் ஜோனத்தான் உள்பட 4500 சிறப்பு விருந்தினர்கள் இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றனர். எனினும் ஐரோப்பா, தென்னமெரிக்க நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பதவியேற்பு விழாவில் பங்கேற்க வில்லை.

நெல்சன் மண்டேலா மறைந்த பிறகு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதல் தேர்தல் இது. கடந்த 7 ஆம் திகதி அங்கு வாக்குப் பதிவு நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. ஷுமாவின் கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. பொருளாதார நெருக்கடி, வேலையின்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் ஷுமா மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (கு)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. எல்லாவிதமான காரியங்களும் சாதகமான பலன்தரும். பணவரத்து திருப்திதரும். பக்தியில் நாட்டம் ஏற்படும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். உதவிகளைச் செய்து மனத் திருப்தி அடைவீர்கள்.



**இடபம்**: மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும். பயணாங்கள் செல்ல நேரிடலாம். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாளர்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.



**மிதுனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். குழந்தைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சி தரும்.



**கடகம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்லை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த லாபம் வரும். தொழில் போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வாக்கு வன்மையால் காரிய வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.



**சிங்கம்**: நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முயல்வீர்கள். உத்தியோகத்தில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாள்களாக முடிக்க முடியாமல் இருந்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். அரசு மூலம் நடக்க வேண்டிய வேலைகள் திருப்திகரமாக நடந்து முடியும்.



**கன்னி**: தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். தொழில் விரிவாக்கம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சினை குறையும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.



**துலாம்**: முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும்.



**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.



**தனுசு**: துக்கமும், துன்பமும் நீங்கும். தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும். தேவையற்ற மருத்துவச் செலவு ஏற்படக்கூடும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.



**மகரம்**: தொழில் வியாபாரப் போட்டிகள் குறையும். பணவரத்து இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். உறவினர்கள் வருகை இருக்கும். வெளியூர்ப் பயணங்களின்போது கவனம் தேவை.



**கும்பம்**: வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. வீண் அலைச்சலைக் குறைத்துக்கொண்டு வேலைகளில் கவனம் செலுத்துவது நல்லது. மனதில் தைரியம் தன்னம்பிக்கை உண்டாகும்.



**மீனம்**: நிம்மதியும், சுகமும் அதிகமாகும். புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செல்ல வேண்டி வரலாம். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்க பெறுவீர்கள். புத்திசாதுரியம் அதிகரிக்கும். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும்.

## நாளை

**வைகாசி-13 செவ்வாய்க்கிழமை | 27.05.2014**

திதி: சதுர்த்தசி பி.இ.12.14 வரை
நட்சத்திரம்: பரணி
பி.ப.05.34 வரை

சுபநேரம்: 10.22-11.52 வரை
இராகுகாலம்: 02.52-04.22 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## சாங்கியமும் வேதாந்தமும்

நாம், 'கருத்து, அறிவு, விவேகம், அன்பு, வெறுப்பு, தொடு உணர்ச்சி, சுவை, பொருள்' என்று சொல்லும் எல்லாவற்றுக்குமே சாங்கியத் தத்துவப்படி பிரகிருதியே காரணம். எல்லாம் பிரகிருதியிலிருந்தே வந்திருக்கிறது. சத்வம், ரஜசம், தாமஸம் என்ற மூன்று அம்சங்களைக் கொண்டது பிரகிருதி. இவை பண்புகள் அல்ல; இந்தப் பிரபஞ்சம் முழுவதும் தோன்றுவதற்குக் காரணமான மூலக் கூறுகள். ஒரு படைப்புவட்டத் தொடக்கத்தில் இவை சமநிலையில் (Equilibrium) இருக்கின்றன. படைப்புத் தொடங்கும்போது இவை பல வகையில் தமக்குள் ஒன்று கூடிப் பிரபஞ்சமாக விரிகின்றன. இவற்றின் முதல் விரிவையே சாங்கியர்கள் 'மகத்' அல்லது அறிவு என்பர். இதிலிருந்தே உணர்ச்சி (Consciousness) பிறக்கிறது. சாங்கியர்களின் கொள்கைப்படி இது ஒரு மூலக்கூறு (Element) அல்லது தத்துவம். அகங்காரத்திலிருந்து தான் மனம், பொறிகள், தன்மாத்திரைகள் (ஒலி, தொடு உணர்ச்சி முதலியவற்றின் அணுக்கள்) இவை தோன்றுகின்றன. நுண்ணிய அம்சங்கள் எல்லாம் அகங்காரத்திலிருந்தே எழுகின்றன. இந்த நுண்ணிய அம்சங்களிலிருந்தே நாம் பொருள் என்று சொல்லும் தூலப் பொருள்கள் பிறக்கின்றன. தன் மாத்திரைகளை அறிய முடியாது. இவைகளே தூலப் பகுதிகளாக மாறிய பின் இவற்றை நாம் உணரவும் புலன்களால் அறியவும் இயலும்.

## விண்வெளியில் வேற்று கிரகவாசிகளின் நடமாட்டம் குறித்து ஆய்வாளர் உறுதி



விண்வெளியில் வேற்று கிரகவாசிகளின் நடமாட்டம் உள்ளது என் பதை அமெரிக்க ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

அமெரிக்க விண்வெளி ஆய்வுக்குழுவினர் இதுதொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள ஆய்வு அறிக்கையில், கடந்த 50 ஆண்டுகளாக வேற்று கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான சான்றுகள் தொடர்பாக நடத்திய ஆராய்ச்சியில், அங்கு உயிரினங்கள் வாழ்வதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்ய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 8 | 5 | | 3 | 6 | |
| | 6 | | | | 3 | | 9 | |
| 8 | 9 | | | 6 | 1 | 2 | | |
| | | | 4 | | 5 | | 2 | 3 |
| | | 4 | | | | 8 | | |
| 6 | 1 | | 3 | | 8 | | | |
| | | 6 | 9 | 7 | | | 3 | 1 |
| | 5 | | 1 | | | | 4 | |
| | 4 | 7 | | 3 | 6 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 3 | 1 | 9 | 4 | 2 | 5 | 6 |
| 9 | 4 | 5 | 8 | 2 | 6 | 3 | 1 | 7 |
| 6 | 1 | 2 | 7 | 3 | 5 | 4 | 9 | 8 |
| 3 | 9 | 4 | 6 | 7 | 1 | 8 | 2 | 5 |
| 5 | 2 | 7 | 4 | 8 | 9 | 1 | 6 | 3 |
| 1 | 6 | 8 | 2 | 5 | 3 | 7 | 4 | 9 |
| 2 | 7 | 6 | 9 | 4 | 8 | 5 | 3 | 1 |
| 4 | 5 | 9 | 3 | 1 | 7 | 6 | 8 | 2 |
| 8 | 3 | 1 | 5 | 6 | 2 | 9 | 7 | 4 |

## கடந்த ஆண்டில் இலங்கைக்கு 1.3 பில்லியன் முதலீடுகள்

கொழும்பு, மே 26
2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 1.3 பில்லியன் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்துள்ளன என்று முதலீடுகள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.
கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை இலங்கைக்குக் கிடைத்துள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி 7,140 மில்லியன் டொலர்களாகும்.
போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரான காலப் பகுதியில் 4,311 மில்லியன் டொலர்கள் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்குக் கிடைத்துள்ளன. (ச-22)

# நூல்களின் விலையை சமப்படுத்தத் தீர்மானம்

### ஆராய்கிறது கல்வி அமைச்சு

கொழும்பு, மே 26
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்படும் நூல்கள் தனியார் வெளியீட்டு நிறுவனங்களால் வெளியிடப்படும் நூல்களை விட விலையில் கூடியதாக உள்ளன.
அதனால் தனியார் துறை வெளியீட்டு நிறுவனங்களால் வெளியிடப்படும் நூல்களின் விலைகளுடன் சமப்படுத்தி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தத் திணைக்களத்தின் அச்சீட்டுச் செலவினத்தை நூற்றுக்கு 65 வீதத்தில் இருந்து நூற்றுக்கு 50 வீதமாகக் குறைத்து விடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.
அச்சீட்டுச் செலவினத்தைக் குறைத்துவிடுவது குறித்து கல்வி அமைச்சரால் அண்மையில் அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

> தனியார் துறை வெளியீட்டு நிறுவனங்களால் வெளியிடப்படும் நூல்களின் விலைகளுடன் சமப்படுத்தி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தவிசாளர் யார் என்பது 28 இற்குள் தெரியவரும்

### மாவை எம்.பி. தெரிவிப்பு



மாவை சேனாதிராஜா

அம்பாறை, மே 26
அம்பாறை, காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் யார் என்பதை எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் அறிவிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.
இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை காரைதீவுக்குச் சென்று கட்சி முக்கியஸ்தர்களுடன் அவர் கலந்துரையாடியுள்ளார்.
எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் காரைதீவு பிரதேசசபைக்கு புதிய தவிசாளரின் பெயரை பரிந்துரை செய்யுமாறு கேட்டு அம்பாறை மாவட்ட உதவி தேர்தல் ஆணையர் திலின விக்ரமநாயக்க கடிதமொன்றை அவர் அனுப்பி வைத்திருந்தார்.
தவிசாளரின் இடத்துக்கு காரைதீவு பிரதேச சபைத் தேர்தலில் முன்னாள் தவிசாளருக்கு அடுத்ததாக கூடுதல் வாக்குகளைப் பெற்றவரையோ அல்லது கட்சி தீர்மானிக்கின்ற ஒருவரையோ நியமிப்பதற்காக பரிந்துரை செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.
பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இருமுறை தோற்கடிக்கப்பட்டதையடுத்து தவிசாளர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பதவி நீக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து உதவி தவிசாளர் தலைமையில் சபைக் கூட்டங்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.
அதனால் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள காரைதீவுப் பிரதேச சபையானது கடந்த 5 மாதங்களாகத் தவிசாளர் இன்றிய நிலையிலும் வரவு -செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படாத நிலையிலும் சீரான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இயங்கி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மலையகத்தில் மாற்றம் வேண்டுமெனில் குரல் கொடுக்கும் தலைமை வேண்டும்

### தென் மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

இந்தியாவில் இருந்து விருப்பம் இன்றி வந்த மலையக மக்கள் உரிமை இழந்து நிற்கின்றனர். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற அடிமைத்தனம் இன்றும் உள்ளது. எனவே மலையகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் மலையகமக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கக்கூடிய உண்மையான தலைமை உருவாக வேண்டும் என்று தென் மாகாணசபை உறுப்பினர் பத்தேகமசமித்ததேரர் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வெளிநாடொன்றிலிருந்து கண் வைத்தியரான எனது நண்பர் ஒருவர் மலையகத்துக்கு வந்திருந்தார். அவர் தென் பகுதித் தோட்டம் ஒன்றிலுள்ள 30 மாணவர்களுக்கு கண் பரிசோதனை செய்து விட்டு எனது வீட்டுக்கு வந்து கண்ணீர்விட்டு அழுதார். காரணம் பரிசோதித்த பிள்ளைகளின் கண்ணில் குறைபாடு காணப்படுவதுதான். சில பிள்ளைகள் கண் பார்வையற்று போகும் நிலையிலும் மூளை பாதிப்பு ஏற்படும் நிலையிலும் உள்ளதாகத் தெரிவித்தார் என்று அவர் கூறினார்.
தோட்டப் பகுதிகளில் உள்ள பிள்ளைகள் போசாக்கான உணவுகளை உண்பதில்லை. பெற்றோர் காலையில் வேலைக்குச் சென்று மாலையே வீடு திரும்புகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-10)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் மனோன்மணி ஆழ்வார்பிள்ளை



தோற்றம் : 03.10.1939
மறைவு : 26.05.2013

அம்மா ! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகிறோம்!
எம்வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்!
இறைவன் தாள்மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்.

குடும்பத்தினர்.
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(சி/4083)(7.6)

**அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மஹோற்சவகால கடைகளுக்கான ஏலம் கூறல் நிகழ்வு-2014**

மேற்படி ஆலயத்தின் இவ்வருட மஹோற்சவம் 03.06.2014 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14.06.2014 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுறும். அக்காலங்களில் குறிப்பிடப்படும் இடத்தில் கடை அமைக்க விரும்புபவர்களுக்கான ஏலம் கூறல் நிகழ்வு 01.06.2014 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆலய முன்றிலில் இடம்பெறும் என அறியத்தருகிறோம்.

தர்மகர்த்தாக்கள் சபை,
கும்பழாவளைப்பிள்ளையார் கோயில், அளவெட்டி.

**இந்தியாவில் உயர்கல்வி**
**STUDY IN INDIA**

University Grant Commission, Sri Lanka (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்ட ANNA UNIVERSITY மற்றும் PERIYAR UNIVERSITY ஆகிய பல்கலைக்கழகங்களில் பட்டதாரியாக வாய்ப்பு.

A/L'S 3 சாதாரண சித்தி + A/L English போதுமானது

**SSM COLLEGE OF ENGINEERING - ANNA UNIVERSITY DEGREE**
- B.E. Computer Science & Engineering
- B.E. Electronics & Communication Engineering
- B.E. Electrical & Electronics Engineering
- B.E. Mechanical Engineering
- B.Tech. Information Technology
- B.Tech. Textile Technology
- B.Tech. Textile Chemistry

சேலம் தமிழ்நாடு

**SSM COLLEGE OF ARTS & SCIENCE - PERIYAR UNIVERSITY DEGREE**
- B.Sc. Computer Science
- B.Sc. Bio-Technology
- B.Sc. Textile & Fashion Designing
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Maths / B.C.A. / B.Com../ B.Com (CA), B.B.A. / B.A. English

100க்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கல்விகற்ற நிறுவனம்.
**International Hostel.**
மேற்கூறிய Degree முடிப்பவர்களுக்கு எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, European Union ஆகிய நாடுகளில் PR (Permanent Residency) பெறுவதற்கான வாய்ப்பு.

**Call : 0777 - 767 818** (தமிழில்)
www.ssmce.ac.in

**SIC** No. 01, Veverset Place, Wellawatte, Colombo 06.

# நவுருதீவில் முகாமிலுள்ள 21 பேரின் அகதி அந்தஸ்து கோரிக்கைகள் பரிசீலனையில்

நவுரு தீவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் 21 பேரின் அகதி அந்தஸ்துக் கோரிக்கைகள் பரிசீலிக் கப்பட்டுள்ளதாக குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

asylum seekers குடிவரவு அமைச்சர் மொரிசன் மேற்கொண்ட அறிவித்தலின் பிரகாரம், நவுரு மற்றும் பப்புவா நியூ கினியாவின் மானுஸ் தீவில் தமது புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 70 ஐ எட்டியுள்ளது. சுமார் 250 பேர் சுயவிருப் பத்தின் பேரில் சொந்த நாடுகளுக்கு திரும்பினார்கள் என்றும், ஆஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது என்று மொரிசன் தெரிவித்தார். 'சமகால அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளதாகவும் தற்போது சுமார் 1200 பேர் மாத்திரம் உள்ளதாகவும் ஏனையோர் சுய விருப்பத்தின் பெயரில் நாடுகளுக்குச் சென்றுள்ளதாக மொரிசன் தெரிவித்துள்ளார்.

(வ)

## அருணலு பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மே 26

அருணலு திட்டத்தின் கீழ் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வர்த்தக வங்கியின் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக்கிளையில் இடம்பெறுமென வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (க)

## நைற்றா ஏற்பாட்டில் மின்னியலாளர் பயிற்சி

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் வீட்டு மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி க.பொ.த.(சா/த) வரை கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், தொலைபேசி இல, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், நைற்றா, இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (க)

**மணமகள் தேவை** யாழ்.இந்து கௌரவ குடும்ப படித்த 5' 4'' Fair, திருவோணம் கிரக பாவம் குறைந்த, 1969இல் பிறந்த, விவாகரத்தான பட்டதாரி கனடா மணமகனுக்குப் படித்த குடும்ப பாங்கான 30 - 40 வயதுக்குள் மணமகள் தேவை. சீதனம் முக்கியம் இல்லை.
(48063)(12.3.6) **தொடர்பு: email: abicanada2014@gmail.com**

**கணினி அறிவுள்ள விற்பனையாளர் தேவை**

கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு கணினி அறிவுள்ள விற்பனையாளர் தேவை. ஆரம்ப வேதனமாக ரூபா 19,000/= வழங்கப்படும். இலவசமாக தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
ஆண்கள் மட்டும் வயது 18 தொடக்கம் 22 வரை.

**தொடர்பு : கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்**
**11A-, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P : 021 222 3857** (48399) (7.6.3)

## தேர்த்திருவிழா

நவாலி, மே 26

ஆனைக்கோட்டை, கரைப் பிரான் ஆதி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. காலை 9 மணிக்கு இடம் பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். நாளை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (வ-100)

**கொள்வனவு** உங்கள் இடங்களில் உள்ள பழைய பத்திரிகைகள், புத்தகங்கள், கொப்பிகள், காட்போட், பிளாஸ்ரிக் என்பனவற்றை பணம் கொடுத்து வேண்டுகிறோம்.
தொடர்பு: **077 418 0185**

**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வேலையாள்கள் தேவை.
★Bus Booking ★Parcel Service
T.P: **077 573 6003**

**மணமகள் தேவை**
16.12.1978 இல் பிறந்த கனடா பிரஜாவுரிமை பெற்ற திருமணமாகி மனைவி இறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: **077 851 7921**

**வாடகைக்கு**
வடமராட்சியில் கட்டட வேலைகளுக்கான (Adjustable Jack's) முட்டு வேலைகளுக்கான Jacks, Scaffolding Set என்பன வாடகைக்குண்டு.
தொடர்பு: **077 756 1341**


**NEW MASTER INSTITUTE**
(மனோகரா தியேட்டர் அருகே)
2014 - துரித மீட்டல்
English / Tamil medium
CHEMISTRY / BIOLOGY
2000 முதல் 2013 வரையிலான விசாகா, றோயல், FWC. வினாத்தாள்களைச் செய்து பார்க்கலாம் - விடைகள் தரப்படும்.
2000 - 2013 அரச பரீட்சை வினாப்பகுப்பும் விடையும் தரப்படும்.
(48302) (12.3.6) **தொடர்பு: வித்யா 071 773 0840**

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி முதல்வர்**
**சூரியகுமாரி ஜெயவீரசிங்கம்**
**அவர்களின் மணிவிழா கலந்துரையாடலுக்கான**
**அறிவித்தல்**

மேற்படி கலந்துரையாடல் கல்லூரி மண்டபத்தில் 2014.05.30 வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.
பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் கலந்துகொண்டு தங்கள் ஆதரவை நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

-மணிவிழாக் குழு-

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் விஸ்வலிங்கம்
### (விஸ்வப்பா)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் விஸ்வலிங்கம் 23.05.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- செல்லாச்சி தம்பதியரின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- ஆச்சிமுத்து தம்பதியரின் அன்புமருமகனும், பாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி நல்லம்மா மற்றும் பரமநாதன் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (ஆசிரியர்), மகாலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், யோகலிங்கம் (சொக்கன் -ஜேர்மனி), சந்திரமதி(சுவிஸ்), உதயகுமார்(ஜேர்மனி), தபோதினி (சுவிஸ்), ரமேஸ்குமார்(கனடா), செந்தூரன்(கனடா), நவரத்தினம்- வதனி, அரியரத்தினம், தயாரூபன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருந்ததி, சிவகுமார், விஜயேஸ்வரி, நகுலேஸ்வரன், செந்தூரன் -கவிதா, ரமேஸ்குமார்-கவிதா, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அப்புத்துரை, மற்றும் இராஜபூபதி, நாகம்மா, தங்கராசா, செல்வராணி, ப.புவனேஸ்வரி, க.செல்வராணி ஆகியோரின் மைத்துனரும், மு.அரியரெத்தினம், தேவிபராசக்தி, சின்னராசா, சந்திரன், சரோஜாதேவி ஆகியோரின் அன்புச்சகலனும், திவாகர், பிரசாந், நிதர்சன், சாயினி, அனோஜ், பிரிந்தா, கௌசிக், கஜேந்தர், விபூசனா, விபூசனன், லேனுகா, கிஜானி, சுஜானி, சரண், யதுசா, மிதுசா ஆகியோரின் பாசமிகு பேரனும், பொ.உருத்திரன், தெ.கருணாநிதி, மா.வசந்தமலர், பொ.மனோகரன், பொ.ரவீந்திரன் ஆகியோரின் அன்பு தாய்மாமனும், க.தமயந்தி, இ.ஜெயந்தி, காலஞ்சென்ற ஜெ.சாந்தி மற்றும் ப.விஜயச்சந்திரன், வசந்தி, கௌரி, சியாமளா, றஜனி, ரேனுகா, நிர்மலா, மஞ்சுளா, துஷ்யந்தி ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2014) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
T.P: 077 636 6081

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

## மோ.சைக்கிளில் பயணித்த இளைஞன் தூக்கி வீசப்பட்டு காயம்

மோட்டார் சைக்கிள் சில்லு வீதியில் காணப்பட்ட குழி யில் இறங்கியதால் தூக்கி வீசப்பட்ட இளைஞரின் தலைமீது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஏறியது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி டச்சு வீதியில் இடம்பெற்றது.

காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த சிவராசா துவான்சன் (வயது-22) என்பவர் தனது சகோதரியின் மோட்டார் சைக்கிளில் பயணித்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரில் குன்றும் குழியுமாக காணப்படும் டச்சு வீதியை புனரமைத்துத் தருமாறு வீதியில் வசிப்போரும், வீதியைப் பயன்படுத்துவோரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை. வீதியில் காணப்படும்குழிகளால் மாணவர்கள் உட்படப் பலர் வீழ்ந்து காயமடைவதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர். (வ-9)

# கற்றல் களத்தில் கிடைக்கும் வளங்களை மாணவர் உரிய முறையில் பயன்படுத்துக

## வடமாகாணக் கல்வி அமைச்சர் வலியுறுத்து

தென்மராட்சி, மே 26

கற்றல் களத்தில் கிடைக்கும் வளங்களை திறமையான முறையில் பயன்படுத்த மாணவர்கள் முயலவேண்டும். மாணவப் பருவத்தில் ஒவ்வொரு மாணவரின் திறமைகளை மேம்படுத்த கல்வித் திணைக்களத்தினரால் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பயிற்சிகள் கல்விக் காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் பயன் பெற முடியும். இவ்வாறான பயிற்சிகளை மிக விரைவாக கிரகித்து மேற்கொண்டால் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த சாதனையாளர்களாக வர முடியும். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா.



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த வருடம் (2015) ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான 14 நாள்கள் தொழில்வழிகாட்டல் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கான 3 நாள் செயலமர்வை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்:

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் ஒரு சிலர் பல்கலைக் கழகத்துக்கும் ஒரு சிலர் தேசிய கல்வியியல் கல்லூரிக்கும் செல்கின்றனர். ஏனையோர்தொழில் வாய்ப்புக்களின்றி வீணாக காலத்தைக் கழிக்கின்றனர்.

கல்லூரிகளில் ஒகஸ்ட் மாதம் பரீட்சை எழுதிவிட்டு வெளியேறுபவர்கள் பின்னர் அங்கு மாணவர்களாக செல்ல முடியாது. இதனால்வேறு உயர் கல்வி நிலையங்களில் தமது கல்வியைத் தொடர வாய்ப்புக்கள் உள்ளன.

அவ்வாறான உயர்கல்வியைப் பெறுவதற்கு வசதியாகவே இவ்வாறான பயிற்சிகள் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த பயிற்சிகளை பயிற்சிகளாகக் கருதாது வாழ்வின் எதிர் காலத்துக்கான வழிகாட்டி எனக் கருதவேண்டும்.

இங்கு பயிற்சிகளைப் பெறுவோர் தமக்கு கிடைக்கும் அனுபவங்களைத் தேவைகளை தெரிவித்தால் அடுத்த ஆண்டுகளில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் புகுத்த முடியும்.

வடமாகாணத்தில் செயற்பட்டு வரும் பாடசாலைக்குள் பாடசாலை நடைமுறை விரைவில் ஒழிக்கப்படும் என்று நம்புகிறேன். பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களை தனியார் கல்வி நிலையங்களுக்கு வரச் செல்லும் செயற்பாடுகளை விரைவில் நீக்க கல்வி அமைச்சால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து மாணவர்களும் முன்னைய காலங்கள் போன்று பாடசாலைக் கல்வியுடன் உயர்கல்விக் கூடங்களுக்குச் செல்லும் நிலை வருமென நம்புகிறேன்"-என்றார். (வ-9)

## பாரதி மகளிர் இல்லத்துக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

வலி. வடக்கு, மே 26

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக அறப் பணிகளின் கீழ் வழங்கப்படும் உதவி திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு முள்ளிய வளையில் உள்ள பாரதி மகளிர் இல்லத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்தவென 3 சைக்கிள்கள் சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் அங்கத்தவரும் வெளிநாட்டில் வசிப்பவருமான எஸ்.ரமணன் என்பவரின் உதவி மூலம் அவை வழங்கப்பட்டுள்ளன.



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளில் இதுவரையில் 83 சைக்கிள்களை வன்னி உட்பட பல இடங்களிலும் பாடசாலை மாணவர்களின் அடிப்படைத் தேவை கருதி யும் ஏனைய நிறுவனங்கள் ரீதியாகவும்வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)

## மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் பூநகரியில் வெள்ளியன்று ஆரம்பம்

பூநகரி, மே 26

பூநகரி பிரதேச மாற்றுத் திறனாளிகளின் சம்மேளனம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட குடும்ப புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட கூட்டம் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் குடும்ப புனர் வாழ்வு நிறுவனத் திட்டப் பணிப்பாளர் கே.பிரேம்குமார், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் செ.சுரேந்திரா உட் பட பூநகரி பிரதேச மாற்று வலுவுள்ளோர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண் டனர்.

கிளிநொச்சி மாவட்ட குடும்ப புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்டன.

நடப்பு வருட நிர்வாகிகளாக தலைவர் திருமதி ம.வனிதா, உப தலைவர் செ.சதீஸ்கு மார், செயலாளர் திருமதி பொ.சத்தியப்பிரியா, உதவிச் செயலாளர் வி.உமாபரன், பொருளாளர் பா.சிவநந்தகுமாரி மேலும் ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பட்டது. (வ-9)

## தென்மராட்சி வலய சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்

தென்மராட்சி, மே 26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிக்கு 200 மாணவர்களுக்கு கீழ் உள்ள பாடசாலைகள், 201 இற்கும் 500 இற்கு இடைப்பட்ட மாணவர்க ளைக் கொண்ட பாடசாலை கள் 501 இற்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டன. போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

தரம் 6

வகை I

எம். ரபின்சன் - மீசாலை விக்னேஸ்வரா ம.வித்தி., எம்.சரத் -மறவன்புலோ சகலகலாவல்லி வித்தி., எஸ்.ஹம்சனா-மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.

வகை II

எம். கோசயன் - மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோத ம.வித்தி., ரி.ஆர்த்திகா- மிருசுவில் அ.த.க.பாட., வீ.குணதீபன்-கைதடி விக்னேஸ்வரா வித்தி.

வகை III

கே.பிரதாப்-வரணி மத்திய கல்லூரி, கே.கவிசனா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, வி.சுபைதா-நாவற்குழி ம.வி.

வகை IV

எம்.வீணஜா, ஆர்.தவினுகன் , எஸ்.கஜந்தன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம்7

வகை I

ஆரணி-கைதடி நுணாவில் அ.த.க.பாட.,எஸ்.சுவர்ணா - மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., ரி.துஷானா-மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.,

வகை II

ஜ. விதுரன்-விடத்தற்பளை கமலாசனி வித்தி., ரி.யதுகோபன் -மிருசுவில் அ.த.க. பாடசாலை.

வகை III

எஸ்.துலாஞ்சலி, பீ.சோபிகா, பீ.மதுசிகா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

வகை IV

எஸ்.காதம்பவி, வீ.அபர்ணன், எஸ்.சுருதி -சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் 8

வகை I

பீ.பவிநயா, வீ.பிரியங்கா, வை.கோபிசன்-மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.

வகை II

என்.விசாகன்-உசன் இராமநாதன் ம.வி., பீ.விதுர்சன் -கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., வை.வைஷ்ணவி -உசன் இராமநாதன் ம.வி.

வகை III

கே.கவினா, ரி.அசோகன் -மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, ரி.சர்மிகா- கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

வகை IV

ஆர்.லக்ஸாயினி , எஸ்.அருஜன், எம்.சந்தரபவன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் 9

வகை I

எஸ்.சன்சிகா-மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., கே.சர்மினி-மந்துவில் ஶ்ரீபாரதி வித்தி., கே.மதுஷன்-கைதடி நுணாவில் அ.த.க.பாட.,

வகை II

ரி. ஜீவிதா - மிருசுவில் அ.த.க.பாட., ரி.சஜீகா, வி.சியாமினி.-மட்டுவில் கமலாசனி வித்தி.

வகை III

கே.தர்மிகன்-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, பி.கார்த்திகா- வரணி மத்திய கல்லூரி, எஸ்.யாதவன்- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

வகை IV

ரி.தரணிகா, எஸ்.டனுஷன், ஏ.கீர்த்தனன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் 10

வகை I

எஸ்.நிஷானி, எஸ்.கஜானன், எஸ். சர்மிலன் - மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.,

வகை II

ஏ.பிரியந்தினி-கைதடி முத்துக் குமாரசாமி ம.வி., எம்.மாதுமை- கச்சாய் அ.த.க.பாட., கே.லகீசனா-கைதடி விக்னேஸ்வரா வித்தி.

வகை III

கே.கவிப்பிரியா-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, எஸ். சுபாசன்-நாவற்குழி ம.வி., பீ.சங்கீதன் -மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, யு.சுலக்ஸன்-கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

வகை IV

கே.கம்சிகா, எஸ்.சுலோஜிகா, எம்.பானுஜன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் 11

வகை I

பி.சாருஜா -கைதடி நாவற்குழி அ.த.க.பாட. என்.பவித்ரா- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி., டீ.மேரிசிந்துஜா- மிருசுவில் றோ.க.த.பாட.,

வகை II

கே.லிரூஜனன், ரி.சதுலக்ஸன், எஸ்.சௌந்தஜித்சாமினி-விடத்தற்பளை கமலாசனி வித்தி.

வகை III

இ.பாசுபதன்-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, ஜெ.யதுர்சனா-நாவற்குழி ம.வி., எஸ். அம்சா-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

வகை IV

ஆர். லிகானி, எஸ்.இளங்குமரன், எம்.கீர்த்தனன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தரம் 12,13

வகை I

ஜே.குயின்சிகா - மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

வகை II

எஸ்.கோமதர்சன்- உசன் இராமநாதன் ம.வி., டிஜெனி தா, ரி. நிலோஜினி - மட்டுவில் சந்திர புரஸ்கந்தவரோதய ம.வி.

வகை III

என்.கோபினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி, ரி. பிரசாயினி - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, எஸ். துஜீபன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.கல்லூரி.

வகை IV

கே.தேனுஜா, ஜே.திவ்யா, பீ. கிருத்திகா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(வ-9)

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கரத்தினம் கிருஷ்ணசாமி

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் கிருஷ்ணசாமி 24.05.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வசிகரலிங்கம் மற்றும் தனஞ்சயன் (கனடா), சிறிகாந்த் ஆகியோரின் அன்புத் தாயும், கஜானி (கனடா), குந்தவி ஆகியோரின் அன்பு மாமியும் தஸ்வின், அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தில்லையம்பலம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2014) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிறிகாந்த் - மகன்

இடைக்காடு, அச்சுவேலி. (48480) (3,6,4) 077 710 9563

## மரண அறிவித்தல்

### பரராஜசிங்கம் குலராஜசிங்கம்

யாழ்ப்பாணம், அரசடி வீதி கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் குலராஜசிங்கம் நேற்று (25.05.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் குணபாக்கியலக்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும், விஜயலக்சுமி, இராஜலக்சுமி, குகராஜசிங்கம் (சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்.), ரவிராஜசிங்கம், ஜெவிராஜசிங்கம், தர்ஜலக்சுமி, விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகுணதாசன், சுதாகரன், பாலஜிதா, நிமலி, நிரோஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுலக்ஷி, ஜொஜினா, திவிஷா, கேஷிகா, மிரேஷ், நிவாஷன் ஆகியோரின் மாமனாரும், பிரிவிஷா, ஹர்ஷா, ராஹவ், அஷ்விகா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2014) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
யாழ்ப்பாணம்.)

170, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



### திருமதி. மகேஸ்வரி- முத்தையா (MAN)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது வவுனியா, வெளிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. மகேஸ்வரி முத்தையா இன்று (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்தையா (MAN) வின் அன்பு மனைவியும், விஜயமோகன், விஜயமாலா, விஜயமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநாவுக்கரசு (கனடா), பொன்னுத்துரை (கனடா) ஆகியோரின் சகோதரியும், பேரின்பராசா, இராசேந்திரன், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜயரூபன் (அமெரிக்கா), விஜயறமணி, பாலமுகுந்தன், சுமித்திரா (கனடா), கீர்த்தனா, சஞ்சயன், பிருந்தனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2014) திங்கட்கிழமை, நண்பகல் 12.00 மணியளவில் வெளிக்குளம் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வெளிக்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெளிக்குளம் வவுனியா
0242225892

தகவல்:
குடும்பத்தினர்.

## உடன் தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய கொப்பி, புத்தகங்கள், பத்திரிகைகள், காட்போட் மற்றும் பழைய பிளாஸ்ரிக் வகைகள் உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக் கொள்கின்றோம். (48651) (30)

தொடர்புகளுக்கு: 077 078 9476

## மரண அறிவித்தல்



### திருமதி. இராசம்மா - சோமசுந்தரம்

இளையதம்பி வீதி, மீசாலையைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா - சோமசுந்தரம் கடந்த (21.05.2014) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவன் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், புஸ்பலதா (முன்பள்ளி ஆசிரியை), ரவி, நிஷான், திலகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாதரன், பவானி, நந்தினி, இளங்கோ ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுஷன், சஜீனா, ஸ்ரெபனி, சோபி, கெவின் றோஸ், பூமிகா, பிரணவன், திலக்ஷி, ஹரிணி, விஷாலி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2014) திங்கட்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக் கத்துக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18, இளையதம்பி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு எஸ். சுகந்தன் அவர்களின் பாசமிகு தந்தையார் சிற்றம்பலம் செல்வநாயகம் அவர்கள் (24.05.2014) அன்று இறைபதம் அடைந்தமையை முன்னிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர், கல்வி சாரா ஊழியர்கள், நலன்புரி சங்கம்**
**யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்



### தேவசகாயம் தேவராஜா

மகளிர் கல்லூரிக்கு முன்பாக, தபால் நிலைய வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட தேவசாகாயம் தேவராஜா நேற்று (25.05.2014) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகளிர் கல்லூரி முன்பாக,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
பேரின்பராஜா பவி
(சகோதரி)

## நான்காம் ஆண்டு நினைவு நாள்

### அமரர் கதிரவேலு மயில்வாகனம்
### (ஓய்வூதியர் புகையிரத திணைக்களம்)



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 1941 | 2010 |
| 08 | 06 |
| 01 | 09 |

சிறப்புடன் சீராக நாம்வாழ
சிறந்த வழிகாட்டியாய் இருந்தவரே!..
அன்றைய உம் கனவுகள் ஒவ்வொன்றும்
இன்றைய நம் வெற்றிப்படிகளாக...
நீர் அமைத்த வெற்றிப்பாதையில்
நாம் மட்டும் தனியாக
உம் பிரிவுத்துயருடன்........

உம் ஆத்ம சாந்திக்காய் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சிவன் வீதி, மட்டுவில்
தெற்கு, சாகவக்சேரி

குடும்பத்தினர்.

# ராஜபக்ஷவின் வருகைக்கு பாரதிராஜா கண்டனம்

இந்தியாவின் 15 ஆவது பிரதமராக பதவியேற்கும் நரேந்திர மோடி இந்தநாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவோடு பதவியேற்கும் இந்நிகழ்வில் எங்களின் மகிழ்வை குலைக்கும் வகையிலும் இந்த அரசின் மேல் நம்பிக்கையின் மையை ஏற்படுத்தும் வகையிலும் லட்சக்கணக்கான எங்கள் தொப்புள் கொடி உறவுகளை கொன்று குவித்த ராஜபக்ஷவை இந்நிகழ்விற்கு அழைத்திருப்பது கண்டனத்திற்குரியது என்று திரைப்பட இயக்குநர் பாரதி ராஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதிதாக அமையவிருக்கும் அரசின் அதிகாரப் பூர்வமான முதல்நாள் நிகழ்விலேயே ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்வுகளை உதாசீனப்படுத்தியும் அவமதிக்கும் வகை யிலும் சர்வதேச விசாரணையை எதிர்நோக்கியிருக்கும் ஒரு போர்க் குற்றவாளியை அழைத்திருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது.

நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் ஒட்டு மொத்த பிரதிநிதியாக 37 உறுப்பினர்களை கொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர் தன் எதிர்ப்பையும் கடும் கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறார். அதேபோல் அனைத்து தமிழர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் தி.மு. க. தலைவர் கருணாநிதி, ம.தி.மு.க. செயலர் வைகோ, மருத்துவர் ராமதாஸ் போன்ற தமிழகத்தின் அனைத்து தலைவர்களும் கட்சி வேறுபாடுகளின்றி தங்களுடைய எதிர்ப்பை தெரி வித்திருக்கிறார்கள்.

இந்த அனைத்து எதிர்ப்புகளுக்கும் மேலாக ராஜபக்ஷ இந்நிகழ்வில் கலந்து கொள் வது என்பது தமிழக சட்டமன் றத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான பல தீர்மானங்களை அவமதிக்கும் செயலாக உள்ளது.

எட்டு கோடி தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் உடனடியாக ராஜபக்ஷவின் வரு கையை ரத்து செய்ய வேண்டும். அதுவே மோடி அவர்கள் தமிழக மக்களுக்கு செய்யும் முதல் நற்செயலாகும். மேலும் மத்தியில் புதிதாக அமையவிருக்கும் அரசுக்கும் தமிழகத்துக்கும் நல்லுறவை வலுப்படுத்தும்"- என்றுள்ளது. (வ)

## மஹிந்தவை அழைப்பதை தவிர்த்திருக்க வேண்டும் ஜி.கே.வாசன் கருத்து

நரேந்திர மோடி பதவி ஏற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை அழைப்பதை தவிர்த்திருக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

பிரதமர் பதவியேற்பு விழாவை கடந்த காலங்களில் நடை பெற்றது போல் எளிமை யாகவும், இனிமையாகவும், சர்ச்சைக்கு இடமில்லாமலும், ஆடம்பரம், ஆரவாரம் இல்லாமலும் நடத்தத் திட்டமிட்டிருந்தால் நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

பதவியேற்பு விழாவுக்கு சார்க் நாடுகளுக்கான அழைப்பு என்றபோர்வையில் இலங்கை அதிபர் ராஜபக்ஷவுக்கு அழைப்பு அனுப்பியிருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

இலங்கை தமிழ் மக் கள் அந்த நாட்டு அர சால் படுகொலை செய்யப்பட்டதும், அதனை தொடர்ந்து இன்றும் இலங்கைத் தமிழ் மக்கள் நிம்மதியின்றி வாழ்வுரிமை மறு க்கப்பட்டு வரும் சூழலிலும், தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டு வரும் நிலையிலும், தமிழக மக்களின் எண்ணங்களை மனதில் கொண்டு இலங்கை அதிபர் ராஜபக்ஷவை அழைப்பதை தவிர்த்திருக்க வேண்டும்.

ராஜபக்ஷவின் செயல்களை நியாயப்படுத்தும் வகையில் புதிய அரசு பதவியேற்பு விழாவில் விருந்தினராக அவரை அழைத்திருப்பது, தமிழக மக்களுக்கு வருத்தம் அளிக்கிறது.- என்றுள்ளது. (வ)

# அரசின் தீர்வை ஏற்காவிட்டால் பேசாமல் இருங்கள்

## தமிழ்க் கூட்டமைப்புக்கு அமைச்சர் விமல் கூறுகிறார்

கொழும்பு, மே 26

அரசின் பாவச் செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சியினால் நிறைவேற்றப்பட்ட 12 தீர்மானங்கள் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியிருந்த நிலையில், நேற்று அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.



இதற்கிடையில் இந்த செய்தியாளர் சந்திப்பின்போது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் கருத்து வெளியிட்டார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளிநாடுகளிடம் இருந்து தீர்வினைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறது.

ஆனால் அரசு வழங்குகின்ற தீர்வை பெற்றுக்கொள்ள மறுக்கிறது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசு வழங்குகின்ற தீர்வை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், தமிழ் தேசிய கூட்டமைப்பு தீர்வினை கோராமல் இருக்க வேண்டும் என்று அவர் தெரி வித்துள்ளார்.

(த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### புலம்பெயர்

இவர்களின் எல்லா நிதிகள், ஏனைய நிதிச் சொத்துகள், பொருளாதார வளங்கள் என்பவற்றை முடக்கும் வர்த்தமானி அறிவித்தலையும் இலங்கை அரசு விடுத்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு நிதியளிப்போர் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1373 தீர்மானத்துக்கு அமைய வர்த்தமானியில் பெயரிடப்பட்ட இந்த அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் சொத்துக்களையே முடக்குவதாக அரசு அறிவித்துள்ளது.

இந்தத் தடை அறிவிப்பை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்ட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இதற்கான வர்த்தமானி அறிவிப்பை கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய பயங்கரவாதத்துக்கு நிதியளிப்போர் என்று பிரகடனப்படுத்தப்பட்ட, அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் எல்லாச் சொத்துகள் மற்றும் நிதிகள், பொருளாதார வளங்கள், அவர்களினால் சட்டரீதியாக நியமிக்கப்பட்டவர்களின் வசமுள்ள சொத்துகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான உத்தரவு மத்திய வங்கியின் பொருளாதாரப் புலனாய்வுப் பிரிவினால், சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளுக்கும் குறிப்பாக வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-5)

### மலேசியாவில்

சந்தேகிக்கப்படும் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, மலேசிய பொலிஸ் மா அதிபர் தன் சிறி காலித் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

பெட்டலிங்ஜாயா மற்றும் களாங் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட சோதனையின் போது இவர்கள் பிடிபட்டுள்ளனர்.

2004ஆம் ஆண்டு தொடக்கம் இவர்கள் மலேசியாவில் அகதிகள் என்ற போர்வையில் வசித்து வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

உலகெங்கும் திரட்டப்படும் நிதியைக் கொண்டு இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உயிர் கொடுக்க முனைந்ததாகவும் மலேசிய பொலிஸ் கூறியுள்ளது.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் என்று தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் மூவரும் குடிவரவுச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் புலிகளின் வான் புலிகளின் பிரதித் தலைவர் என்றும், மற்றொருவர் புலனாய்வுத் தலைவர் என்றும் மூன்றாமவர் ஊடக விவகாரத் தலைவர் என்றும் 'மலேசிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மூவரும் 30 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

இவர்கள் இலங்கை அரசின் தடைப் பட்டியலில் இடம்பெற்றவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (த)

### இல்லாத

விடுவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்கு இந்தியா சென்றுள்ள மஹிந்த இந்த உத்தரவை விடுத்துள்ளார்

இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு இலங்கை ஜனாதிபதி உத்தரவு என இந்திய ஊடகங்கள் முக்கிய செய்தியாக இந்தத் தகவலை நேற்று வெளியிட்டன.

ஆனால் இலங்கைச் சிறைகளில் இந்திய மீனவர்கள் எவரும் தடுப்பில் இல்லை. பரஸ்பர அடிப்படையில் கடந்த மாதமே மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். அதன் பின்னர் மீன்பிடித் தடைக் காலத்தால் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வரவில்லை. இதனால் மீனவர்கள் கைது எதுவும் இடம்பெறவில்லை.

சிறையில் இல்லாத மீனவர்களை விடுவிக்குமாறு மஹிந்த உத்தரவிட்டுள்ளமை அரசியல் நோக்கத்துக்காக மட்டுமே. நரேந்திர மோடியின் ஆதரவையும் தமிழகத்தில் மீனவர்களின் ஆதரவையும் பெறுவதற்கு இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை - இந்தியா மீனவர்களுக்கிடையிலான அமைச்சின் ஆலோசகர் எஸ்.பி. அந்தோனிமுத்துவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது.

ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றிலும் தவறானது. இந்திய மீனவர்கள் எவரும் சிறையில் இல்லை. ஆனால் போதைப் பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய 14 இந்தியர்கள் மட்டுமே சிறையில் உள்ளனர்.

ஆனால் ஜனாதிபதியின் இந்திய பயணத்தைத் தமிழகத்தில் உள்ள மீனவர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். மீனவர்களின் பேச்சுக்கு ஒரு சந்தர்ப்பமாக இது அமையும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இரு நாட்டு அரச தலைமைகளும் மீனவர் பிரச்சினையைப் பேசவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

இதனைவிட தமிழகம் மற்றும் ஆந்திரா சிறைகளில் உள்ள 68 இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார். (த-14)

### மீனவர்

குறித்து போஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தீர்க்க முடியாத பிரச்சினையாக உள்ளது. இலங்கையில் இனப்பிரச்சினை ஏற்பட்ட பின்பு பாக்குநீரிணை கடல் பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழப்பு, படகு மூழ்கடிப்பு போன்ற இன்னல்களுக்கு உள்ளாகினார்.

இவ்வாறு தொடர்ந்த இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்குப் பின்பு தற்போது அரசின் 45 நாள் மீன்பிடித் தடைக் காலம் நடைமுறையில் இருக்கின்றது. தடைக் காலம் முடிந்து பல லட்சம் ரூபா செலவு செய்து கடலுக்குச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையின் தாக்குதல் இல்லாமல் நிம்மதியாக மீன்பிடிக்க வேண்டும் என்றால் நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்கும் விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவேண்டும். அப்போது தான் இந்திய, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையை இரு நாட்டுத் தலைவர்களும் பேசி நல்ல முடிவு எடுப்பார்கள்.

மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகள் அரசியல் இலாபம் தேடாமல் மீனவர்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். தமிழக முதல்வர் இரு நாட்டு மீனவர்களின் பேச்சுக்கு ஏற்பாடு செய்ததே ஒரு வெற்றி தான். தமிழ் உணர்வு காரணமாக முதல்வர் எதிர்ப்பு தெரிவித்தாலும் மீனவர்கள் நலனில் அக்கறையுடன் உள்ளார்.

இராமேஸ்வர மீனவர்கள் இதனை வரவேற்றுள்ளனர். மோடி மகிந்தவுடன் பேசினால் தான் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை தீர்க்கப்படும் - என்றார். (த-14)

### மக்கள்

அவர் இவ்வாறு பகிரங்கமாக குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் செய்தவர்களுக்கு எங்கள் கட்சியில் இடமில்லை. ஊழல் செய்தார்கள் என்று இனங்காணப்பட்டு நீக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தினூடாக வழக்குத் தாக்கல் செய்கின்றனர். பதவிக்காக அடிபடுகின்றனர். மக்கள் எம்மைப் பதவிக்காக அடிபடுவதற்காக தேர்வு செய்து விடவில்லை. ஒவ்வொரு உறுப்பினரும் பதவி என்றதை வைத்துத்தான் பிரச்சினைப்பட்டுக் கொள்கின்றனர்.

எமக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் மக்கள் வாக்களித்தனர். அந்தக் காலத்தில் மக்கள் நம்பிக்கையை வென்று வைத்திருந்த அளவுக்கு தற்போதும் மக்கள் நம்பிக்கையை வென்று வைத்திருக்கின்றோமா என்றால் அது இல்லை. இன்னும் ஒரு வருடம்தான் உள்ளூராட்சி மன்றங்கள் இயங்குவுள்ளன. இந்த இறுதிக் காலத்திலாவது உள்ளூராட்சி மன்றத்தைப் புனிதமாக நடத்துங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றியைப் பலப்படுத்த போகின்றீர்களா? பலவீனப்படுத்தப் போகின்றீர்களா? எங்கள் கட்சியை விட்டுப் பிரிந்து சென்றவர்களுக்கு ஆயிரம் வாக்குகளே கிடைத்தன. மக்கள் அங்கீகாரம் என்பது அவர்கள் அந்தக் கட்சியின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் வெளிப்பாடு.

கடந்த மே 18 ஆம் திகதி ஆயிரம் தடைகள் வந்தபோதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்திக் காட்டினோம். அன்றைய தினம் எமது உறுப்பினர்களில் எத்தனை பேர் நினைவேந்தல் நிகழ்வுகளைச் செய்தீர்கள். உங்கள் மனதை தொட்டுச் சொல்லுங்கள். அந்த முள்ளிவாய்க்கால் மக்களை நினைவு கூராதவர்களெல்லாம் எமது கட்சியின் உறுப்பினர்களா ?.

எமது கட்சியின் உறுப்பினர்கள் பலர் தனித் தனியாகச் செயற்படுகின்றனர். கட்சியின் கூட்டுப் பொறுப்பை மீறிச் செயற்படுகின்றார்கள். தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதையே நோக்காகக் கொண்டு செயல்படுகின்றனர். இவர்கள் வேறுநபர்களின் பின்னணியில் இயக்கப்படுகின்றனர் - என்றார். (த-5)

### இலங்கைத்

சாரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. தமிழகத்தில் ராஜபக்ஷவின் வரவை எதிர்க்கும் அரசியல் கட்சிகளுக்கு மெல்ல மெல்லப் புரியவைப்போம். அவர்கள் புரிந்து கொண்டால் நாட்டுக்கு நல்லது என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா - இலங்கையின் உறவு என்பது தமிழர்கள் பிரச்சினையால் பகையாகிவிடக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகளைக் கொழும்பு, உண்மையாகவும் சுமுகமாகவும் தீர்க்கும் என்று பா.ஜ.க. கருதுகிறது. மேலும், இதற்காக அந்த அரசு முயற்சிப்பதாகவும் நம்புகிறது. இதற்கு தமிழர்களுடன் இலங்கை அரசு பேச்சு நடத்த நாம் கால அவகாசம் கொடுப்பது அவசியம்.

**டில்லிக்கும் கொழும்புக்கும் இடைவெளி அதிகரிப்பு**

ஆனால், எதிர்பாராதவிதமாக ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில், காங்கிரஸ் அரசு புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் வலையில் விழுந்து, தவறாக வழிகாட்டப்பட்டுவிட்டது. இதன் விளைவாகப் புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே இடைவெளி அதிகரித்துவிட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, அந்தத் தீர்மானத்தில் இந்தியா நடுநிலை என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்க வேண்டும். அதேசமயத்தில், இலங்கைக்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டிய அவசியமும் இல்லை. இந்த நடவடிக்கைகள் மூலம் அந்தப் பிரச்சினை கொழும்பு - புதுடில்லி - இலங்கைத் தமிழர்கள் ஆகிய தரப்புக்கு இடையில் மட்டும் இருந்திருக்கும்.

இப்போது, அந்தப் பிரச்சினையில் மற்ற உலக நாடுகளும் தலையிட வாய்ப்பாகிவிட்டது. இந்தத் தீர்மானத்தால் தமிழர்களின் பிரச்சினை சர்வதேசமயமாகிவிட்டது. இனி இதில் அநாவசியமாகப் பிரச்சினைகள் வருமே தவிர அவற்றைத் தீர்ப்பது கடினம். இதைத்தான் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சரான விக்னேஸ்வரனும், இந்தப் பிரச்சினை என்பது வட மாகாணத்துக்கும், இலங்கை அரசுக்கும் உட்பட்டதாகும் எனவும், இதில், தமிழக அரசியல் கட்சிகள் தலையீடு இருக்கக்கூடாது எனவும் கூறியிருக்கிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு காஷ்மீர் ஒரு பெரிய உதாரணம். பலஸ்தீனமும் ஒரு நல்ல உதாரணம். இது போல் பல பிரச்சினைகள் இந்த உலகத்தில் உலகமயமாக்கப்பட்டு அவை, தீர்க்கப்படாமலேயே உள்ளன.

எனவே இந்தப் பிரச்சினை இலங்கைத் தமிழர், இலங்கை அரசு மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையே தீர்க்கப்படுவதுதான் சிறப்பாக இருக்கும். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை அவர்களின் முக்கியமான விருப்பங்களின் பேரில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத் தீர்க்கப்படவேண்டும் என்பதில் இந்தியா மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறது. நாம் இலங்கையில் பிரிவினையை எதிர்க்கிறோம். இதில் மற்ற நாடுகள் தலையிடுவதையும் எதிர்க்கிறோம் - என்று தெரிவித்துள்ளார். (த-5)

### மஹிந்த

யின் பதவியேற்பு விழாவுக்கு அழைக்கக்கூடாது என்று வலியுறுத்தி, திருச்சியில் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ராஜபக்ஷவுக்கு எதிராக அவர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

கடலூரிலும் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேபோல், காரைக்குடியில் ராஜபக்ஷ மற்றும் மோடியின் உருவப் பொம்மைகளை நாம் தமிழர் கட்சியினர் எரித்தனர். அப்போது, சாயல்ராம் என்பவர் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தற்கொலைக்கு முயற்சித்தார். அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மே 17 இயக்கம் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டம் சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு அருகில் நடைபெற்றது. 2009 ஆம் ஆண்டு ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த ராஜபக்ஷவை இந்திய ஒன்றியத்துக்குள் வர அழைத்திருப்பது இந்திய ஒன்றியத்தில் வாழும் தமிழர்களை அவமானப்படுத்தும் செயலாகவே இருக்கும் என்று மே 17 இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இனப் படுகொலைக் குற்றவாளியைச் சிறப்பு விருந்தினராக இந்தியாவை ஆளப்போகும் பா.ஜ.க அழைத்திருப்பது இனப்படுகொலை குற்றவாளிகளை உலக அரங்கில் காப்பற்றும் செயலாக அமையும். இதற்காகத் தான் ராஜபக் ஷவை பா.ஜ.க. விரும்பி அழைக்கின்றதா என்ற சந்தேகம் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் மே 17 இயக்கம் கூறியுள்ளது.

கர்நாடகத்திலும் ராஜபக்ஷவுக்கு எதிராக நேற்றுப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கர்நாடகத்திலுள்ள தமிழ் அமைப்புக்களும், ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்ததைக் கண்டித்துள்ளன. (த-5)

### தமிழின

பேசிக் கொண்டிருக்கின்றனர். ஐ.நா சபையில் இதுவரை இன அழிப்புத் தொடர்பில் கொண்டு வரப்பட்ட பிரேரணைகளை நாம் பெற்றுள்ளோம். அதில் என்ன விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளனர் என்பதை ஆராய்ந்துள்ளோம்.

இன அழிப்புத் தொடர்பான பிரேரணை கொண்டு வரப்படுவதென்றால் அதற்கு நிறையத் தகவல்கள், தரவுகள் திரட்டப்படவேண்டும். அதில் ஒரு சில தகவல்களை நாம் ஏற்கனவே திரட்டியுள்ளோம். இருப்பினும் அதில் புதிது புதிதாக வரும் தகவல்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் பல தகவல்கள் திரட்டப்படவேண்டியிருக்கின்றன. அதனை திரட்டும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஐ.நா மனித உரிமைகள் சபையில் சர்வதேச விசாரணை கோரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையினாலேயே, தமிழ் மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கையில் வடக்கு - கிழக்கில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். (த-5)

### ரஜினி

யில் அவர் தேர்தலில் வென்ற பின் தனது பதவியேற்பு நிகழ்வுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த நிலையிலேயே மாணவர் அமைப்புக்கள் ரஜனி மற்றும் விஜய் வீடுகளை முற்றுகையிட்டன.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ஐ-5)

# 15 வயதுக் கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது கோப்பாய் ம.வி.

யாழ்ப்பாணம், மே 26
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியால அணி வெற்றி பெற்று சம்பயின் ஆனது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சேமஸ்கந்தக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.



கோப்பாய் ம.வி. அணி

3 செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலய அணி 2:1 என்ற செற்கணக்கில்வெற்றிபெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியை எதிர்த்து புத்தளம் றிசாத் பதியுதீன் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி 2:0 செற்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது (த-23-422-433)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 26
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில்இடம்பெற்றுவருகின்றன.

இன்று திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது மனோகரா

யாழ்ப்பாணம், மே 26
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வரு கின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

மனேகரா விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# மாவட்ட மேசைப் பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம், மே 26
சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 15வயது, 19வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

இதில் வெற்றி பெற்ற பாட சாலைகளின் விவரங்கள் வருமாறு:-

15 வயது பிரிவு ஆண்கள்
முதலாம்இடம்-ஆனைக்கோட்டை றோ.க. பாடசாலை, இரண்டாம் இடம் - யாழ். மத்திய கல்லூரி, மூன்றாம் இடம் - கொக்குவில் இந்துக்கல்லூரி, சிறந்த வீரனாக ஆனைக் கோட்டை றோ.க.பாட சாலையை சேர்ந்த துசியந்தன் தெரிவானார்.

15 வயதுப்பிரிவு பெண்கள்
முதலாம் இடம் - மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலை, இரண்டாம் இடம் - வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர பாடசாலை, மூன்றாம் இடம் - ஆனைக் கோட்டை றோ.க. சிறந்த வீராங்கனை யாக மெதடிஸ்த மகளிர் கல்லூரி உயர்தர பாடசாலையை சேர்ந்த மதுமிதா தெரிவானார்.

19 வயதுப்பிரிவு ஆண்கள்
முதலாம் இடம் - யாழ். இந்துக்கல்லூரி, இரண்டாம் இடம் -தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மூன்றாம் இடம் சுன்னாகம் ஸ்கந்த வரேதயாக் கல்லூரி. சிறந்த வீரனான யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த ஆகாஸ் தெரிவானார்.

19 வயதுப்பிரிவு பெண்கள்
முதலாம் இடம் - மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலை . இரண்டாம் இடம் - தெல்லிப் பழை யூனியன் கல்லூரி, மூன்றாம் இடம் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி. சிறந்த வீராங்கனை யாக மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலையை சேர்ந்த தாமிக தெரிவானார். (த-23)

# சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி 17 வயது கரப்பந்தில் சம்பியன்



சுழிபுரம் விக்ரோறியா அணி

யாழ்ப்பாணம், மே 26
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி அணி மோதிக்கொண்டது.

3 செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணி 2:0 என்ற செற்கணக்கில்வெற்றிபெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டதில் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி 2:1 எனற் செற்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தன தாக்கிக் கொண்டது. (த-23-422-433)

# துணைவி நியூஸ்ராரை வென்றது நாமகள் அணி

யாழ்ப்பாணம், மே 26
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.எல் விளையாட்டுக்கழகம், அராலி ஏ.எல் இளைஞர் கழகம் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.ஏல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகபிஅணியை எதிர்த்து துணைவி சென். நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'பி' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# 786 அணி சம்பியன்


வெற்றி பெற்ற 786 அணி

யாழ்ப்பாணம், மே 26
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 19அவது ஆண்டு நிறைவு, சாந்தன் யூட்கசன் ஆகியோரின் 12 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின் னொளியில் இடம் பெற்ற உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து 786 விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிப்பு உதைகள் வழங்கப் பட்டது.

இதில் 786 விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

சிறந்த கோல்காப்பளராக 786 விளையாட்டுக்கழக அணி வீரன் சிபான் தெரிவானர் சிறந்த பின்கள வீரராக 786 விளையாட்டுக்கழக அணி வீரன் மகா தெரிவானர். சிறந்த வீரனாக யுனிபைட் விளையாட்டுக்கழக அணி வீரன் தவராஜா தெரிவானர். (த-23)

# அச்சுவேலி இந்து வெற்றி


ஆட்டத்தின் ஒரு காட்சி

யாழ்ப்பாணம், மே 26
யாழ். கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடைபெறும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 2 செற்றில் 25:19, 25:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

# 15 வயதுப் பெண்கள் கபடி நாளையும் மறுதினமும்

வலி. வடக்கு, மே 26
வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடாத்தப்பட்டு வரும்மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளில் நாளையும், நாளை மறுதினமும் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடை பெறவுள்ள 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் வவுனியா கணேஸ்வரா மகா வித்தியாலயம்.

**கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இரண்டாம்சுற்றில் இருந்து வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலயமும் மோதவுள்ளது.**

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி எதிர் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

வவனியா கல்மடு மகா வித்தியாலயம் எதிர் மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு மகா வித்தியாலயம் எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

முல்லைத்தீவு கற்சிலை மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் மன்னார் கருகண்டல் றோமன் கத் தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம்.

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயம் எதிர் நெல்லியடி மத்திய கல்லூரி. கிளிநொச்சி பூநகரி மகா வித்தி யாலயம் எதிர் முல்லைத்தீவு வன்னி விளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. இரண்டாம் சுற்றில் இருந்து வவுனியா பரக்கும்பா மகா வித் தியாலயமும் மோதவுள்ளது. (த-86)

# சிக்கலில் டோனி



ஐ.பி.எல்லில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் கொல்கத்தா அணி, புள்ளிப்பட்டியலில் சென்னை அணியைப் பின்னுக்கு தள்ளியதைத் தொடர்ந்து அந்த அணிக்குப் புதிய சிக்கல் வந்துள்ளது.
ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிக்கெதிராக நடந்த போட்டியில் 15.2 பந்துப்பரிமாற்றங்களில் கொல்கத்தா வென்றால், அந்த அணி இரண்டாம் இடம் பெறலாம் என்ற நிலை இருந்தது. அதைத் தொடர்ந்து யூசுப் அதிரடி கை கொடுக்க, வெறும் 14.2 பந்துப் பரிமாற்றங்களில் 161 ஓட்டங்கள் என்ற இலக்கை கொல்கத்தா எட்டியது. இதனால், சென்னை அணி, இரண்டாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது.
ஐ.பி.எல். விதிப்படி, புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடத்தில் உள்ள அணிகள் மோதும் தகுதிச் சுற்றில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.
3ஆவது, 4ஆவது இடம் பெறும் அணிகள் மோதும் போட்டியில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதி வாய்ப்பை பெற இயலாது. இந்த அணி, தகுதிச் சுற்று 1இல் தோற்ற அணியையும் வீழ்த்த வேண்டும்.
இப்போது சென்னை அணி 3ஆவது இடத்தில் உள்ளதால், இரு போட்டிகளில் வென்றால் மட்டுமே, இறுதிப்போட்டிக்கு தகுதி பெற முடியும் என்ற சிக்கல் எழுந்துள்ளது. (கு)

# ஐ.சி.சிக்குள் சர்ச்சை


டேவ் றிச்சாட்ஸன்

ஆட்ட நிர்ணய விசாரணைகள் குறித்த தகவல்கள் ஊடகங்களில் வெளியானதையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபையில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
ஆட்டநிர்ணய விசாரணைகளுக்கு சாட்சியங்கள் வழங்கிய தகவல்கள் எவ்வாறு ஊடகங்களில் கசிந்தது எனவும் இதில் ஊழியர்கள் எவராவது சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஐ.சி.சி. விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் றிச்சர்ட்ஸன் கூறியுள்ளார்.
முன்னாள் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் ஐ.சி.சியின் ஊழல் ஒழிப்பு விசாரணைகளின் சம்பந்தப்பட்டுள்ளதாக கடந்த டிசெம்பர் மாதம் நியூஸிலாந்து ஊடகத்தினால் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த வாரம் பிரிட்டன் பத்திரிகை ஒன்றினால் முன்னாள் நியூஸிலாந்து வீரர் லூவின் சென்ட் வழங்கிய இரகசியமான அறிக்கை குறித்த தகவலும் பிரண்டன் மக்கலம் தொடர்பான தகவலும் வெளியிடப்பட்டிருந்தது.
இந்த நிலையிலேயே டேவ்றிச்சர்ட்ஸன்மேற்கண்டவாறு கூறியுள்ளார். மக்கலம் விசாரணைகளுக்குட்படவில்லை. தகவல் கசிவானது பெரும் ஏமாற்றமளிக்கின்றது. எவ்வாறு ஊடகத்துக்கு முக்கியமான தகவல்கள் வெளியாகின என கண்டுபிடிக்க விரைவான விசாரணைகளுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் முன்னெடுத்துள்ளோம். நிச்சயமாக தகவல் கசிவால் நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம்.' எனவும் டேவ் குறிப்பிட்டுள்ளார். (கு)

# தோல்விக்கு நானே காரணம்


வொட்சன்

பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் தோல்வியடைந்ததற்கு நானும் ஒரு காரணம் என அந்த அணியின் தலைவர் வொட்சன் கூறியுள்ளார்.
ஐ.பி.எல் தொடரில் மொகாலியில் நடந்த ஆட்டத்தில் ராஜஸ்தான்- பஞ்சாப் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் பஞ்சாப் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றொயல்ஸை தோற்கடித்தது.
10ஆவது வெற்றியை பதிவு செய்த பஞ்சாப் அணி இதன் மூலம் புள்ளி பட்டியலில் 20 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.
தோல்வி குறித்து ராஜஸ்தான் அணித் தலைவர் வொட்சன் கூறுகையில், திறமைகளை களத்தில் சரியாக செயல்படுத்தவில்லை. ஆடுகளம் விளையாடுவதற்கு அருமையாக இருந்தும், முதல் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறியதால் அணியின் தோல்விக்கு நானும் ஒரு முக்கிய குற்றவாளி. மேலும் ஜேம்ஸ் பல்க்னரும் (4 சிக்சருடன் 35 ஓட்டங்கள்), பிரட் ஹொக்கும் (31 ஓட்டங்கள்) ஆட்டத்தை நெருக்கிக் கொண்டு வந்தனர். அடுத்து வரும் மும்பைக்கெதிராகப் போட்டியில் எங்களது மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியாக வேண்டும் என்று கூறியுள்ளார். (கு)

# ஐ.பி.எல். வரலாற்றில் யூசுப் பதான் புதிய சாதனை

ஹைதராபாத் அணிக்கெதிராக கொல்கத்தா அணியின் வீரர் யூசுப் பதான் குறைந்த பந்தில் அரைச்சதம் கடந்து ஐ.பி.எல். வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளார்.
ஐ.பி.எல். கிரிக்கெட்டில் கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் ஹைதராபாத்- கொல்கத்தா அணிகள் மோதின.
இந்த ஆட்டத்தில் அதிரடியாக விளையாடிய யூசுப் பதான் 22 பந்தில் 72 ஓட்டங்களைக் குவித்தார். இதில் அவர் 50 ஓட்டங்களை 15 பந்தில் எடுத்து புதிய சாதனை படைத்தார்.
ஐ.பி.எல். வரலாற்றில் இவ்வளவு குறைந்த பந்தில் யாரும் அரைச் சதம் எடுத்தது கிடையாது. இதன் மூலம் அவர் கிறிஸ் கெய்ல், கில்கிறிஸ்ட் சாதனையை முறியடித்துப் புதிய சாதனை படைத்தார்.
2009ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் கில்கிறிஸ்ட் (ஹைதராபாத்) 17 பந்திலும், 2012ஆம் ஆண்டு கிறிஸ் கெய்ல் (பெங்களூர்) 17 பந்திலும் அரைச் சதம் அடித்திருந்தனர். ஆனால் இதை யூசுப் பதான் முறியடித்து 15 பந்தில் அரை சதத்தை தொட்டு சாதனை படைத்தார். (கு)

# வெளியாகியது உலகக் கிண்ண கீதம்





'பிபா' உலகக்கிண்ண 'வக்கா.. வக்கா..' பாடல் புகழ் ஷாகிரா ஆரம்பமாகவுள்ள 20 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கான கீதத்தை வெளியிட்டுள்ளார்.
வக்கா வக்கா பாடலைத் தழுவி அவரால் மீள் உருவாக்கம் செய்யப்பட்டுள்ள 'லா..லா...லா..' என ஆரம்பமாகும் இக் கீதத்துக்கான வீடியோவில் அவருடன் இணைந்து உதைபந்து நட்சத்திரங்களான லயனல் மெஸ்ஸி, நெய்மர், செர்ஜியோ மற்றும் ஷாகிராவின் கணவரும் ஸ்பெய்ன் வீரருமான ஜெராட், அவர்களது குழந்தை மிலன் ஆகியோர் நடித்துள்ளனர்.
பிரேஸிலில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச உதைபந்து சம்மேளனத்தின்(பிபா)20 ஆவது உலகக்கிண்ண தொடருக்காக உத்தியோகபூர்வ 'வீ ஆ வன் என்ற வீடியோ அண்மையில் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# வெற்றிக் கொண்டாட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்



ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வெற்றி பெற்றுள்ளது.
மொகாலியில் நடைபெற்ற நேற்றைய ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் டெல்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதனை அடுத்து துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 18.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்கள் எடுத்தது.
டெல்லி அணி சார்பில் அணித் தலைவர் பீற்றர்சன் 58 ஓட்டங்கள் குவித்தார். பஞ்சாப் அணி சார்பில் அவனா, பட்டேல், ஜோன்சன் மற்றும் கரன்வீர் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.
இதனை அடுத்து 116 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி 13.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை எட்டியது.
பஞ்சாப் அணி சார்பில் வோரா 47 ஓட்டங்களும், மில்லர் 47 ஓட்டங்களும் எடுத்தனர். சிறப்பாக ஆடி அணியின் வெற்றியை உறுதி செய்த வோராவுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. (த)



# சீற்றத்தில் பீற்றர்சன்

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் இயக்குநர் போல் டவுண்டன் தன் மீது தேவையற்ற விமர்சனங்களை எழுப்பியுள்ளார் என்று கெவின் பீற்றர்சன் கூறியுள்ளார்.
ஆஷஸ் தொடரில் 0- 5 என்று இங்கிலாந்து படுதோல்வி அடைந்ததற்கு இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் பீற்றர்சனை அணியிலிருந்து நீக்கியது.
மேலும் போல் டவுண்டன், கெவின் பீற்றர்சன் ஆஷஸ் தொடரில் ஆர்வமில்லாமல் இருந்தார் என்பது உட்பட அவரது அணுகு முறைகளை விமர்சனத்துக்கு உட்படுத்தியிருந்தார்.
இது பற்றி பீற்றர்சன் கூறுகையில், ஆஷஸ் தொடரில் நான் ஆர்வமற்று இருந்தேன் என்பது உண்மையற்ற ஒரு கூற்றாகும். அந்த சமயம் நான் முழங்காலின் காயத்துக்காக ஊசி மருந்து எடுத்துக் கொண்டிருந்தேன்.
அதனால் களத்தடுப்பில் சிறந்து விளங்க முடியாமல் போனது. என்னைப் பொருத்தவரை அந்த ஆஷஸ் தொடரில் நான் நிர்ணயித்துக் கொண்ட தர நிர்ணயங்களை எட்டவில்லை என்பது உண்மைதான்.
அதே நேரத்தில் இங்கிலாந்துக்காக ஆடுவதில் நான் ஆர்வமற்று இருந்ததாகக் கூறுவது முற்றிலும் தவறு என்று கூறியுள்ளார். (த)

# ராஜஸ்தானை 5 இலக்குகளால் வென்றது மும்பை இந்தியன்ஸ்



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் நேற்றைய லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியை 5 இலக்குகளால் வென்றது மும்பை அணி. இதன் மூலம் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றது மும்பை.
நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ராஜஸ்தான் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களாக வொட்சனும், சாம்சனும் களமிறங்கினர். ஆரம்பம் முதலே வொட்சன் பந்துகளைச் சந்திக்கத் திணறி வந்தார். ஹர்பஜன் வீசிய ஆட்டத்தின் 6ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 18 பந்துகளைச் சந்தித்து 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த வொட்சன் பொலார்ட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். 3ஆவது இலக்குக்கு கருண் நாயர் சாம்சனுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் மும்பையின் பந்துவீச்சை இருவரும் எல்லைக்கோட்டுக்கு விரட்டி ஓட்டங்களைக் குவித்தனர்.
மும்பை அணியின் கோபால் வீசிய 11ஆவது பந்துப் பரிமாற்றத்தில் நாயர் ஒரு சிக்சர், மூன்று பவுண்டரிகள் அடித்து கலக்கினார். அதே போல் ஓஜா வீசிய ஆட்டத்தின் 13ஆவது பந்துப் பரிமாற்றத்திலும் நாயர் மீண்டும் ஒரு சிக்சர், இரு பவுண்டரிகள் அடித்தார். அதிரடியாக ஆடி வந்த நாயர் பும்ராஹ் வீசிய ஆட்டத்தின் 15ஆவது பந்துப் பரிமாற்றத்தில் சிம்மன்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே சாம்சனும் 74 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இவரது ஓட்ட எண்ணிக்கையில் 3 சிக்சர்கள் மற்றும் 7 பவுண்டரிகள் அடங்கும்.
பின்னர் ஹாட்ஜும் பல்க்னரும் ஜோடி சேர்ந்து ஆடி வந்தனர். ஹர்பஜன் வீசிய ஆட்டத்தின் 18ஆவது பந்துப் பரிமாற்றத்தில் பல்க்னர் 2 சிக்சர்களை அடுத்தடுத்து விளாசினார். அதே பந்துப் பரிமாற்றத்தில் ஹட்ஜும் தன் பங்குக்கு ஒரு பவுண்டரி அடித்தார். இருவரும் அடித்து ஆடி ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்தபோது பொலார்ட் வீசிய ஆட்டத்தின் கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் 23 ஓட்டங்களை எடுத்திருந்த பல்க்னர் ஆட்டமிழந்தார். கடைசிப் பந்தில் ஹட்ஜ் பவுண்டரி விளாச நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றத்தில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 189 ஓட்டங்களை எட்டியது.
வெற்றிக்கு 190 ஓட்டங்கள் தேவை என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது.
சிம்மன்ஸ் 12 ஓட்டங்களையும் மைக்கல் ஹசி 22 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். அடுத்துக் களம் புகுந்த குரே அண்டர்சன் அதிரடிகாட்டினார். அவர் ஆட்டமிழக்காமல் 44 பந்துகளில் 6 சிக்சர், 9 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 95 ஓட்டங்களை விளாசி அதிரடி காட்டினார். இதனால் மும்பையின் ஓட்ட எண்ணிக்கை எகிறியது. பொலார்ட், றோகித் சர்மா ஆகியோர் முறையே 7, 16 ஓட்டங்களை எடுத்தனர். பின்னர் வந்த அம்பத்தி ராயுடு 30 ஓட்டங்களை எடுத்த வேளை ஆட்டமிழந்தார். குரே அண்டர்சன் தனது அபார ஆட்டத்தால் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். இதனால் மும்பை அணி 14.4 பந்துப்பரிமாற்றத்தில் தனது வெற்றி இலக்கை அடைந்தது. சிறப்பு ஆட்டக்காரராக 95 ஓட்டங்கள் விளாசிய குரே அண்டர்சன் தெரிவானார். (த)


டுபாய் நாட்டில் உள்ள முன்னணி சர்வதேச பாடசாலையில் (International School இல்) உடனடி வேலைவாய்ப்பு (LL No-1980)
* Supervisor - Male - 1500 + OT
* Cleaners - Male / Female - 1100 + OT
தகைமை - ஆங்கிலம் ஓரளவு பேசக்கூடியவராக இருத்தல், வயது 18-40, தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம். எதிர்வரும் 30ஆம் திகதி டுபாய் நாட்டவர்களால் நேர்முகப் பரீட்சை நடைபெறும். உங்கள் விண்ணப்பங்களை இன்றே E-mail இல் அனுப்பி வையுங்கள்.
சகல தொடர்புகளுக்கு:
Pan Global Recruitment (Pvt) Ltd.
No.-351/1, RA Demel M/W Colombo-03. (43319) (7.6.3)
Jaffna Lanka Voice : 077 952 7575, 077 792 9475
e-mail : sasi@yours.com, Lankavoicenafees@gmail.com

மிகப் பிந்திய அதிரடியான அபூர்வ வரவு
15 நாள்களில் - ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா உங்கள் கைகளில் கிடைக்க சட்ட சம்மந்தமான ஆலோசனை
எம்மவர்கள் பொன் குவிக்கும் வளமிக்க தேசங்களான சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, இத்தாலி போன்ற நாடுகளுக்கான.... விரைவான விசா ஆலோசனை இதுவாகும். வயதெல்லை கிடையாது. கல்வித் தராதரம் எதுவுமேயில்லை. ஆக 6 பேருக்கு மட்டுமே இவ் அரிய வாய்ப்பு.
குறிப்பு: தூதரகங்களிலேயே நேரடியாக விண்ணப்பதாரி விசா பெறுதல். இதன் மூலம் இதன் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS.
பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்...உடன் அழையுங்கள்...
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்..

அரசியல் விஞ்ஞானம்
தொடர் கருத்தரங்கு
இலங்கையின் முன்னணி ஆசிரியர்
சி.அ. யோதிலிங்கம் & K சுகாஷ்
தொடர் 01 28 - 05 -2014 2.30 P.M
♠ எதிர்பார்க்கை வினாக்கள்
♠ குறு வினாக்கள், MCQ
♠ விடை எழுதும் முறை
♠ மாதிரிப் பரீட்சைகள்
வெளி மாணவர்களும் பங்கேற்கலாம்
DCM யாழ்.நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

விற்பனைக்கு
யாழில் இயங்கி வருகின்ற பிரபல்யமான கணினி நிறுவனம் பெறுமதியான பொருட்களுடன் விற்பனைக்கு உண்டு.
மேலதிக விபரங்களிற்கு
0771553144 ...&... 0750405035
இதனை தொடர்ந்து நடத்தக்கூடிய கணினி வல்லுநர்களாக இருப்பின் விரும்பத்தக்கது.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.